# இயல் - 1

## தமிழ் இலக்கணத் தோற்றமும் வளர்ச்சியும்

மொழி இருவேறு வடிவங்களை உடையது. ஒன்று பேச்சுமொழி மற்றது பேசுபவர் கேட்பவர் ஆகிய இருவரிடையே வழங்கும் பேச்சுமொழி தோன்றிய கணத்திலேயே இறந்துவிடும் தன்மை உடையது. ஒரு மொழி அது பேசப்படுங்காலம் வரை உயிர்ப்புடையதாகத் திகழினும் ஒரு காலத்தில் பேசப்பட்ட தன்மையுடனே அது எல்லாக்காலத்திலும் பேசப்படும் எனக் கருதவியலாது. பல்வேறு பகுதிகளாக இயற்கை அமைப்பால் பிரிக்கப்பட்டுள்ள ஒரு பரந்த நிலப்பரப்பில் வழங்கி வரும் மொழி சம காலத்திலேயே ஒவ்வொரு பகுதியிலும் சில திரிபுகளைப் பெற்று வழங்கி வருதலை அறியலாம். எனவே பேச்சுமொழி மொழியிலக்கண வரைவிற்கு ஏற்றத் தரவுகளைத் தரும் ஆதாரக்களமாகத் திகழ்வதற்கான வாய்ப்பு இல்லை. எனவே தான் இலக்கியமொழியையே இலக்கண ஆசிரியர்கள் இலக்கண வரைவிற்கான களமாகக் கொண்டுள்ளனர்.

> **“இலக்கியங்கள் பல்கிப் பெருகப் பெருக அவ்விலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் உருவாக்கம் செய்யப்பெறுகிறது. மொழி பேச்சுமொழியாக மட்டுமே இருக்கும்பொழுது அதன் மொழியியல் கூறுகளைத் தொகுப்பதும், வகுப்பதும் இயலாத பணியாகும். இலக்கியம் தரவுகளின் பேழையாகத் தலைமுறைகள் பல கடந்த பின்பும் நிலையான சான்றாதாரமாக இருப்பதால் இலக்கண உருவாக்கத்திற்கு இலக்கியம் அடிப்படையாகும்”**[1]

என்ற ஆய்வாளரின் கருத்தும் இங்கு ஒப்பு நோக்கக் கூடியது.

தமிழ்மொழியின் தோற்றக் காலம் குறித்து அறியமுடியவில்லை. மிகப் பழங்காலம் முதற்கொண்டே இம்மொழி வழங்கி வருகிறது. வரலாறு அறியப்படுகின்ற காலம் முதற்கொண்டே இம்மொழியில் இலக்கியங்கள் வழங்கி வந்தமைக்கான சான்றுகள் பல உள்ளன. இத்தகு பழமையினால்தான், ‘‘என்று தோன்றினள் என்று அறியவியலாத தொன்மையள்’’ என்றும், ‘‘உடுக்களோடும் தோன்றிய மொழி’’ என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வாறு தொன்மை உடைய திருந்திய மொழியான தமிழில் நெடுங்காலத்திற்கு முன்பே இலக்கியங்கள் பலவாகத் தோன்றின. அவ்விலக்கியங்களை வகுத்தும் தொகுத்தும் முறைப்படுத்தி அவற்றின்வழி அறியலாகும் மொழிக்கூறுகளை இலக்கணமாகத் தமிழ்ப்புலவோர் படைத்தனர். இலக்கியம் என்னும் சொல்லின் பொருள் குறித்து அறிஞர்கள் பலரும் பல்வகைக் கருத்துகளை

எடுத்துரைக்கின்றனர். இலக்கியம் பற்றிய கருத்தாக ஜெர்மானிய மகாகவி கெய்த்தே,

> **“உலகம் முழுவதையும் மக்கட் பண்பினதாகச் செய்வதே இலக்கியம்”[2]**

என்றுரைக்கின்றார். ஜான்சன் என்னும் மேனாட்டறிஞர்,

> **“கற்பனையை அறிவிற்குத் துணையாகக் கையாண்டு இன்பத்தை உண்மையோடு இணைத்துக் கூறும் கலையே இலக்கியக் கலையாகும்”[3]**

என்று விளக்குகிறார்.

> **“தன்கண் அமைந்த நுவல் பொருளும் அதை விளக்கும் முறையும் பொதுவாக மக்களைக் கவரும் வகையில் அமைந்து வடிவம் இன்றியமையாததாகி அதன் வாயிலாக இன்பம் நல்குவது இலக்கியமாகும்”[4]**

என்று டபிள்யூ.எச்.அட்சன் குறிப்பிடுகிறார். இலக்கியம் என்று குறிக்கும் சொல்லாட்சியானது தமிழில் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியம் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களிலும் கையாளப்படவில்லை. அவற்றின் பின்னெழுந்த பத்தியியக்க காலத்தில் தான் இலக்கியம் என்னும் சொல்லாட்சியானது புழக்கத்தில் வந்துள்ளது. இருப்பினும் தொல்காப்பியத்தில் சுட்டப்படும் இலக்கம் என்ற சொல்லானது இலக்கியத்திற்கான அடிச்சொல்லாகவும் கொள்வர். இலக்கத்தை நோக்கியதாய் இலக்கியத்திற்குப் பொருள் வகுப்பர். ஆங்கில மொழியில் Literature என்று குறிப்பிடும் சொல்லான இலக்கியமானது தமிழில் செய்யுள் என்றும் குறிப்பிடப்படுகின்றது. நன்னூலார் இலக்கியம் என்பதற்கான விளக்கத்தை,

> ***“பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போல்பல***
> ***சொல்லால் பொருட்குஇடன் ஆக உணர்வினில்***
> ***வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்”*** ***(நன்.268)***

எனக் குறிப்பிட்டுள்ளார். இதன்வழி தொன்மைச் சொல்லான செய்யுளிற்குப் பதிலாகத் தற்காலத்தில் இலக்கியம் என்னும் சொல்லானது கையாளப்பட்டு வருகின்றமையை உணரலாம்.

**தமிழில் இலக்கியத் தோற்றம்**

தமிழ்மொழியானது காலத்தொன்மையும் இலக்கிய இலக்கண வளமும் உடைய உயர்தனிச் செம்மொழியாகும். செவ்வியல் இலக்கியங்கள் என்று போற்றப்படும் மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் முதலியன இன்று வழக்கொழிந்த மொழிகளின் வரிசையில் இடம் பெற்றுள்ளன எனலாம். ஆனால் தமிழ் மொழியானது கிடைக்கப் பெற்ற நூல்களுள் முதன்மையானதாய்க் கருதப்படும் தொல்காப்பியம் முதல் இன்று வரை

இடையறவு இல்லாது தொடரியக்கம் கொண்ட மொழியாய் விளங்கி வருகிறது. நூல் வடிவில் நமக்கு கி.மு. முதலாம் நூற்றாண்டில் தோன்றினதாகத் கருதப்படும் சங்க இலக்கியமும் அதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாகத் தோன்றினதாகக் கருதப்பெறும் தொல்காப்பிமுமே தமிழ் மொழியின் இலக்கண இலக்கியத் தோற்ற நூல்களாகக் கிடைக்கின்றன. ஆனாலும், பாட்டும் தொகையுமாய்த் திகழும் சங்க இலக்கியங்களின் காலத்திலோ இவற்றிற்கும் முன் தோன்றிய தொல்காப்பியத்தின் காலத்திலோதான் தமிழ் இலக்கியத் தோற்றம் நிகழ்ந்ததாகக் கருதமுடியாது.

தொல்காப்பியத்தில் 206 இடங்களில் ‘‘என்ப’’, ‘‘என்மனார்’’, ‘‘என்மனார் புலவர்’’, ‘‘மொழிப’’ முதலான சொற்களின் மூலம் தொல்காப்பியர், தமக்கு முன் தோன்றித் தமிழாய்ந்து இலக்கணம் படைத்த புலவர்கள் பலரின் கருத்தில் தாமும் உடன்படுவதை எடுத்துக்காட்டிச் செல்வதும், இலக்கிய வகைகள், வடிவங்கள் குறித்து விளக்கி இருப்பதும், தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர் பலரும் இயல், இசை, நாடகம் எனும் இம் முப்பிரிவிற்கும் உரியனவாகப் பற்பல இலக்கியங்களை எடுத்துக்காட்டி இருப்பனவற்றையெல்லாம் நோக்கும்போது, தொல்காப்பியத்திற்கு முன்னரே பற்பல இலக்கியங்களும் இலக்கணங்களும் தமிழில் வழங்கின என்பது தெளிவாகப் பெறப்படுகின்றன. மேலும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாய்க் கூறப்படும் தொல்காப்பியமானது, இலக்கண நூலாய்த் திகழ்வதன் மூலமாகவும் இந்நூலிற்கு முன்பாகவே பல்வேறு நுட்பமிகு பரிணாம வளர்நிலைகளும் அதன்பின் பற்பல இலக்கியங்களும் தமிழ் மொழியில் தோன்றியிருத்தல் வேண்டும் என்று துணிவது ஏற்புடையதேயாகும். இக்கருத்தினையே இரா.கண்ணன்,

> **‘‘தொல்காப்பியத்திற்கு மாற்றிலக்கணம் காணும் முயற்சி தொல்காப்பியர் காலத்திலிருந்து சற்றேறக் குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகே நிகழ்ந்துள்ளமையை நோக்க, தொல்காப்பியத்திற்கும் அதற்கு முன் வழக்கில் இருந்த இலக்கண நூல்களுக்கும் இடையில் குறைந்தது ஆயிரமாண்டுகளேனும் இருந்திருக்கக் கூடும் எனக் கொண்டால் இன்றைக்குச் சற்றேறக்குறைய நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் ஆய்ந்த இலக்கண நூல்கள் வழக்கில் இருந்திருக்கக் கூடும் என்பது புலனாம். இலக்கியங்கள் பல கண்டே இலக்கணம் கூறல் தமிழ்மொழி மரபாதலின் இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் இலக்கியத் தோற்றம் நிகழ்ந்திருக்கும் என்பதும் தெளிவுறும்’’[5]**

என்று கூறியிருப்பது நினைவு கூறத்தக்கது.

காலவெள்ளத்தால் அழிந்தன போக கிடைக்கப் பெற்றுள்ள இலக்கிய நூல்களுள் முதன்மையுடையதாய்ச் சங்க இலக்கியம் விளங்குகின்றது. அங்ஙனம் தமிழர்களின் வாழ்வியல் நெறி குறித்துப் பாடும் அகப்புற நூல்களாகிய எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகிய பதினெண் நூல்களே சங்க இலக்கிய நூல்களாவன. இச்சங்க நூல்களுக்குப் பின்னால் தமிழ் இலக்கியம் வளர்ச்சி குன்றிவிடாமல் சிறந்த வளர்ச்சி பெற்று வந்துள்ளது. சங்க நூல்களைத் தொடர்ந்து தமிழ் மொழியானது பல்வகை வடிவங்களையும் வளர்நிலைகளையும் எய்தத் தொடங்கிவிட்டது எனலாம். அவ்வகையில் நீதியினைப் பாடும் அற நூல்களான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் தோற்றத்தில் நீட்சியினையும் கதைவடிவிலான செய்யுள் நடையினையும் பெற்று விளங்கும் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களும் தோன்றலாயின. இக்காலகட்டத்தில் தமிழகத்தில் ஆட்சி மாற்றமானது நிகழத் தொடங்கிவிட்டது எனலாம். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் ஆட்சியாளர்கள் குறித்த நிலைப்பாட்டினை அறிவதற்கான சான்றாதாரங்கள் கிடைக்கப் பெறவில்லையாயினும் அவர்களைக் களப்பிரர்கள் என்றும், அக்காலத்தை இருண்டகாலம் என்றும் வரலாற்றிஞர்கள் குறிப்பிடுகின்றனர். சி.பாலசுப்பிரமணியன்,

> ***“சங்க காலத்தில் முடியுடை மூவேந்தராலும், வேளிர் முதலான சிற்றரசர்களாலும் ஆளப்பட்டு வந்த தமிழ் கூறு நல்லுலகம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் அயலார் ஆட்சிக்குட்பட்டது. சோழ நாட்டையும் பாண்டியநாட்டையும் களப்பிரர்களும், நடுநாட்டையும் தொண்டை நாட்டையும் பல்லவர்களும் கைப்பற்றி ஆண்டார்கள். …… தமிழ் இலக்கிய வரலாற்றிலே இக்காலப் பகுதியினை இருண்டகாலம் என்று குறிப்பர்”.***[6]

எனக் கூறுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

> **“தமிழ் மொழியானது இக்காலத்தில் அரசுகட்டில் இருந்திறங்கி மக்களின் கைகளில் தவழத் தொடங்கியது”**[7]

என்று கே.கே.பிள்ளை கூறுகிறார். களப்பிரர்களைப் போன்றே தமிழரல்லாத வடபுலத்தைச் சார்ந்தவர்களான பல்லவர்களின் ஆட்சியில் பல்வேறு நூல்கள் இயற்றப்பட்டன. பிற்காலப் பல்லவர்கள் தமிழ்க் கலைகளையும், இலக்கண இலக்கியங்களையும் பெரிதும் போற்றி வளர்க்கத் தொடங்கினர். அங்ஙனம் வேற்றுப்புல வேந்தர்களின் வருகையால் ஆட்சி மாற்றம், மொழிக்கலப்பு, பண்பாட்டு மாற்றம் ஆகியன நிகழ்ந்தன. அக்காலத்தில் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. வாழ்வின் பதிவே இலக்கியம் ஆதலால் அக்காலத்தில் எழுந்த கீழ்க்கணக்கு அற நூல்களுள் பலவும்

முத்தொள்ளாயிரம் என்னும் நூலும் களப்பிரர் காலத் தமிழகத்தை ஊகித்துக் கொள்ள ஒருவாறு துணைசெய்கின்றன. இந்நூல்களை அடுத்துத் தோன்றிய காப்பியங்களான சிலம்பும் மேகலையும் தமிழர் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றங்களைத் துல்லியமாகக் காட்டுகின்றன. இவ்விரு காப்பியங்களும் வலியுறுத்தும் சமண பௌத்த சமயங்கள், சங்க இலக்கியங்களிலோ தொல்காப்பியத்திலோ பெயரளவிலேனும் சுட்டப்பெறாதவை. அவ்வாறே கீழ்க்கணக்கு நூல்களுள் சுட்டப்பெறும் அறங்களுள் பல புதிய வாழ்வியல் கோட்பாடுகளைக் காட்டுகின்றன.

கீழ்க்கணக்கு நூல்கள் மற்றும் சிலப்பதிகாரம் முதலான காப்பியங்கள் சமண பௌத்த நூல்களாகவே படைக்கப்பட்டன. மன்னர்களையும் வள்ளல்களையும் புகழ்ந்து இயன்மொழி வாழ்த்தாகவே படைக்கப்பட்ட தன் உணர்ச்சிப் பாடல்களுக்குப் பதிலாக அரசன் முதல் குடியானவன் வரை ஓம்ப வேண்டிய ஒழுக்கங்களைக் கூறும் பொதுமை இலக்கியங்களாக அந்நூல்கள் படைக்கப்பட்டன. இந்நூல்களுக்குப் பின் சமணர்களையும் பௌத்தர்களையும் அடியொற்றி, சிவனடியார்களும் திருமால் அடியார்களும் தத்தம் வழிபடு கடவுளைப் போற்றியும் தத்தம் சமயக் கோட்பாடுகளை வலியுறுத்தியும் பாடல்கள் புனைந்தனர். அவ்வழியில் பக்திச் சுவை மிகுந்த செந்தமிழ்ப்பாக்கள் சைவ நாயன்மார்களால் திருமுறைகளாகவும் ஆழ்வார்களால் திவ்ய பிரபந்தங்களாகவும் தோற்றம் பெற்று பக்தி மொழியென இலக்கிய ஆய்வாளர்கள் கருதும் அளவிற்குத் தமிழ் பத்தியிலக்கியங்களைப் பெருவாரியாகப் பெற்றுள்ளது.

பத்தி இயக்கக் காலத்தைத் தொடர்ந்து புராண இலக்கியமாகவும் பிரபந்தம் என்றழைக்கப்படும் சிற்றிலக்கியமாகவும் தமிழ்மொழியானது வளர்ச்சியுற்றது. வடமொழியில் வழங்கப்பட்டு வந்த புராண இதிகாச கதைகளான இராமாயணம், மகாபாரதம், குசேலபாக்கியானம், நளவெண்பா முதலியன தமிழில் ஆக்கம் பெற்றன. புராண நூல்களைப் போன்றே தல புராண நூல்களும் வளர்ச்சியுற்றன. அதே காலகட்டத்தில் பல்வேறு வகைமைகளையும் வடிவங்களையும் உடைய சிற்றிலக்கியங்கள் பெரிதும் வளரத் தொடங்கின எனலாம். தொண்ணூற்றாறு வகைகளை உடையனவாய் முதலில் கருதப்பெற்றுப் பின்பு பல்கிப்பெருகிய இச்சிற்றிலக்கிய வகையானது குறிப்பாகக் கலம்பகம், உலா, பிள்ளைத்தமிழ், தூது, ஆற்றுப்படை, கோவை, சதகம் முதலான வகைப்பாட்டில் அதிக வளர்ச்சியுற்றன. அவ்வாறே விலாசம், மஞ்சரி முதலான வடமொழி சார்ந்த வகைகளும், பள்ளு, குறவஞ்சி,

பன்மணிமாலை, பல்சந்தமாலை முதலிய புத்திலக்கிய வகைகளும் அம்மானை, கீர்த்தனை, நொண்டிநாடகம், காதல் இலக்கியம் உள்ளிட்ட வகைகளும் செழித்து வளர்ந்தோங்கின. இவ்வாறு மரபு சார்ந்த புதிய இலக்கிய வகைகளைப் போன்றே மரபு சாராத புதிய இலக்கிய வகைகளும் தமிழில் ஆக்கப்பட்டன. இம்மரபு சாராத இலக்கிய வடிவங்களானது குறிப்பாக புராண நூல்களில் இருந்தே வழங்கப்படலாயின். கி.பி. பதினேழாம் நூற்றாண்டளவில் இஸ்லாமியர்களின் வருகையால் அம்மதம் சார்ந்த கருத்துகள் தமிழ் வடிவத்திலும் அரபு மொழி வடிவத்திலும் புதியதோர் இலக்கிய வகையினதாய் அறிமுகப்படுத்தப்பட்டன. சீறாப்புராணம், இராஜநாயகம், சின்னசீறா உள்ளிட்ட காப்பியங்களும், மஸ்அலா, முனாஜத்து, கிஸ்ஸா முதலான புதிய இலக்கிய வகைகளும் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களால் படைக்கப்பட்டன.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து இந்திய வரலாறானது பல்வித மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. வணிகத்தின் பொருட்டு இந்தியாவிற்குள் நுழைந்த ஐரோப்பியர்கள் சந்தை பிடிப்பதோடு நாட்டைப் பிடிக்கும் சூழ்ச்சியிலும் இறங்கத் தொடங்கினர். ஆசியக் கண்டத்தின் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அவர்களால் நாட்டின் வளமும் வணிகமும் தாழ்வினை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. அதே வேளையில் அறிவியல் வளர்ச்சியும் புதிய புதிய கண்டுபிடிப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டுப் பல்வேறு ஆக்கப்பணிகளும் முன்னேற்றத்தை நோக்கிப் பயணித்தன. அவ்வாறே மொழியின் அடிப்படையில் ஆயும்போது டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலம் முதலிய மேலைநாட்டு மொழிகள் இந்திய மொழிகளுடன் கலப்புற்றன. மேலும் அச்சு இயந்திரம், காகிதப் பெருக்கம் இவற்றின் பொருட்டுப் பல்வேறு நூல்கள் ஓலை வடிவினின்று அச்சேற்றப் பெற்றுப் பரவலாக்கப்பட்டன. ஆதலால் கல்வியானது அனைத்து மக்களுக்கும் பொதுவாக்கப்பட்டது. அதன் பயனாய்ச் சிறுகதை, புதினம், கட்டுரை, வசனகவிதை(புதுக்கவிதை) முதலிய மேலைநாட்டு இலக்கிய வடிவங்கள் தமிழ் மரபிற்கேற்ற தன்மையில் பெரிதும் தோற்றம் பெறலாயின. மேலும் பல உரைநடை நூல்களும் வெளிவரலாயின. குறிப்பாக ஆங்கில இலக்கியத்தின் அறிமுகத்தால் பல்வேறு புத்திலக்கிய வடிவங்கள் தமிழல் உதயமாயின. ஹைகூ, சூ.ஃபி, சென்ட்ரியூ, கஸல் முதலியன தற்காலத்தில் புதுவகை இலக்கியங்கள் எனலாம். இங்ஙனம் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாய்த் தமிழ் மொழியானது நீண்ட நெடிய வரலாற்றினைத் தொடர்ச்சியாய்ப் பெற்று விளங்குவதை நன்கு உணரலாம்.

**“திராவிட மொழிகளில் மூத்தமொழி தமிழ் என்பதை அறிஞர் உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம், திராவிட நாகரிகம் என்பதையும் அறிஞர் பலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா முழுவதும் பேசப்பெற்ற மொழியாகத் தமிழ் இருந்தது எனவும், தமிழே உலகமொழிகளின் தாய் எனவும், பாவாணர் போன்ற பேரறிஞர் கருதுகின்றனர்”.** [8]

**தமிழ் இலக்கணத் தோற்றம்**

இலக்கணம் என்னும் சொல்லை இலக்கு, அண், அம் என்னும் முச்சொல்லின் கலவைச் சொல்லாகக் கூட்டி (இலக்கு – குறி, குறிக்கோள், அண் - அண்ணுதல், நெருங்குதல், அம் - பெருமைப்பொருள் சுட்டும் விகுதி) பொருள் சுட்டப்படுகிறது. இலக்கணம், இலக்கியம் இவ்விரண்டும் இலக்கை நோக்கிப் பயணிப்பதையே உட்பொருளாகக் கொண்டிலங்குகின்றன. மேலும் இலக்கணம் என்னும் சொல்லாட்சியானது தமிழின் தொன்மையான நூல்களிலும் காணப்படுகிறது. சான்றாகத் தொல்காப்பியத்தில் இலக்கணம் என்னும் சொல்லானது பயன்படுத்தப்பட்டுள்ளமையை,

***“வழக்கி னாகிய உயர் சொற் கிளவி***
***இலக்கண மருங்கின் சொல்லாறல்ல”*** ***(தொல்.27)***

***“புறத்திணை இலக்கணம்”*** ***(தொல்.1002)***

***“இழைபின் இலக்கணம்”*** ***(தொல்.1498)***

***“செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி***
***இழைத்த இலக்கணம்”*** ***(தொல்.1499)***

***“ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்***
***ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்***
***வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி***
***இலக்கண மருங்கின் சொல்லா றல்ல”*** ***(தொல்.510)***

என்னும் நூற்பாக்களின் வழி நின்று உணரலாம். அவ்வாறே சிலப்பதிகாரத்திலும்,

***“இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து”***[9]

என்னும் தொடரில் இலக்கணம் என்னும் சொல்லானது பயின்று வந்துள்ளமையை நோக்கின் அச்சொல் பழந்தமிழ்ச் சொல் என்பதைப் பாங்குற அறியலாம். இலக்கியங்களின் வரன்முறையாகவும் கட்டமைப்பாகவும் விளங்கும் இலக்கணமானது இலக்கியங்களில் இருந்தே ஆக்கப்படுகிறது. இக்கருத்தினையே,

**“இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே**
**எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே**
**எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல**
**இலக்கி யத்தின் றெடுபடும் இலக்கணம்”**[10]

என்று பேரகத்தியச் சூத்திரமானது சுட்டுகிறது.

> **“அவ்வாறே இலக்கியத்தினின்று இலக்கணம் ஆக்கப்படுவது போன்றே முன்னைய இலக்கண ஆசிரியர்களின் கருத்தினை ஆய்ந்தே புத்திலக்கணமானது படைக்கப்படுகின்றது என்பதைத் தமிழின் தொல்லிலக்கண நூலான தொல்காப்பியத்தின் பாயிரம் வரைந்த பனம்பாரணார் நன்கு விளக்கியுள்ளார்.”**[11]

ஒரு மொழியின் இலக்கணம் என்பது தொடக்க காலம் முதல் இன்று வரை காணப்படும் மரபுகளை வகுத்தும், தொகுத்தும், விரித்தும், விளக்கியும் கூறுவதே யாகும். மொழியின் மரபு என்பது பேச்சுமொழியையும், எழுத்துமொழியையும் சார்ந்ததாகும். மொழி இலக்கண உருவாக்கத்திற்குப் பெரிதும் பயன்படுவது எழுத்துமொழியே ஆகும். ஆதலின் ஒரு மொழியில் முழுமையான தெளிவான விரிவான இலக்கணம் தோன்றி இருப்பின் அவ்விலக்கணம் தோன்றிய காலத்திற்கு முன்பே அம்மொழியில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றியிருக்கவேண்டும். இவ்வாறே தமிழ்மொழியிலும் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பே இலக்கியங்களும், இலக்கணங்களும் பற்பலவாகவெழுந்துள்ளன. அவற்றுள் எண்ணிறந்த இலக்கிய, இலக்கண நூல்கள் இயற்கைச் சீற்றத்தாலும், அந்நியர் படையெடுப்பாலும் அவற்றின் அடிச்சுவடே இல்லாமல் மறைந்தன. இவற்றிலிருந்து தப்பித் தம் பெயரை மட்டும் பதிவு செய்துவிட்டு மறைந்த நூல்கள் பல. பெயரும் தெரியாமல் அழிந்த நூல்கள் பல. அழிந்தவைப் போக எஞ்சிய இலக்கண நூல்களின் வரலாற்றினை அறிவதே இவ்வியலின் நோக்கமாகும்.

இன்று வழக்கில் உள்ள இலக்கணநூல்களே யன்றி முன்பு வழங்கி இன்று வழக்கிறந்த இலக்கண நூல்களின் வரலாறும் முறையாக இவ்வியலில் தொகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நூலின் நூற்பெயர், காரணம், நூலாசிரியர் வரலாறு, நூல்அமைப்பு, நூல் எழுந்த காலமும், சூழலும், நூலின் உரை, நூல்பதிப்பு விவரம் முதலான செய்திகளும் நிரல்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கண நூல்களின் வரலாறு**

தமிழ் இலக்கண நூல்கள், மரபின் அடிப்படையில் அமைந்துள்ளன. முதலில் எழுத்து, சொல், பொருள் என்று தொல்காப்பியத்தில் அமைந்த நிலை, வீரசோழியம் எழுதிய புத்தமித்திரனார் காலத்தில் ஐந்திலக்கணமாக எழுத்து,

சொல், பொருள், யாப்பு, அணி என்ற நிலையில் வளர்ச்சியும் மாற்றமும் அடைகிறது.

ஐந்திலக்கண நூல்களாக வீரசோழியம், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் போன்றவை அமைந்துள்ளன.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அறுவகை இலக்கணம் எனும் ஒன்றை உருவாக்கிப் புலமை இலக்கணத்தையும் இணைத்து ஐந்தை, ஆறாக்கியுள்ளார். அவர் ஏழாம் இலக்கணமும் எழுதியுள்ளார்.

இலக்கண நூல்கள் நூற்பாக்களால் மட்டும்தான் அமையவேண்டும் என்பதில்லை. ஒவ்வொரு இலக்கணநூலும், ஒவ்வொரு நிலையில் அமையலாம். தொல்காப்பியம், இறையனார் களவியல், அவிநயம், காக்கைபாடினியம், சங்கயாப்பு, யாப்பருங்கலம் போன்ற இலக்கண நூல்கள், நூற்பாவால் அமைந்துள்ளன.

வீரசோழியம், யாப்பருங்கலக்காரிகை, களவியல் காரிகை, நவநீதப்பாட்டியல், பிரயோக விவேகம் முதலிய நூல்கள், கட்டளைக் கலித்துறைப் பாவால் அமைந்துள்ளன.

நேமிநாதம், வெண்பாயாப்பில் இலக்கணத்தைக் கூறியுள்ளது.

பிரபந்தத் திரட்டு, வெண்பாவாலும், விருத்தப்பாக்களாலும் அமைந்துள்ளது.

பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை போன்றவை, எல்லாவகைப் பாடல்களாலும் அமைந்துள்ளன.

சுவாமிநாதம், எண்சீர் ஆசிரியவிருத்தத்தால் ஆனது. அதனால் இலக்கணம் நூற்பாக்களால் மட்டும் அமைய வேண்டும் என்பது இல்லை. எல்லாவகைப் பாக்களாலும் அமைக்கலாம், அமையலாம் என்பதை நம் இலக்கண நூல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**எழுத்திலக்கணம்**

எழுத்திலக்கணம் கூறும் நூல்களாகத் தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் என எட்டு நூல்கள் உள்ளன. அந்நூல்கள் பல இடங்களில் வேறுபட்டுள்ளன.

தொல்காப்பியம், எழுத்ததிகாரத்திற்கு 9 இயல்களையும், 483 நூற்பாக்களையும் கொண்டுள்ளது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | நூன்மரபு | 33 |
| 2 | மொழிமரபு | 49 |
| 3 | பிறப்பியல் | 21 |
| 4 | புணரியல் | 40 |
| 5 | தொகைமரபு | 30 |
| 6 | உருபியல் | 30 |
| 7 | உயிர்மயங்கியல் | 93 |
| 8 | புள்ளிமயங்கியல் | 110 |
| 9 | குற்றியலுகரப் புணரியல் | 77 |
| | மொத்தநூற்பாக்கள் | 483 |

தொல்காப்பியம் நூன்மரபில் தனி நின்ற எழுத்துகளின் இயல்புகளான எண், பெயர், முறை, உருவம், மாத்திரை, இணைக்கத் தகுதி (மெய்ம்மயக்கம்) ஆகியன கூறப்பட்டுள்ளது. மொழி மரபில் சார்பெழுத்துகள், ஈரொற்றுடனிலை ஆகியனவும் கூறப்பட்டுள்ளது. பிறப்பியல் எழுத்துகள் பிறக்கும் விதத்தைக் கூறுகிறது. புணரியல் புணர்ச்சியின் பொது இலக்கணத்தைக் கூறுகிறது. தொகைமரபு உயிரீறு, மெய்யீறு, குற்றியலுகரவீற்றுச் சொற்கள் புணர்ச்சியின்போது ஏற்கின்ற ஒலிமாற்ற விதிகள் சிலவற்றைத் தொகுத்துச் சுட்டுகிறது. உருபியல் பெயர்ச் சொற்களுடன் வேற்றுமை உருபுகள் புணரும் விதத்தைக் கூறுகிறது. உயிர்மயங்கியல் உயிரீற்றுச் சொற்களின் புணர்ச்சியையும், புள்ளிமயங்கியல் மெய்யீற்றுச் சொற்களின் புணர்ச்சியையும், குற்றியலுகரப் புணரியல் குற்றியலுகர வீற்றுச் சொற்களின் புணர்ச்சியையும் விவரித்துள்ளது.

வீரசோழியம் சந்திப்படலம் எனும் ஒரே இயலில் 28 கலித்துறைப் பாக்களால் எழுத்திலக்கணத்தைக் கூறியுள்ளது.

| வ.எண் | படலம் | நூ.எ. |
|---|---|---|
| 1 | சந்திப்படலம் | 28 |

வீரசோழியம் எழுத்துகளின் பெயர், எண்ணிக்கை, மாத்திரை, பிறப்பு, மொழி, முதனிலை, மொழிஇறுதிநிலை ஆகியனவற்றை எட்டு நூற்பாக்களிலும், எஞ்சிய இருபது நூற்பாக்களில் புணர்ச்சிக் கருத்துகளையும் கூறியுள்ளது.

நேமிநாதம் எழுத்திலக்கணத்தைக் ஒரே இயலில் கூறியுள்ளது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | எழுத்ததிகாரம் | 24 |
| 2 | சிறப்புப் பாயிரம் | 2 |
| 3 | அவையடக்கம் | 1 |
| 4 | எழுத்துத் தற்சிறப்புப் பாயிர வெண்பா | 1 |
| | மொத்த நூற்பாக்கள் | 28 |

நன்னூல் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என ஐந்து இயல்களில், 202 நூற்பாக்களில் எழுத்திலக்கணத்தைக் கூறியுள்ளது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | எழுத்தியல் | 72 |
| 2 | பதவியல் | 23 |
| 3 | உயிரீற்றுப் புணரியல் | 53 |
| 4 | மெய்யீற்றுப் புணரியல் | 36 |
| 5 | உருபு புணரியல் | 18 |
| | மொத்த நூற்பாக்கள் | 205 |

தொல்காப்பியத்தின் ஒன்பது இயல்களின் செய்திகளும் நன்னூலின் ஐந்து இயல்களில் அடக்கப்பெற்றுள்ளன. நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் ஆகிய மூன்றியல்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் எழுத்தியலில் இணைக்கப்பெற்றுள்ளன. புணரியல், தொகைமரபு, உயிர்மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய மூன்றியல்களின் செய்திகள் உயிரீற்றுப் புணரியலில் இடம் பெற்றுள்ளன. புள்ளிமயங்கியல், உருபியல் இரண்டிலும் விவரிக்கப் பெற்றுள்ளவை முறையே மெய்யீற்றுப் புணரியலிலும், உருபுபுணரியலிலும் இடம்பெற்றுள்ளன. பதவியல் நன்னூல் தமிழ் இலக்கணத்திற்குப் புதிதாக வழங்கிய கொடையாகும். இவ்வியல் பகுதி என்னும் தனி உருபன்களையும், இடைநிலை, விகுதி என்னும் கூட்டு உருபன்களையும் விவரிக்கிறது. மேலும், இதில் வடமொழியாக்கமும் அடக்கப்பெற்றுள்ளது.

**இலக்கணவிளக்கம்**

இலக்கணவிளக்கம் நன்னூலைப் பின்பற்றி எழுத்திலக்கணத்தை ஐந்து இயல்களில் விவரிக்கின்றது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | எழுத்தியல் | 37 |
| 2 | பதவியல் | 15 |
| 3 | உயிரீற்றுப் புணரியல் | 66 |
| 4 | மெய்யீற்றுப் புணரியல் | 29 |
| 5 | உருபு புணரியல் | 11 |
| | மொத்த நூற்பாக்கள் | 158 |

**பிரயோகவிவேகம்**

பிரயோக விவேகம் நான்கு படலங்களில் கட்டளைக் கலித்துறையாலான நூற்பாக்களைக் கொண்டுள்ளது.

| வ.எண் | படலம் | நூ.எ. |
|---|---|---|
| 1 | காரக படலம் | 17 |
| 2 | சமாச படலம் | 11 |
| 3 | தத்தித படலம் | 06 |
| 4 | திங்ஙப் படலம் | 16 |
| | மொத்த நூற்பாக்கள் | 50 |

**இலக்கணக்கொத்து**

முன்னையோர் நூல்களிலும் உரைகளிலும் சிதறுண்டு கிடந்த விதிகள் சிலவற்றை ஒரு சூத்திரத்தால் ஒருமித்து அறியத்தருதலின் இலக்கணக்கொத்து என்று காரணப்பெயர் பெற்றதென நூலாசிரியரே நூலின் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுவர். இலைமறை காய்கள் போல் ஒளிந்து கிடக்கும் விதிகளைத் திரட்டித் தருவதென மேலும் விளக்கம் அளிப்பர்.

இலக்கணவிளக்கம் பாயிரம் 12 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. வேற்றுமை இயல், வினையியல், ஒழிபியல் என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**தொன்னூல் விளக்கம்**

தொன்னூல் விளக்கம் எழுத்திலக்கணத்தை மூன்று இயல்களாகப் பகுத்துள்ளது.

| வ.எண் | பகுப்பு | நூ.எ. |
|---|---|---|
| 1 | எழுத்தியல் | 02 |
| 2 | எழுத்தின் பகுப்பு | 17 |
| 3 | எழுத்தின் விகாரம் | 20 |

எழுத்தியலில் எழுத்துகளின் பொதுப்பிறப்பு கூறப்பட்டுள்ளது. எழுத்துகளின் வகை, எண்ணிக்கை, பெயர், உருவம், மாத்திரை, மொழி முதனிலை, இறுதி நிலை, ஆகியவற்றை எழுத்தின் பகுப்பு என்னும் இயல் விளக்குகிறது. விகாரம் என்னும் இயலில் புணர்ச்சிக் கருத்துகள் கூறப்பட்டுள்ளது.

**முத்துவீரியம்**

செவை.சண்முகம்,

**"முத்துவீரியம் எழுத்ததிகாரம் பாகுபாடு ஒன்றையும் குறிப்பிடவில்லை. ஆனால், பதிப்பாசிரியர்கள் எழுத்தியல், மொழியியல், புணரியல் என்று மூன்று பிரிவாக வகுத்துக் காட்டியுள்ளார்கள்".[12]**
என்று கூறியுள்ளார்.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | எழுத்தியல் | 114 |
| 2 | மொழியியல் | 45 |
| 3 | புணரியல் | 298 |
| | மொத்த நூற்பாக்கள் | 457 |

**சுவாமிநாதம்**

சுவாமிநாதம் எழுத்ததிகாரத்தை மூன்று மரபுகளால் பிரித்துள்ளது. நூற்பாக்கள் ஆசிரிய விருத்தங்களால் ஆனவை.

| வ.எண் | மரபு | நூ.எ. |
|---|---|---|
| 1 | எழுத்தாக்க மரபு | 10 |
| 2 | பதமரபு | 05 |
| 3 | புணர்ச்சி மரபு | 05 |
| | மொத்தநூற்பாக்கள் | 20 |

நன்னூல், இலக்கணவிளக்கம் ஆகியவற்றின் எழுத்தியல் செய்திகளை எழுத்தாக்க மரபு கொண்டுள்ளது. பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனும் ஆறனையும் பதமரபு கூறியுள்ளது. புணர்ச்சி மரபு புணர்ச்சி விதிகளை விவரித்துள்ளது.

**அறுவகை இலக்கணம்**

அறுவகை இலக்கணத்தில் எழுத்திலக்கணம் மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பிரிவு | நூ.எ. |
|---|---|---|
| 1 | பொதுப்பாயிரம் | 06 |
| 2 | சிறப்புப்பாயிரம் | 06 |
| 3 | உரு ஓசை இயல்பு | 58 |
| 4 | நிலை இயல்பு | 55 |
| 5 | புணர்ச்சி இயல்பு | 51 |
| 6 | புறனடை | 01 |
| | மொத்தநூற்பாக்கள் | 177 |

எழுத்தின் வடிவத்தையும், ஒலித் தோற்றத்தையும் கூறுவது உரு ஓசை இயல்பாகும். இவ்வியல்பில் பழந்தமிழர் எண்களையும். முகத்தலளவை முதலான அளவைகளைக் குறிப்பிடும் எழுத்துகளையும், பிழைபட எழுதும் எழுத்துகளையும் குறிப்பிடும். எழுத்தின் வகைகள், மாத்திரை, சுட்டு. வினா, மொழி முதல், மொழி இறுதி ஆகியவற்றைக் குறிப்பிடுவது இரண்டாவது

பகுதியாகிய நிலை இயல்பு. மயக்கம், புணர்ச்சி, குற்றியலிகரம், குற்றியலுகரம், மகரக்குறுக்கம் என்பவற்றைப பற்றிச் சொல்வது இறுதியான புணர்ச்சியியல்பாகும்.

**சொல்லிலக்கணம்**

**தொல்காப்பியம்**

தொல்காப்பியம் சொல்லிலக்கணத்தை ஒன்பது இயல்களில் விவரித்துள்ளது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | கிளவியாக்கம் | 61 |
| 2 | வேற்றுமையியல் | 22 |
| 3 | வேற்றுமை மயங்கியல் | 35 |
| 4 | விளிமரபு | 37 |
| 5 | பெயரியல் | 43 |
| 6 | வினையியல் | 51 |
| 7 | இடையியல் | 48 |
| 8 | உரியியல் | 98 |
| 9 | எச்சவியல் | 67 |
| | மொத்தநூற்பாக்கள் | 462 |

கிளவியாக்கம் என்னும் முதல் இயலில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே உள்ள இயைபு, சில பெயர்த் தொடர்களின் அமைப்பு, தொடர்களைப் பயன்படுத்தும்போது பின்பற்றப்பட வேண்டிய மொழிமரபு போன்ற செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன. வேற்றுமைகளின் புற அமைப்பாகிய உருபுகளும் அக அமைப்பாகிய பொருள்களும் வேற்றமையியலில் இடம்பெற்றுள்ளன. வேற்றுமை மயங்கியலில் வேற்றுமைத் தொடர்களில் அமைய தகுந்த இருண்மை நிலையினை விவரிக்கிறது. விளிமரபானது விளிவேற்றுமையின் தன்மை பற்றி எடுத்துரைக்கின்றது. வேற்றுமை இலக்கணம் கூறிய பின்னர் பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களையும் தனித்தனி இயல்களில் இந்நூல் விவரிக்கிறது. இறுதியான எச்சவியலில் முந்தைய எட்டு இயல்களிலும் விவரிக்கப்படாமல் விட்டுவிட்ட எஞ்சிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**வீரசோழியம்**

வீரசோழியம் ஆறு இயல்களில் சொல்லிலக்கணத்தைக் கூறுகிறது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | வேற்றுமைப்படலம் | 09 |
| 2 | உபகாரப்படலம் | 06 |
| 3 | தொகைப்படலம் | 08 |
| 4 | தத்திதப்படலம் | 08 |
| 5 | தாதுப்படலம் | 11 |
| 6 | கிரியாபதப்படலம் | 13 |
| | புறனடை வெண்பா | 02 |
| | மொத்தநூற்பாக்கள் | 57 |

வேற்றுமைப் படலமும் உபகாரப் படலமும் வேற்றுமைக் கருத்துகளை விவரித்துள்ளன. வேற்றுமைத் தொகை முதலான தொகை மொழித் தொடர் அமைப்புகளைத் தொகைப்படலம் விவரித்துள்ளது. தத்திதப் படலம் குறிப்பு வினையாலணையும் பெயர்கள், பண்புப் பெயர்கள் என்னும் ஆக்கப் பெயர்களின் விகுதிகளை விவரித்துள்ளது. தாதுப்படலமும் கிரியாபதப் படலமும் வினைச் சொற்கள் பற்றிக் கூறியுள்ளது.

**நேமிநாதம்**

சொல்லிலக்கணத்திற்கு இந்நூல் ஒன்பது இயல்களை அமைத்துள்ளது. இயற்பிரிவுகள் தொல்காப்பியத்தை ஒட்டியுள்ளன.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | சொற் தற்சிறப்புப் பாயிர வெண்பா | 1 |
| 2 | மொழியாக்க மரபு | 14 |
| 3 | வேற்றுமை மரபு | 5 |
| 4 | உருபு மயங்கியல் | 3 |
| 5 | விளிமரபு | 6 |
| 6 | பெயர்மரபு | 9 |
| 7 | வினைமரபு | 12 |
| 8 | இடைச்சொன்மரபு | 05 |
| 9 | உரிச்சொன்மரபு | 05 |
| 10 | எச்சமரபு | 11 |
| | மொத்தநூற்பாக்கள் | 71 |

**நன்னூல்**

நன்னூல் சொல்லிலக்கணத்தை ஐந்து இயல்களில் விவரித்துள்ளது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | பெயரியல் | 62 |
| 2 | வினையியல் | 32 |
| 3 | பொதுவியல் | 68 |
| 4 | இடைச்சொல்லியல் | 22 |
| 5 | உரிச்சொல்லியல் | 21 |
| | மொத்தநூற்பாக்கள் | 205 |

சொல்லின் பொதுஇலக்கணம், பெயர்ச்சொல் இலக்கணம், வேற்றுமை இலக்கணம் என்பன பெயரியலில் அடக்கப் பெற்றுள்ளன. வினையியல், இடையியல், உரியியல் மூன்றும் முறையே வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் குறித்த செய்திகளை விவரிக்கின்றன. பொதுவியல் தொல்காப்பியத்தின் கிளவியாக்கம், எச்சவியற் செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறது.

## இலக்கணவிளக்கம்

இலக்கணவிளக்கம் நன்னூலைப் பின்பற்றிச் சொல்லிலக்கணத்தையும் விவரித்துள்ளது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | பெயரியல் | 68 |
| 2 | வினையியல் | 24 |
| 3 | இடைச்சொல்லியல் | 29 |
| 4 | உரிச்சொல்லியல் | 15 |
| 5 | பொதுவியல் | 78 |
| | மொத்த நூற்பாக்கள் | 214 |

## தொன்னூல்விளக்கம்

சொல்லதிகாரத்தை இந்நூல் ஐந்து இயல்களில் விவரித்துள்ளது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| முதலோத்து | சொற்பொதுவியல் | 12 |
| இரண்டாம் ஓத்து | வேற்றுமையியல் | 30 |
| | பகுபதப் பெயரியல் | 05 |
| | தொகைநிலைத் தொடர் மொழிப்பெயரியல் | 12 |
| | சுட்டுவினா | 03 |
| மூன்றாம் ஓத்து | வினைச்சொல்லியல் | 02 |
| | முதலாவது முக்கால வினைமுற்று | 08 |
| | இரண்டாவது ஏவல் வியங்கோள் | 04 |
| | மூன்றாவது ஈரெச்சம் | 06 |
| | நூன்காவது வினைக்குறிப்பு | 07 |
| நான்காம் ஓத்து | இடைச்சொல்லியல் | 08 |
| ஐந்தாம் ஓத்து | உரிச்சொல்லியல் | 05 |

## முத்துவீரியம்

முத்துவீரியம் மூன்று இயல்களில் சொல்லிலக்கணத்தைக் கூறுகிறது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | தற்சிறப்புப்பாயிரம் | 01 |
| 2 | பெயரியல் | 136 |
| 3 | வினையியல் | 48 |
| 4 | ஒழிபியல் | 126 |
| | மொத்தநூற்பாக்கள் | 310 |

**சுவாமிநாதம்**

சுவாமிநாதம் மூன்று இயல்களில் சொல்லிலக்கணத்தைக் கூறுகிறது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | பெயர்மரபு | 13 |
| 2 | வினைமரபு | 07 |
| 3 | எச்சமரபு | 17 |
| | மொத்தநூற்பாக்கள் | 37 |

பெயர் இலக்கணத்தைப் பெயர் மரபியலிலும், வினை இலக்கணத்தை வினை மரபியலிலும் விவரிக்கப்பட்டள்ளன. இடைச்சொல், உரிச்சொல், தொகை மொழித் தொடர்கள், பொருள்கோள் போல்வன எச்சமரபில் இடம் பெற்றுள்ளன.

**அறுவகை இலக்கணம்**

அறுவகை இலக்கணத்தில் பொது, பிரிவு, சார்பு, திரிபு என நான்கு இயல்களாகச் சொல்லிலக்கணம் பிரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | இயல் | நூ.எ. |
|---|---|---|
| 1 | காப்பு | 01 |
| 2 | பொதுவியல்பு | 15 |
| 3 | பிரிவியல்பு | 44 |
| 4 | சார்பியல்பு | 25 |
| 5 | திரிபியல்பு | 27 |
| | மொத்தநூற்பாக்கள் | 112 |

தொடக்கத்தில் சொல்லெனல் எழுத்து தனித்தும், சிற்சில புணர்ந்தும் வருவன எனச் சொல்லின் இலக்கணம் பொதுவாகச் சுட்டியுரைக்கப்பட்டுள்ளது. முத்தமிழுக்குரிய சொற்கள் பற்றியும், பொருட்செறிவும், எளிமையும் உடைய நூல்களில் பயிலும் சொற்கள் பற்றியும் பொதுவியல் எடுத்து விளக்குகிறது. பிரிவியல்பில் சுட்டுச்சொல் வகை, பெயர்ச்சொல் வகை, வினைச்சொல் வகை, பல்வகைச் சொற்கள் பற்றியும் எடுத்து விளக்குகிறது. பின்னர் மங்கலச்சொல், அசைசொல், சாரியைச் சொல் என்பன பற்றிச் சார்பியல் பகுதி விளக்குகிறது. ஒரு சொல் பல பொருளைத் தருவதால் அது திரிபுச்சொல் எனப் பல்வேறு திரிபுச் சொற்கள் பற்றித் திரிபியல்பு கூறியுள்ளது.

**பொருளிலக்கணம்**

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் அகப்பொருள் இலக்கணங்களையும், புறப்பொருள் இலக்கணங்களையும் கூறியுள்ளது.

அகம், புறம் எனும் பொருள் இலக்கணத்துள் அகப்பொருள் இலக்கணங்களாக, இறையனார் களவியல், தமிழ்நெறி விளக்கம், நம்பியகப்பொருள், களவியற் காரிகை, மாறன்அகப்பொருள் போன்றவை உள்ளன.

புறப்பொருளுக்குப் புறப்பொருள் வெண்பாமாலை தனிநூலாக அமைகிறது. இலக்கணவிளக்கம் புறத்திணையியல் பற்றிப் பேசுகிறது.

**யாப்பிலக்கணம்**

யாப்பிலக்கண நூல்களாகத் தொல்காப்பியம் - செய்யுளியல், அவிநயம், காக்கைபாடினியம், அமுதசாகரம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம் - யாப்பதிகாரம், இலக்கண விளக்கம் - செய்யுளியல், முத்துவீரியம் - யாப்பதிகாரம், சுவாமிநாதம் - யாப்பதிகாரம், விருத்தப் பாவியல் போன்றன உள்ளன.

சான்றிலக்கியங்களாகப் பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை, திருவலங்கல்திரட்டு, பல்சந்தப் பரிமளம் போன்றவை அமைகின்றன.

பாட்டியல் நூல்களாக இந்திரகாளியம், பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கம் - பாட்டியல் போன்றவை உள்ளன.

பிரபந்தங்களைப் பற்றிய நூல்களாகப் பிரபந்த மரபியல், பிரபந்த தீபம், பிரபந்தத் திரட்டு, பிரபந்த தீபிகை போன்றவை தோன்றின.

அறுவகை இலக்கணத்தில் யாப்பிலக்கணமும், ஏழாம் இலக்கணத்தில் யாப்பியல்பும், வண்ணத்தியல்பும், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளால் வளர்ந்தன.

**அணியிலக்கணம்**

தொல்காப்பியம் உவமையியலை அணி இலக்கணத்தின் விதையாக விதைத்தது. தண்டியலங்காரம், அதை வளர்த்தது. மாறன் அலங்காரம் அதை விரித்தது. இரத்தினச் சுருக்கம், உவமான சங்கிரம், சந்திராலோகம், குவலயானந்தம் உள்ளிட்ட நூல்கள் கிளை பரப்பி அணியிலக்கணம் பரந்தது.

இவ்வாறு ஐந்திலக்கணங்களாக அமைந்த அடிப்படைக்குக் காரணம் புலமைதான் என்பதை உணர்ந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், புலமை இலக்கணத்தையும் இணைத்து அறுவகை இலக்கணம் என்ற நூலை உருவாக்கினார்.

இனி தமிழ் இலக்கணநூல்களின் வரலாற்றினை வரிசைப்படுத்தலாம்

**தொல்காப்பியம்**

தமிழ் மொழிக்குக் கிடைத்துள்ள முதல் நூலும், முழுமையான நூலுமாகிய இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் என்னும் நூலை இயற்றியமையால்தான் தொல்காப்பியன் எனத் தம் பெயர் தோன்றச் செய்தார் என்பதைப் பாயிரம் ‘‘தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி’’ என்று தெளிவாகக் கூறியுள்ளது.

தொல்காப்பியன் தொகுத்தும், வகுத்தும், சேர்த்தும், எழுதிய நூல் ஆதலால், தொல்காப்பியம் என்ற பெயரைப் பெற்றது. தொல்காப்பியம் என்ற சொல்லை ஒரு சொல்லாகக் கொள்வது ஒரு முறை. முச்சொல்லின் இணைப்பாகத் தொல்+காப்பு+இயம் என்று பிரித்து பழமையைக் காத்து இயம்பும் நூல் என்று கொள்வது மற்றொரு முறையாகும்.

**காரணம்**

எழுத்து, சொல், பொருள் என்ற முப்பொருள்களைக் கூறும் நூல். உலகத்தோற்றம், உயிர்களின் வகைப்பாடு, அவ்வுயிர்களைப் பற்றிய பகுப்பாய்வு, அவ்வுயிர்களின் இளமை, முதுமைப் பெயர்கள் போன்றவற்றைக் கூறும் நூல். தொல்காப்பியம் மொழி இலக்கணம் நூல் மட்டும் அன்று, வாழ்வின் இலக்கணத்தையும் வகுத்துக் கூறுவதற்காக எழுந்த நூல் எனலாம்.

**நூலாசிரியர் வரலாறு**

நம்பியகப் பொருள் என்னும் நூல் பிற்காலத்தைச் சேர்ந்தது. இந்நூல், அகத்தியரின் மாணாக்கர் ‘‘பன்னிருவர்’’. அவருள் தொல்காப்பியர் முதன்மை மாணாக்கராக இருந்தார் என்கின்றது. இதனை,

> **“----------மலையத் திருந்த**
> **இருந்தவன். தன்பால் இயற்றமிழ் உணர்ந்த**
> **புலவர் பன்னிருவருள் தலைவன் ஆகிய**
> **தொல்காப்பியன்’’**

என நம்பியகப்பொருள் பாயிரம் பகர்கின்றது.

தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவருள் பேராசிரியர், இளம்பூரணர் இருவரும் குறிப்பிடத்தக்கோர். இவர் இருவரும் அகத்தியரின் மாணாக்கர் தொல்காப்பியர், என்னும் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

தொல்காப்பியம் நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ளது. அதில் தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர் என்னும் குறிப்பு எங்கும் இல்லை.
எனவே, தொல்காப்பியர் அகத்தியரின் மாணாக்கர் அல்லர் என்பது புலனாகிறது.

**நூல் அமைப்பு**

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களை உடையது. அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களாக இருபத்தேழு இயல்களைக் கொண்டிலங்குகிறது.

| அதிகாரம் | இயல் | நூற்பா |
|---|---|---|
| எழுத்ததிகாரம் | நூன்மரபு | 33 |
| | மொழிமரபு | 49 |
| | பிறப்பியல் | 21 |
| | புணரியல் | 40 |
| | தொகைமரபு | 30 |
| | உருபியல் | 30 |
| | உயிர்மயங்கியல் | 93 |
| | புள்ளிமயங்கியல் | 110 |
| | குற்றியலுகரப் புணரியல் | 77 |
| சொல்லதிகாரம் | கிளவியாக்கம் | 61 |
| | வேற்றுமையியல் | 22 |
| | வேற்றுமை மயங்கியல் | 35 |
| | விளிமரபு | 37 |
| | பெயரியல் | 43 |
| | வினையியல் | 51 |
| | இடையியல் | 48 |
| | உரியியல் | 98 |
| | எச்சவியல் | 67 |
| பொருளதிகாரம் | அகத்திணையியல் | 55 |
| | புறத்திணையியல் | 36 |
| | களவியல் | 50 |
| | கற்பியல் | 53 |
| | பொருளியல் | 54 |
| | மெய்ப்பாட்டியல் | 27 |
| | உவமயியல் | 37 |
| | செய்யுளியல் | 241 |
| | மரபியல் | 111 |

**நூலின் காலம்**

தொல்காப்பியரின் காலம் பற்றி அறிஞரிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன.

1. கி.மு. 10 - க்கு முன் - நாவலர் சோமசுந்தர பாரதியார்
2. கி.மு. 7 - க்கு முன் - சி. இலக்குவனார், கா.சு. பிள்ளை
3. கி.மு. 5 -க்கு முன் - மது.ச. விமலானந்தம், சி.பாலசுப்பிரமணியன்
4. கி.மு. 3 - மு.வரதராசனார்
5. கி.மு. 2 - இரா. இராகவையங்கார்

எனப் பல்வேறு கருத்துகள் உள்ளன.

தொல்காப்பியர் தம் நூலை நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் அரங்கேற்றினார். நிலந்தரு திருவிற் பாண்டியன் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காலத்தில் கி.மு.504 - இல் இரண்டாம் கடல்கோள் வந்து கபாடபுரத்தை அழித்தது. அதன் பின் மதுரையைத் தலைநகராகக் கொண்டு

ஆண்டான். இக்காலக்கட்டத்தில்தான் நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையில் தொல்காப்பியர் தொல்காப்பியத்தை அரங்கேற்றினார். எனவே, தொல்காப்பியரின் காலம் கி.மு.5-ஆம் நூற்றாண்டு என்பதனை உணரலாம்.

**நூலின் உரை**

தொல்காப்பியம் முழுமைக்கும் உரைகண்டவர் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் உரை எழுத்து, சொல் முழுமைக்கும், பொருளதிகாரத்தில் உவமையியல், மெய்ப்பாட்டியல், மரபியல் ஒழிந்த ஆறு இயல்களுக்கும் கிடைத்துள்ளது. பேராசிரியர் உரை தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பின் நான்கு இயல்களுக்கே கிடைத்துள்ளது. சேனாவரையர், தெய்வச் சிலையார் ஆகியோரின் உரை சொல்லதிகாரம் ஒன்றிற்கே கிடைத்துள்ளன. கல்லாடர் உரையும் பழையவுரை என்னும் மற்றோர் உரையும் சொல்லதிகாரம் முழுமைக்கும் கூட கிடைக்கவில்லை.

**நூல் பதிப்பு**

1. 1868-ல் தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணருரையை பூவிருந்தவல்லி சு.கன்னியப்ப முதலியார் வெளியிட்டார்.
2. 1892 - முதல் தொல்காப்பிய பகுதிகள் சி.வை.தாமோதரம் பிள்ளையால் வெளிவரத் தொடங்கின. இப்பதிப்புப் பணிகளில் ச.பவானந்தம் பிள்ளை, கனகசபைப் பிள்ளை, சி.கணேசையர், இராகவஐயங்கார், வ.உ.சிதம்பரனார், சி. வையாபுரிப் பிள்ளை, கரந்தைக் கவியரசு முதலியோர் ஈடுபட்டனர்.
3. 1921-முதல் தொல்காப்பியப் பதிப்புகள் அனைத்தும் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வழியே வெளிவந்தன.
4. 1922 –ல் மதுரை பி.என். சிதம்பர முதலியார் தொல்காப்பிய மூலம் கையடக்கப் பதிப்பைப் பதிப்பிக்க சி. புன்னைவனநாதமுதலியாரால் கொண்டுவரப்பட்டது.
5. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வழியே தொல்காப்பிய உரைவள நூல்கள் ஒவ்வொன்றாய் இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கின்றன.
6. 1912 - இல் தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி என்றொரு நூலை அறிஞர் மு. இராகவஐயங்கார் எழுதினார்.
7. க.வெள்ளைவாரணனார் தொல்காப்பியம் என்னும் அரிய ஆய்வு நூலையும், தொல்காப்பிய நன்னூல் என்ற ஒப்பீட்டு நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

8. ஆ. சிவலிங்கனார் எழுதிய இளம்பூரணர் எழுத்துரை என்னும் நூலும், தொல்காப்பிய உரைவளத் தொகுப்பு என்னும் நூலும் குறிப்பிடத்தக்கன.
9. சி.கணேசையரின் தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புகள், பின்னங்குடி சுப்பிரமணிய சாத்திரியாரின் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு, சி. இலக்குவனாரின் தொல்காப்பிய ஆராய்ச்சி, சாமி. சிதம்பரனாரின் தொல்காப்பியர் காலத் தமிழர் என்னும் நூல், மு.வை அரவிந்தன் இயற்றிய உரையாசிரியர்கள், இரா. மோகன், நெல்லை ந. சொக்கலிங்கம் ஆகிய இருவரும் இணைந்தியற்றிய உரை மரபுகள் ஆகியவை தொல்காப்பியம், தொல்காப்பிய உரையாசிரியர்கள் பற்றிய திறனாய்வு நூல்களாக விளங்குகின்றன.

பதிப்பு, வெளியீடுகள், வெளிவந்த கட்டுரைகள், ஆய்வு நூல்கள்அனைத்தும் தொகுத்துக் காட்டிய அடைவு இது இல்லை. அனைத்தையும் கூறினால் வரை கடந்து செல்லும் என்னும் கருத்தால் குறித்துக் காட்டும் அளவில் நிறுத்தப்பட்டுள்ளது.

**இறையனார் அகப்பொருள்**

இறையனாரால் இயற்றப் பெற்ற அகப் பொருள் இலக்கணநூல் இது என்பது பெயரை அறிந்த அளவிலேயே புலப்படும். இது களவியல் எனவும், இறையனார் களவியல் எனவும் அழைக்கப்படுகின்றது.

**காரணம்**

நாற்கவிராச நம்பியால் இயற்றப்பட்ட அகப்பொருள் நூல். நம்பியகப்பொருள் எனப்படுவது போல் இறையனார் என்னும் புலவர் ஒருவரால் இயற்றப்பெற்றது என்பது இயல்பான செய்தி, ஆனால், ‘‘இறையன்’’ என்பதை ‘‘இறைவன்’’ எனக் கொண்டு உரையும் வரலாறும் உரைத்து வருவது நெடுநாள் வழக்காக உள்ளது.

**நூலாசிரியர் வரலாறு**

> **‘‘அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே, பசிகடுதலும், அரசன் சிட்டரை எல்லாங் கூவி, வம்மின், யான் உங்களைப் புரந்தரகில்லேன். என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர் நுமக்கு அறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின் என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக், கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்த பின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்னர், அரசன், இனி நாடு நாடாயிற்றாகலின், நூல்வல்லாரைக் கொணர்க, என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும், யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குத் தலைப்பட்டிலேம் என்று வந்தார். வர அரசனும் புடைபடக்**

**கவன்று, என்னை எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே. பொருளதிகாரம் பெறமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம் எனச் சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழல் நிறக்கடவுள் சிந்திப்பான், என்னை பாவம்! ஆரசர்க்குக் கவற்சி பெரியதாயிற்று, அதுதானும் ஞானத்தினுடைய தாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம் என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து மூன்று செப்பிதழகத்து எழுதிப் பீடத்தின் கீழிட்டான்".**

இவ்வாறு இறையனார் அகப்பொருள் என்ற களவியல் நூலின் தோற்றத்தை, அதன் உரை கூறுகிறது.[13]

**நூல் அமைப்பு**

இறையனார் களவியலில் அறுபதே நூற்பாக்களில் களவியல், கற்பியல் என்று இரண்டு நிலைகளில் நூல் அமைகிறது. அதில் களவியலுக்கு 33 நூற்பாக்களும், கற்பியலுக்கு 27 நூற்பாக்களும் அமைந்துள்ளன.

**நூலின் காலம்**

இந்நூலில் சங்கச் சான்றோர் பாடல்களுடன் பாண்டிக்கோவைப் பாடல்களும் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இக்கோவையையுடைய பாண்டியன் நெடுமாறன் கி.பி. 8ஆம் நூற்றாண்டினனாகலின் இவ்வுரை அவன் காலத்திற்குப் பின்பு எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கவேண்டும் என அறியமுடிகின்றது.

**உரை**

**மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார். ஆவர் தேனூர்க் கிழாருக்கு உரைத்தார். அவர் படியங்கொற்றனார்க்கு உரைத்தார். அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார். அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேந்தனார்க்கு உரைத்தார்.அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்கு உரைத்தார். அவர் திருக்குன்றத்தாசிரியருக்கு உரைத்தார். அவர் மாதளவனனார் இளநாகனார்க்கு உரைத்தார். அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார். பின்பு எழுதப் பெற்றது என்று தெரிகிறது.** [14]

**அவிநயம்**

இரர. இளங்குமரன்,

**"அவிநயம் என்னும் சொல்லைத் தக்கயாகப் பரணியுரை, "நளினத்தையுடையது நளினி: அவிநயத்தால் உடைப்பெயர்ச்சொல் ஈறுதிரிந்தது" எனக் குறிப்பிடுகிறது. (காளிக்கு.153)** [15]

என்று கூறியுள்ளார்.

**நூலாசிரியர் வரலாறு**

ஆவிநய நூல் ஆசிரியர் ஜைன மதத்தைச் சார்ந்தவர் என்பது இவர் இயற்றிய அவிநய நூற்பா ஒன்றால் தெரிகிறது. அந்நூற்பாவில் ஒலி

அணுவினால் எழுத்தொலிகள் பிறக்கின்றன என்னும் ஜைன சமயக் கொள்கையை இவர் கூறுகிறார்.

> ***"ஆற்ற லுடையுயிர் முயற்சியின் அணுஇயைந்து***
> ***ஏற்ற ஒலியாய்த் தோன்றுதல் பிறப்பே"16.***

என்றார் ஆசிரியர் அவிநயனாரும் என்று மயிலைநாதர் தாம் நன்னூல் உரையில் மேற்கோளாகக் காட்டுகிறார்.

**நூல் அமைப்பு**

பேராசிரியர் அறவாணன் தம் பதிப்பில் எழுத்ததிகாரம், சொல் அதிகாரம், பொருள் அதிகாரம், யாப்பு அதிகாரம், அவிநயப் புறனடை, அவிநயனார் பாட்டியல் என வகுத்துக்கொண்டு நூற்பாக்களைத் தந்துள்ளார்.

**நூலின் காலம்**

அவிநயம் ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டில் எழுதப் பெற்றிருக்க வேண்டும். அந்நூல் பத்தாம் நூற்றாண்டு வரை சிறப்பாக விளங்கிப் பின்பு மறைந்து விட்டது போல் தோன்றுகிறது.

**நூலின் உரை**

இந்நூலுக்கு இராசப் பவுத்திரப் பல்லவதரையன் என்பவர் உரை எழுதி இருந்தார் என்பது மயிலைநாதர் நன்னூலுக்கு எழுதிய உரை வழி தெரிகிறது.

**நூல் பதிப்பு**

1975-இல் சமண இளைஞர் மன்றத்தின் வழி அவிநயம் எனும் நூலைப் பேராசிரியர் க.ப.அறவாணன் பல உரைகளிலிருந்து அவிநய நூற்பாக்களைச் சேகரித்துத் தொகுத்து, வகைப்படுத்தி வெளியிட்டுள்ளார்.

**காக்கை பாடினியம்**

காக்கை பாடினியார் பெண்பாற் புலவர் என்பது அவர் பெயரானே விளங்குகின்றது. பாடுவதையே தொழிலாகக் கொண்ட பழந்தமிழ்க் குடியினர் பாணர் எனப்பட்டனர். அப்பாணர் குடிப் பெண்டிர் "பாடினி" எனப்பட்டனர்.

**நூலாசிரியர் வரலாறு**

காக்கையை நோக்கி "விருந்து வரக் கரைவாய்" என்று பாடிய பெண்பாற் புலவர் ஒருவர் நச்செள்ளையார். அவரைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்றது சங்கத் தமிழ் உலகு (குறுந். 210). அவர் பெயர் வழிவழியாகச் சூட்டப் பெற்ற பெருமையால் பெயர் பெற்றவர் இக் காக்கைபாடினியாரும், சிறு காக்கை பாடினியாரும் எனலாம்.

**நூல் அமைப்பு**

மறைந்துபோன தமிழ்நூல்கள் என்ற நூலில் அவர்கள் மயிலை சீனி வேங்கடசாமி நூற்பாக்கள் அனைத்தையும் எடுத்துத் தொகுத்துத் தந்துள்ளார்.

அச்செய்திகளைத் தெளிவாக வகுத்துக் கொண்டு இலக்கண வல்லுநர் அறிஞர் இரா. இளங்குமரன் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என உட்பிரிவுகளைப் பிரித்து உறுப்பியல் என்றும், வெண்பாவும் அதன் வகைகளும், ஆசிரியப்பாவும் அதன் வகைகளும், கலிப்பாவும் அதன் வகைகளும், வஞ்சிப்பாவும் அதன் வகைகளும், மருட்பாவும் என வகுத்துச் செய்யுளியல் என்றும், தனிச்சொல், புறநடை, பொருள்கோள், விகாரம், குறிப்பிசை, வகையுளி, வனப்பு, வண்ணம் என்னும் பிரிவுகளாகப் பிரித்துப் பொதுவியலையும் அமைத்துக் காக்கை பாடினியாரின் நூற்பாக்களை 89 ஆக தருகிறார். இந்நூல் கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இந்நூலைக் காக்கை பாடினியம், மூலமும் - விளக்கச் சிற்றுரை, எனும் தலைப்பில் புலவர் இரா. இளங்குமரன், சைவசித்தாந்தக் கழகத்தில் 1974ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார்.

**சங்க யாப்பு**

சங்கயாப்பு என்னும் பெயருடைய யாப்பிலக்கண நூல் ஒன்று இருந்தது என்பதை யாப்பருங்கல விருத்தியுரையினால் தெரியவருகிறது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. யாப்பருங்கல விருத்தியுரை காட்டும் நூற்பாக்களில் வரும் உயிர், மெய், குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம், மாத்திரை, குற்றியலுகர, குற்றியலிகர வடிவு ஆகியவற்றை அறிய யாப்பிலக்கணம் கூறினர் எனினும் எழுத்திலக்கணமும் விளங்க உரைத்தார் சங்க யாப்புடையார் என்று கொள்ளமுடிகிறது. மயிலை சீனி வேங்கடசாமியின் மறைந்து போன நூல்கள்,

> ***“சங்க யாப்பு நூற்பாக்களாக அறியப்பெறும் 24 நூற்பாக்களைத் தொகுத்துக் காட்டுகிறது”.*** [17]

**சிறுகாக்கை பாடினியம்**

காக்கை பாடினியார் பின்னர், இவர் வாழ்ந்ததால் இரண்டு காக்கைபாடினியாரையும், வேறுபடுத்துவதற்காக இவர், சிறுகாக்கை பாடினியார் என அழைக்கப் பெற்றார் எனத் தெரிகிறது. பேராசிரியர் இவரை காக்கை பாடினியாருக்கு இளையரான சிறுகாக்கை பாடினியார் எனபர்.(தொல். செய்.1)

யாப்பருங்கலவிருத்தி உரைகார் காக்கை பாடினியார் நூற்பாவுக்குப் பின்னரே இவர் நூற்பாவை மேற்கோள் காட்டும் வரன்முறையைக்

கொண்டுள்ளார்.அதனாலும் அவர்க்குப் பின் தோன்றியவர் இவர் என்று கருதலாம். சிறுகாக்கை பாடினியார் தளை என்பதோர் உறுப்பைக் கொண்டிலர் என்பதும், குமரியாறு கடல்கொள்ளப் பட்ட காலத்தில் இருந்தவர் என்றும், (தொல். மரபு. 95) கூறுகிறார் பேராசிரியர்.

மயிலை சீனிவேங்கடசாமி, ‘‘மறைந்துபோன தமிழ் நூல்கள்’’ என்ற நூலில், சிறுகாக்கை பாடினியாரின் 31 நூற்பாக்களை ஒழுங்குபடுத்தி காட்டியுள்ளார்.

**நத்தத்தம் (நற்றத்தம்)**

நத்தத்தம் என்னும் பெயரிய புலவர் தம் பெயரால் நத்தத்தம் என்னும் யாப்பிலக்கண நூலைச் செய்தார் என்பதை யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியர் குணசாகரரும், யாப்பருங்கல விருத்தியுரைகாரரும், தத்தம் உரைகளில் கூறுவதிலிருந்து தெரிகிறது. தத்தன் என்பது அவருடைய பெயராக இருந்திருக்கலாம்.

**காரணம்**

தத்தனார் என்னும் பெயருடையவர் நல் என்னும் சிறப்புப் பெயர் பெற்று நற்றத்தனார் என வழங்கப்பட்டுப் பின்னர் நத்தத்தனார் என்றாகியிருக்கக் கூடும். நற்றத்தனார் என்றும் திரிபின்றி வழங்கப்பட்டுள்ளார். நற்றத்தனார் நத்தத்தனார் ஆனமையால் அவரியற்றிய நற்றத்தம் நத்தத்தம் எனப்பட்டிருத்தல் வேண்டும்.

**நூலாசிரியர் வரலாறு**

நத்தத்தம் என்னும் நூலின் ஆசிரியர் பற்றி,

> **‘‘நல்லூர் நத்தத்தனார் என்னும் சங்கப் புலவர் சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர். இவர் ஓய்மானாட்டு நல்லியக் கோடனைப் பாடியவர். புறநானூற்றில் பிசிராந்தையாரைக் கண்ட நத்தத்தனார் பாடியது எனப் பாடவேறுபாடு காணப்படுகிறது (218). இவர்களின் வேறொருவர் இந்த நத்தத்தனார் ஆவர். அகத்தியர் மாணவர் ஒருவர் நத்தத்தர் என்பதும், திருவள்ளுவ மாலைப் பாடல் ஒன்று நத்தத்தர் பெயர் கொண்டிருப்பதும் எண்ணத்தக்கன. இனி நத்தத்தர் அடிநூல் ஒன்று செய்தார் என்றும் நத்தத்திற்கே அடிநூல் என்றொரு பெயருண்டு என்றும் கூறுவர். ஆனால், அடிநூல் நக்கீரர் செய்ததாக அறியப்படுதலால் நக்கீரர்,நத்தத்தர் என ஏடு பெயர்த்தோர் மயக்கத்தால் நேர்ந்திருக்கக் கூடுமென எண்ண வேண்டியுள்ளது’’.**[18]

என்று யாப்பருங்கல விருத்தியுரை கூறியுள்ளது.

**பல்காயம்**

பல்காயனார் இயற்றிய நூல் பல்காயம். நூற்பெயரையும் ஆசிரியர் பெயரையும் யாப்பருங்கல விருத்தி உரைக்கிறது. தொல்காப்பியர் வெளிப்பட விரித்துரைத்த செய்திகளைப் பல்காயனார் பகுத்துப் பண்ணினார் என ஒரு

வெண்பா உரைக்கின்றது. காக்கைபாடினியார், சிறுகாக்கைபாடினியார், அவிநயனார் ஆகியோருக்குப் பல்காயனார் காலத்தால் முற்பட்டவராக இருக்கக் கூடும் என்பது யாப்பருங்கல விருத்தியில் மேற்கோள் காட்டும் வைப்புமுறைப் பெரும்பான்மையால் விளங்குகின்றது. தொல்காப்பியர், நற்றத்தர், பல்காயனார், காக்கைபாடினியார் என்னும் வைப்புமுறையைப் பல இடங்களில் கொள்கிறார்.

**பன்னிருபடலம்**

> **"அளவினால் பெயர் பெற்றது பன்னிருபடலம் என்பது இறையனார் களவியல். ஓத்தினாற் பிண்டமாயிற்று பன்னிருபடலம் என்று கூறுகிறார், இளம்பூரண அடிகள்".[19]**

**நூலாசிரியர் வரலாறு**

அகத்திய முனிவரின் மாணாக்கர் பன்னிருவரும் சேர்ந்து புறப்பொருள் இலக்கணம் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு படலம் இயற்றினார் என்றும், அவர்கள் இயற்றிய பன்னிரு படலங்களின் தொகுப்பே பன்னிருபடலம் என்னும் பெயர்பெற்ற நூலாயிற்று என்றும் கூறுவர்.

**மயேச்சுவரம்**

மயேச்சுவரர் என்னும் பெயருள்ள ஆசிரியர் யாப்பு இலக்கண நூல் செய்தார் என்பது, யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரால் தெரியவருகிறது. இவருக்குப் பேராசிரியர் என்ற பெயரும் வழங்கிவந்ததாக அறிகிறோம்.

**நூலாசிரியர் வரலாறு**

மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள்,

> ***"பிறைநெடுமுடிக் கறைமிடற்றரனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், நீர்மலி வார்சடையோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர், வாமமேகலை மாதையோர் பாகனார் நாமம் மகிழ்ந்த நல்லாசிரியர், திரிபுரமெரித்தவர் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், உயரும் புறநகரைச் செற்றவன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், திரிபுரமெரித்த எரிசுடர்க் கடவுள் திருபெயர் மகிழ்ந்த தொன்னூற் கவிஞர், பிறைமுடியோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர், பெருமான் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், காமவேளைக் கறுத்த புத்தேள் நாமந்தாங்கிய நல்லாசிரியர், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் திருப்பெயர் மகிழ்ந்த தொன்னூற் கவிஞர், இவ்வாறு பேராசிரியருக்குப் பல அடைமொழிகள் கொடுத்துக் கூறுகிற யாப்பருங்கல விருத்தியுரைகாரர், பல இடங்களில், மயேச்சுவரர் என்னும் பெயரையும் குறிக்கிறார். இதனால் மயேச்சுவரர் என்னும் சிவபெருமான் திருப்பெயரைத் தமக்கு இயற்பெயராகக் கொண்டவரே (மயேச்சுவரரே) பேராசிரியர் என்னும் சிறப்புப் பெயரையும் உடையவர் என்பதும், இருவரும் ஒருவரே என்பதும் தெரிகின்றன."[20]***

என்று குறிப்பிட்டுள்ளார்.

**அமுதசாகரம்**

நூலாசிரியர் கவிதையை அமிழ்தம் என்கின்றார். உள்ளம் என்ற கடலில் நூல் என்ற மத்துமலையை நாட்டிக் கேள்வி என்ற தூணில் பிணைத்துக் கடைந்தால் அமிழ்தம் என்ற கவிதை பிறக்கும் என்ற பாடலைத் தருகிறார்.

***"உள்ளப் பரவையின் நூல்வரை நாட்டின்ஒண் கேள்வி தம்பா***
***எள்ளப் படாமல் இயையக் கடையின் இசைபெருக்கும்***
***வள்ளல் குணநாவல் வானோர்களை வளமைப்படுக்கும்***
***வெள்ளைக்கவிதை அமிழ்தம் எல்லார்க்கும் வெளிப்படுமே"***

(யா.வி.95.மே.)

**நூலாசிரியர் வரலாறு**

யாப்பருங்கலத்தையும், யாப்பருங்கலக்காரிகையையும் எழுதியவர் அமிதசாகரர் என்றும் அழைக்கப்பெறுகிறார். இவர் பெயர்களாக அமிர்தசாகரர், அமுதசாகரர், அமிதசாகரர் என்று மூன்று நிலைகளில் இருந்துள்ளதை அறியமுடிகின்றது.

> **"தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையை அடுத்துள்ள நீடூர் சிவன் கோயில் தெற்குத் திருமதிலில் உள்ள கல்வெட்டுப் பாடலகள் ஒன்றில் அமுதசாகரர் என்றும், மற்றொன்று அமிர்தசாகரர் என்றும் குறிக்கப்பெற்றுள்ளன.**
> **அக்கல்வெட்டுகள் முதற் குலோத்துங்க சோழனின் 38ஆம் ஆட்சி ஆண்டிலும், 46ஆம் ஆட்சி ஆண்டிலும் எழுதப்பெற்றவை. அவன் காலம் கி.பி.1070-1120"** [21]

**நூல் அமைப்பு**

அறவாணன் அவர்கள் பதிப்பில் உறுப்பியல், பாவியல், ஒழிபியல், அகப்பொருள் என்ற நான்கு நிலைகளில் வகுத்து அந்நூலிற்கு உரையும் எழுதியுள்ளார்.

**நூல் பதிப்பு**

கி.பி.1974இல் அமுதசாகரம் என்ற நூல் க.ப. அறவாணன் பதிப்பித்து ஜைன இளைஞர் மன்றம் வழி வெளியிடப்பட்டுள்ளது.

**புறப்பொருள் வெண்பாமாலை**

பொருளிலக்கணத்தின் ஒரு பகுதியாகிய புறப்பொருளைப் பற்றி வெண்பா யாப்பில் ஓர் ஒழுங்குறத் தொடுக்கப்பட்ட நூல் புறப்பொருள் வெண்பாமாலை எனப்பட்டது. இந்நூலாசிரியர் ஐயனாரிதனார் என்னும் பெயர் திருவிடைக் கழியைச் சார்ந்த குரோஞ்சேரியிலுள்ள சாத்தாவின் (சாஸ்தா) பெயர் என்பர். சிலப்பதிகாரத்தில் கூறப்படும் பாசண்டச் சாத்தன், சாத்தனார் முதலிய பெயர்கள் எண்ணத்தக்கன. ஐயனார்க்கு இனியன் என்பதே ஐயனாரிதன் என்பதன் பொருளாகும்.

**நூல் அமைப்பு**

வெட்சி, கரந்தை, வஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்னும் ஒன்பது திணைகளுக்கும் திணை இலக்கணத்தைத் துறை வகையால் தொகுத்துக் கூறும் ஒன்பது நூற்பாக்கள் இந்நூலின் திணைதோறும் முதற்கண் உள்ளன. பத்தாவது பொதுவியல், சிறப்பிற் பொதுவியல், காஞ்சிப் பொதுவியல், முல்லைப் பொதுவியல் என நான்கு நூற்பாக்களையும் கைக்கிளைப் படலம் ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று என இரண்டு நூற்பாக்களையும் பெருந்திணைப்படலம் பெண்பாற்கூற்று, இருபாற்பெருந்திணை என இரண்டு நூற்பாக்களையும் ஒழிபு ஒரு நூற்பாவையும் புறம், புறப்புறம், என்பவற்றையும் விளக்கும். ஒரு நூற்பாவைக்கொண்டு 19 நூற்பாக்களை உடையதாக இந்நூல் அமைந்துள்ளது. நூற்பாக்களின் துறையை விளக்கும் கொளு என்னும் சிறு விளக்கம், 341 ஆக உள்ளது. மருட்பாக்கள் 20 வும் இணைந்து மொத்தம் 361 பாக்கள் உள்ளன.

**நூலின் காலம்**

இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பேராசிரியர், நச்சினார்க்கினியர், புறநானூற்று உரைகாரர், பரிமேலழகர் ஆகியோரால் இந்நூல் எடுத்தாளப்பட்டுள்ளது. இளம்பூரணர் காலத்திற்கு முற்பட்டது என அறிய வருதலால் இதன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு எனலாம்.

**நூலின் உரை**

புறப்பொருள் வெண்பாமாலையின் உரையாசிரியராக கி.பி. 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாமுண்டி தேவநாயகர் கருதப்பெறுகிறார்.

**நூல் பதிப்பு**

கி.பி.1835 ஆம் ஆண்டில் தாண்டவராய முதலியாரால் இதன் மூலம் மட்டும் பதிப்பிக்கப்பெற்றது. கி.பி. 1895 ஆம் ஆண்டு உ.வே.சாமிநாதையர் முதலில் பதிப்பித்தார்.

**தமிழ்நெறிவிளக்கம்**

விளக்கம் என்பது விளக்கு போன்ற ஒளி பொருந்தியது என்று பொருள். தமிழர்களின் ஒழுகலாறுகளை முறையாகக் கூறும் நூல் தமிழ் நெறி விளக்கம் என்பது பொருந்தும். விளக்கம் என்ற சொல்லால் அமைந்த முதல் இலக்கணநூல் தமிழ்நெறி விளக்கம். இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை.

**நூல் அமைப்பு**

தமிழ்நெறி விளக்கம் நூல் முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை. பொருளியல் என்னும் ஒரு பகுதியில் 25 நூற்பாக்களே கிடைத்துள்ளன.

அவற்றில் அகத்திணைக்கு இன்றியமையாத முதல், கரு, உரிப்பொருளை 13 நூற்பாக்களில் கூறுகிறார். களவு பற்றி கூறும் இவர் களவு கந்தருவத்துடன் ஒப்பது என்று கூறுகிறார். கற்பு என்ற பிரிவில் அறத்தொடு நிலை, உடன்செலவு, சேயிடைப்பிரிவு, ஆயிடைப்பிரிவு என நான்கு பகுதிகளாக அமைத்து விளக்குகிறார்.

**நூலின் காலம்**

> **"தமிழ்நெறி விளக்கம் எனும் இந்நூலையும் உரையையும் பார்க்கையில் இரண்டும் ஓராசிரியராலேயே இயற்றப்பட்டன என்று தோன்றுகிறது என்கிறார் உ.வே.சா.. பேராசிரியர் உரை, களவியற் காரிகை, பரிமேலழகர் உரை ஆகியவற்றில் இந்நூல் சுட்டப்படுதலால் அவர்கள் காலத்திற்கு முற்பட்டது இந்நூல் எனலாம். இதன் காலத்தைப் கி.பி.10ஆம் நூற்றாண்டு என்கிறது இலக்கிய வரலாறு".**[22]

**நூல் பதிப்பு**

நூலின் முற்பகுதி பிற்பகுதி ஆகிய இருபாலும் சிதைந்த நிலையில் கிடைத்த ஓர் ஏட்டைக் கொண்டு தள்ளாப் பொருளியல்பிற்றண்டமிழ் எனப் புலவர்களால் புகழப்படும் அகப்பொருட் பகுதியையேனும் அழிந்துபடாமல் காக்க வேண்டுமென்னும் ஆர்வத்தால் பெரும் பேராசிரியர் உ.வே.சாமிநாதரால் 1937-இல் பதிப்பிக்கப்பட்டது.

**யாப்பருங்கலம்**

கலம் என்ற சொல்லுக்கு அணிகலம் என்ற பொருளும், மரக்கலம், தோணி, கப்பல் போன்ற பொருளும் உள்ளன. யாப்புக்கு முதல் பெரிய நூலாக இது அமைகிறது. யாப்பாகிய செய்யுளுக்கு அணிகலம் போன்று அமைவது யாப்பருங்கலம். யாப்பாகிய கடலைக் கடக்க அமைந்த அரிய மரக்கலம் யாப்பருங்கலம் என்று இருநிலைகளில் பொருள் கூறலாம்.

**நூலாசிரியர் வரலாறு**

முதல் குலோத்துங்கன் காலத்து வாழ்ந்தவன் கண்டன் மாதவன் என்பான். அவன் சோழன் தலைமையில் குளத்தூர் மன்னனாக – சிற்றரசனாக – விளங்கினான். அவன் காலத்தில் குளத்தூர் காரிகைக் குளத்தூர் என வழங்கப் பெற்றது. அவன் முன்னோருள் ஒருவன் அமிதசாகர முனிவரைக் குளத்தூர்க்கு அழைத்து இருக்கச்செய்து காரிகை நூல் இயற்றுவித்தான். இச்சிறப்பால் அவ்வூர் காரிகைக் குளத்தூர் என வழங்கப்பெற்றது.

யாப்பருங்கலத்தையும், யாப்பருங்கலக்காரிகையும் எழுதியவர் அமிதசாகரர் என்றும் அழைக்கப்பெறுகிறார்.

அக்கல்வெட்டுகள் முதற் குலோத்துங்க சோழனின் 38ஆம் ஆட்சி ஆண்டிலும், 46ஆம் ஆட்சி ஆண்டிலும் எழுதப்பெற்றவை. அவன் காலம் கி.பி.1070 முதல் 1120 வரை அறியமுடிகின்றது.

**நூல் அமைப்பு**

யாப்பருங்கலம் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்ற மூன்று இயல்களை உடையது. உறுப்பியலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை கூறப்பெறுகின்றன. செய்யுளியலில், ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய நால்வகைப் பாக்கள் பற்றியும், அவற்றின் இனங்கள் பற்றியும் பேசப்படுகின்றன. மூன்று நூற்பாக்கள் மட்டும் ஒழிபியலில் உள்ளன. பாயிரம், சிறப்புப் பாயிரம் இவை நீங்கலாக மொத்தம் 96 நூற்பாக்கள் இந்நூலில் உள்ளன. அவற்றின் மொத்த அடிகள் 222. அனைத்தும் அளவடிகள், தனிச்சொல் ஒன்று தானும் இல்லா நூற்பா அகவல் அடிகள்.

**நூல் எழுந்த காலம்**

இரா. இளங்குமரன் இந்நூல் எழுந்த காலமாக,

> ***“செயங்கொண்ட சோழன் என்பவன் முதல் இராசஇராசன். அவன் பெயராலேயே தொண்டை நாடு செயங்கொண்ட சோழமண்டலம் எனப்பெயர் பெற்றது. ஆதலால் அவ்விராசராசன் காலத்திலேயே அமிதசாகரர் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாம். அவன் ஆட்சிக்காலம் கி.பி. 985 – 1014. எனவே அமிர்தசாகரர் கி.பி. பத்தாம் நூற்றாண்டினர் என்பது உறுதி”.***[23]

என்று கூறியுள்ளார்.

**உரை**

யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியரான குணசாகரரே யாப்பருங்கல விருத்திக்கும் உமைரயாசிரியராகவும் இருந்துள்ளார் என்பது பொது எண்ணம். இரண்டு நூல்களில் உரைகளிலும் உரையாசிரியர் எடுத்தாளும் இலக்கண மேற்கோள் நூற்பாக்களும், உதாரண இலக்கியங்களும், ஒற்றுமை உடையனவாக இருத்தலாலும், உரைநடை பலஇடங்களில் ஒன்றாக அமைவதாலும், இருநூல்களுக்கும் உரையாசிரியர் ஒருவரே என்று கருத இடமுண்டு.

**நூல்பதிப்பு**

யாப்பருங்கல விருத்தியின் முதற்பதிப்பு சரவண பவானந்தரால் 1916,1917 ஆம் ஆண்டுகளில் முதற்பாகம் இரண்டாம் பாகமென வெளியிடப்பட்டது. சென்னை அரசு சார்பில் பெரும்புலவர் மே.வீ. வேணுகோபாலரால் 1960-இல் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் வழியாக

இரா.இளங்குமரன் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட பதிப்பு 1973 - இல் வெளிவந்துள்ளது.

**யாப்பருங்கலக் காரிகை**

யாப்பருங்கலம் என்னும் யாப்பியற்கு அங்கமாய் அலங்காரம் உடையதாகச் செய்யப்பட்டமையான் யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயர்த்து எனக் குணசாகரர் வரைவது (1) இந்நூற் பெயர்ப் பொருளை விளக்கும்.

**காரணம்**

காரிகை என்ற சொல்லுக்கு அழகு, அழகான பெண், கட்டளைக்கலித்துறை என்று பல பொருள்கள் உள்ளன. யாப்பாகிய அரிய ஆபரணத்திற்கு அழகான பெண் தேவை. இந்நூல் மகடூஉ முன்னிலை என்ற நிலையில் அமைந்துள்ளது. அதாவது பெண்ணை விளித்துப் பாடுவது என்று பொருள். காரிகை என்பது இலக்கணம் இயம்பும் கட்டளைக் கலித்துறைப் பாடல்களைக் குறிப்பதாகலின் அப் பாவகையான் அமைந்த நூல் இப்பெயர் பெற்றதென்றும் கொள்ளவும் இடமுள்ளது. இந்நூலின் ஆசிரியர் அமிர்தசாகரர் ஆவார். இவரே யாப்பருங்கலத்திற்கும் ஆசரியர்.

**நூல் அமைப்பு**

காரிகை, உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் 3 இயல்களையும் 3 இயல்களுக்கும் முறையே 20, 15, 9 ஆக காரிகைகளையும் கொண்டுள்ளது. இவற்றுள் நேரசை முதலாகிய காரிகை 21, நிரையசை முதலாகிய காரிகை 23, நேரசை முதலாகிய காரிகை அடிக்கு ஒற்று நீக்கிய எழுத்து 16, நிரையசை முதலாகிய காரிகை அடிக்கு ஒற்று நீக்கிய எழுத்து 17, ஆக இவ்வகையால் கணக்கிட மொத்த எழுத்துகள் 2908. இதனைக் கிரந்தவகையால் கணக்கிடும் உரையாசிரியர் 90 கிரந்தமும் 28 எழுத்தும் என்கிறார். ஒரு கிரந்தத்திற்கு எழுத்து 32 என்பது வடமொழிக் கணக்கீடு.

**சூழல்**

அமிதசாகரர் பெருவாழ்வுடையராக விளங்கினார் என்றும், முதற்கண் யாப்பருங்கலத்தைச் செய்து, அதன் பின்னர் ஏற்பட்ட பட்டறிவால் கட்டொழுங்கும் எளிமையும் இனிமையும் விளங்க எவரும் எளிமையாய்க் கற்றுத் தெளியவேண்டும் என்னும் பெருநோக்கால் நன்முதுமையில் யாப்பருங்கலக் காரிகையை இயற்றினார்.

**நூல்பதிப்பு**

1. யாப்பருங்கலக் காரிகை குணசாகரர் உரையுடன் கி.பி.1851 ஆம் ஆண்டு களத்தூர் வேதகிரி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.
2. கி.பி.1864 - இல் நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரால் ஐந்திலக்கண மூலப்பதிப்பில் காரிகையும் பதிப்பிக்கப்பட்டது.
3. கி.பி. 1870 - இல் கொட்டையூர் சி. சாமிநாத தேசிகர் எழுதிய யாப்பிலக்கணச் சுருக்கம் வெளிவந்தது.
4. கி.பி. 1888 - இல் முத்துத் தம்பிப் பிள்ளை யாப்பிலக்கண சூசனம் வெளிப் படுத்தினார்.
5. கி.பி. 1898 - இல் யாப்பிலக்கணச் சுருக்கம் திருச்சி முத்தி சிதம்பரம் பிள்ளையால் வெளியிடப்பட்டது.
6. யாப்பிலக்கண வினா விடை அமிர்தம் பிள்ளையாலும், விசாகப் பெருமாளையராலும் கொண்டு வரப்பட்டது.
7. 1899 ஆம் ஆண்டு குமாரசாமிப் புலவர் யாப்பருங்கலக் காரிகைக்குப் புத்துரை எழுதினார்.
8. 2009 ஆம் ஆண்டு அ. குமாரசாமிப் புலவர் உரை முனைவர் இரா. கண்ணன் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.
9. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை வெளியீடுகளாகவும், பிறர் வெளியீடுகளாகவும் காரிகை பல பதிப்புளைக் கண்டுள்ளது.
10. புலவர் குழந்தையின் யாப்பதிகாரம், தொடையதிகாரம், பேராசிரியர் அ.கி.பரந்தாமனாரின் கவிஞராக, அறிஞர் கி.வா.சகந்நாதரின் நீங்களும் கவிபாடலாம், புலவர் இரா.இளங்குமரனின் எளிதாகப் பாடலாம் முதலியவை யாப்பிலக்கணச் செய்திகளை எளிய உரைநடை வழியாகப் பரப்ப மேற்கொண்ட முயற்சிகள் ஆகும்.

**வீரசோழியம்**

வீரராசேந்திர சோழன் என்பானுக்கு ஒரு பெயர் வீரசோழன் என்பது. அவன் பெயரால் பொன்பற்றியூர்ச் சிற்றரசர் புத்தமித்திரர் என்பார் இயற்றிய நூல் வீரசோழியம் ஆகும்.

**நூலாசிரியர் வரலாறு**

புத்தமித்திரனார் என்னும் பெயர் கொண்டே இவர்தம் சமயம் அறியவரும். அன்றியும், "போதியின் மேதக்கிருந்தவன்...... பாதம் தலைமேற் புனைந்து தமிழுரைக்கப் புக்கவன், பைம்பொழிற் பொன்பற்றி மன்புத்த மித்திரனே" என்பதும் நிலைப்படுத்தும் (பாயி.1) இவரூராகிய பொன்பற்றி மிழலைக் கூற்றம் சார்ந்ததென அறியவருதலால் (179 மேற்.) இவர் பாண்டி நாட்டவராவர். இவரூர் அறந்தாங்கி வட்டத்தில் பொன்பேத்தி என வழங்குவது என்பர்.

"அவலோகிதன் என்பானிடத்து அகத்தியன் தமிழ் கேட்டு, அதனை உலகுக்கு வழங்கினான்" என்று பாயிரத்தில் வரும் செய்தியால் அவ்வாறு ஒரு கருத்து உலவியமையை அறியமுடிகின்றது.

**நூல் அமைப்பு**

வீரசோழியம் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பால் அமைந்துள்ளது. பெரும் பிரிவு "அதிகாரம்" எனவும், உட்பிரிவு "படலம்" எனவும் கூறப்பட்டுள்ளது. எழுத்ததிகாரத்தில் சந்திப்படலம் என ஒரு படலமும், சொல்லதிகாரத்தில் வேற்றுமைப்படலம், உபகாரகப்படலம், தொகைப்படலம், தத்திதப் படலம், தாதுப் படலம், கிரியா பதப்படலம் என ஆறு படலங்களும், பொருளதிகாரத்தில் பொருட்படலம் என ஒரு படலமும் ஆக ஐந்ததிகாரங்களும் பத்துப் படலங்களும் உடையதாக அமைந்துள்ளது பாயிரம்.

**நூல் எழுந்த காலம்**

வீரசோழன் பெயர்விளங்க புத்தமித்திரரால் எழுதப்பட்டது வீரசோழியம். இவ்வேந்தன் காலம் கி.பி.11ஆம் நூற்றாண்டு. அக்காலமே புத்தமித்திரருடைய காலமுமாம். இந்நூலிற்குப் பெருந்தேவனார் உரை எழுதியுள்ளார்.

**நூல்பதிப்பு**

வீரசோழிய முதற்பதிப்பு கி.பி. 1881-இல் சி.வை.தாமோதரம் பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பும் அவரால் 1885 - இல் கொண்டுவரப்பட்டது. 1886 - இல் மூலப்பதிப்பு இராமசுவாமிகள் என்பவரால் பதிப்பிக்கப்பட்டது. கழகப் பதிப்பாகக் கா.ர.கோவிந்தராச முதலியாரின் குறிப்புரை, விளக்கவுரைகளுடன் வெளிவந்தது.

**இந்திரகாளியம்**

யாமளேந்திரர் என்பவரால் இயற்றப்பட்ட பாட்டியல்நூல் இந்திரகாளியம்.

**நூலாசிரியர் வரலாறு**

இரா.கண்ணன்,

**“யாமளேந்திரர் என்ற பெயரால் நாடக இந்திரகாளியத்தை எழுதிய பிறகு அந்நூற் பெருமையே பற்றி, அவரும் இந்திரகாளியார் என்ற சிறப்புப் பெயரை எய்தியிருத்தல் கூடும் என்றும் பின் அச்சிறப்புப் பெயரால் பாட்டியல் இந்திரகாளியத்தை யாத்திருத்தல் ஒல்லும் என்றும் கருதலாம் என மு. அருணாசலம் அவர்கள் விளக்குமாறு யாமளேந்திரர் பாடியதே இந்திரகாளியம் என்றும் இவ்வாசிரியர் காளி உபாசகரான சைவர் என்றும் கோடல் சற்றேனும் பிழையாகாது.”** [24]

என்றுணர்க என்று கூறியுள்ளார்.

**நூல் அமைப்பு**

இரா.கண்ணன்,

***“நூற் பொருத்தம், இலக்கிய வகையின் இலக்கணம், பொது எனும் இம்மூன்று பொருண்மைகளையே கிடைத்திருக்கும் இந்திரகாளியச் சூத்திரங்கள் விளக்குவனவாக உள்ளமையால், இந்திரகாளியம் மூன்று ஓத்துகளாகப் பாடப் பெற்றிருக்கும் எனத் துணியலாம். துணியின், முதலோத்தில் நூற்பொருத்தங்களும், இரண்டாமோத்தில் இலக்கிய வகைகட்கான இலக்கணமும், மூன்றாம் ஓத்தில் பொதுச் செய்திகளும் விளக்கப் பட்டிருக்கும் எனக் கருதலாம். என்னை? எனின், கிடைத்திருக்கும் பாட்டியல் நூல்கள் யாவும் இம் முறைமையானே இயல்களைப் பகுத்து இலக்கணம் ஓதியுள்ளன வாதலான் என்க. அஃதே யன்றி, இந்திரகாளியத்தின் வழிநூலான வெண்பாப் பாட்டியல் எனும் வச்சணந்தி மாலை எனப் பெயரிய பாட்டியல் நூலும் மேற்காட்டியவாறே நூற்பிரிவுகளமைய இலக்கணம் நுவன்றுள்ளமையால், முதனூலான இந்திரகாளியமும் அவ்வாறே நூற் பிரிவுகளைக் கொண்டு இலக்கணம் கூறியிருக்கும் எனத் துணியலாம்.”*** [25]

என்றும்,

**இந்திரகாளியச் சூத்திரத் தொகை**

| | | |
|---|---|---|
| “1. | **பன்னிருபாட்டியல் உணர்த்துவன** | **- 34** |
| 2. | **வெண்பாப்பாட்டியல் உரை உணர்த்துவன** | **- 07** |
| 3. | **நவநீதப்பாட்டியல் உரை உணர்த்துவன** | **- 04** |
| 4. | **இலக்கண விளக்கம் உரை உணர்த்துவன** | **- 04** |
| | **ஆக மொத்தம்** | **- 49** |

**மேற்காட்டிய பன்னிருபாட்டியல் முதலான நான்கு பாட்டியல்களின் வழி அறியப் பெறும் நாற்பத்தொன்பது சூத்திரங்களில் பத்து சூத்திரங்கள் இரு பாட்டியல் நூல்களில் பயின்று வருவனவாதலால் அவற்றைக் கழிக்க மீதம் உள்ள முப்பத்தொன்பது சூத்திரங்கள் இந்திர காளியச் சூத்திரத் தொகை என அறிக.**

**கிடைக்கப் பெற்றுள்ள முப்பத்தொன்பது இந்திர காளியச் சூத்திரங்களில் ஆறு சூத்திரங்கள் இலக்கிய வகையின் இலக்கணம் கூறுவன, ஒரு சூத்திரம் பொதுவியல் செய்தியைக் கூறுவது, எஞ்சிய முப்பத்திரண்டு சூத்திரங்களும் நூற்பொருத்தம் கூறுவன. நூற்**

**பொருத்தங்களான மங்கலம் முதலான பத்துப் பொருத்தங்களிற்கும் உரிய இந்திரகாளியச் சூத்திரத் தொகை விவரம் பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| 1. **மங்கலப்பொருத்தம்** | | |
| 2. **சொல்பொருத்தம்** | | |
| 3. **எழுத்துப்பொருத்தம்** | | |
| 4. **தானப்பொருத்தம்** | - | 1 |
| 5. **பால்பொருத்தம்** | | |
| 6. **உண்டிப்பொருத்தம்** | - | 8 |
| 7. **வருணப்பொருத்தம்** | - | 2 |
| 8. **நாள்பொருத்தம்** | - | 1 |
| 9. **கதிப்பொருத்தம்** | - | 2 |
| 10. **கணப்பொருத்தம்** | - | 18 |
| **ஆக மொத்தம்** | - | 32"[26] |

என விளக்கியுள்ளார்.

**நூலின் காலம்**

இந்திரகாளியம் கி.பி.ஏழாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில் எழுந்தது.

**நூல்பதிப்பு**

1. 1974 - இல் மூலமும் பொழிப்புரையுமாக அறிஞர் க.ப.அறவாணன் அவர்கள் பதிப்பித்துள்ளார். சென்னை சைன இளைஞர் மன்றம் இந்நூலை வெளியிட்டுள்ளது.
2. 2003 - இல் மூலமும் உரையுமாக முனைவர் இரா. கண்ணன் அவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

**நேமிநாதம்**

குணவீர பண்டிதர் என்பவரால் செய்யப்பட்ட இலக்கணநூல் நேமிநாதம் ஆகும். நேமிநாதர் என்பவர் சமண சமயத் தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் இருபத்து இரண்டாம் தீர்த்தங்கரராக விளங்கியவர். அவர் தம் பெயரால் செய்யப்பட்டமையால் இப்பெயர் பெற்றது.

**நூலாசிரியர் வரலாறு**

குணவீரபண்டிதர் எழுதிய மற்றொரு நூல் வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல், இவர்

***"கற்றவர் புகழும் களந்தையென் பெரும்பதி***
***குற்றமில் வாய்மை குணவீர பண்டிதர்"***

எனக் குறிக்கப்பெறுகிறார். களந்தை என்னும் ஊர் களத்தூர் என்றும் அழைக்கப்பெற்றுள்ளது எனத் தொண்டைமண்டல சதகம் கூறுகிறது. அக்களத்தூர் தொண்டைமண்டலத்துக் கோட்டங்கள் இருபத்திநான்கனுள் ஒன்று.

காஞ்சிக்குத் தென்கிழக்கில் 45 கிலோமீட்டர் தொலைவில் அவ்வூர் உள்ளதென என்பதும், சமணசமயத்தவர் என்பதும், பாயிரப்பகுதியால் அறியமுடிகின்றது.

**நூல் அமைப்பு**

நேமிநாதம் எழுத்து, சொல் இலக்கணங்களைக் கூறும் நூல். இந்நூலில் ஆசிரியர் எழுத்ததிகாரத்தை உட்பிரிவுகளின்றி 24 வெண்பாக்களாலும், சொல்லதிகாரத்தை 9 இயல்களுடன் 71 வெண்பாக்களாலும், அவையடக்கச் செய்யுள்கள், தற்சிறப்புப் செய்யுள்கள் ஆகியவை நான்கும், இணைந்து 99 வெண்பாக்களாக வகுக்கப்பட்டுள்ளது.

**நூல் எழுந்த காலம்**

இரா. இளங்குமரன்,

> **“வெண்பாப் பாட்டியல் உரைப்பாயிரத்தில்,“காலம் என்பது இன்னார் காலத்து இந்நூல் செய்த தென்றல். இந்நூல் யார் காலத்துச் செய்ததோ எனின், குருத்தவா மணிமுடிக் கொற்றவர் கோமான், திருத்தகு மணிமுடித் திரிபுவன தேவன் என்னும் அரசன் காலத்திற் செய்தது என்று உணர்க” எனப்பட்டுள்ளது. இவ்வரசனை ஆயந்த நேமிநாத முதற்பதிப்பாசிரியர் இரா. இராகவ ஐயங்கார், “ திரிபுவன தேவன் என்னும் பெயருடையவன் குலோத்துங்க சோழன். அவன் காலம் இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முற்பட்டது” என்பர். இக் குலோத்துங்கன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவன். இவன் காலம் கி.பி.1178-1218. ஆதலால் இக்குணவீர பண்டிதரின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியாகவோ, பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கமாகவோ இருத்தல் வேண்டும். “ குலோத்துங்கன்” என்னும் பெயரமைதியைச் சுட்டுகிறது உரை (10). இக்குலோத்துங்கன் முதற்குலோத்துங்கன் என்பாரும் உள். அவ்வாறாயின் இந்நூலின் காலம் கி.பி. 985 முதல் 1014 வரை ஆகும்”[27].**

என்று கூறியுள்ளார்.

**நூல்பதிப்பு**

நேமிநாத முதற் பதிப்பாசிரியர் இரா.இராகவயங்கார். இந்நூலின் இரண்டாம் பதிப்பு கழகத்தின் வழியே 1945 இல் வெளிவந்தது. பதிப்பாசிரியர் கா.ர.கோவிந்தராச முதலியார்.

**வெண்பாப் பாட்டியல்**

வெண்பா யாப்பால் அமைந்த பாட்டியல் நூல் என்பதால் இப்பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் நேமிநாதத்தை இயற்றிய குணவீரபண்டிதரே ஆவர். இவர் தம் ஆசிரியர் வச்சணந்தி. அவர் பெயரைக் கொண்டு வச்சணந்தி மாலை எனும்பெயராலும் வழங்கப்படுகிறது.

**நூலாசிரியர் வரலாறு**

"*கற்றவர் புகழும் களந்தையென் பெரும்பதி*
*குற்றமில் வாய்மை குணவீர பண்டிதர்*"

எனக் குறிக்கப்பெறுகிறார். களந்தை என்னும் ஊர் களத்தூர் என்றும் அழைக்கப்பெற்றுள்ளது எனத் தொண்டைமண்டல சதகம் கூறுகிறது. அக்களத்தூர் தொண்டைமண்டலத்துக் கோட்டங்கள் இருபத்திநான்கனுள் ஒன்று. காஞ்சிக்குத் தென்கிழக்கில் 45 கிலோமீட்டர் தொலைவில் அவ்வூர் உள்ளதென என்பதும், சமணசமயத்தவர் என்பதும், பாயிரப்பகுதியால் அறியமுடிகின்றது.

**நூல் அமைப்பு**

வெண்பாப் பாட்டியல் என்னும் வச்சணந்திமாலை அந்தாதி முறையில் அமைந்துள்ளது. அதனாலேயே மாலை என்னும் பெயர் பெற்றது. இந்நூல் மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயல்களிலும் முறையே 22, 48, 30 ஆக 100 வெண்பாக்களை உடையது. மேலும் பாயிரம் 2, வச்சணந்தியார் பெருமை 1, அவையடக்கம் 1, என நான்கு வெண்பாக்களும் அமைந்துள்ளன. மொழியியல் என்ற முதலியலில் மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணா, வருணம், நாள், கதி, கணம் எனப்படும் பத்துப் பொருத்தங்களைக் கூறுகிறது. செய்யுளியல் எனப்படும் இரண்டாவது இயலில் நால்வகைக் கவிகள், பிள்ளைக்கவி முதல் அகலக்கவி ஈறாகிய நூல்வகைகள், கமகன், வாதி, வாக்கி, புன்கவிஞர் ஆயோர் தன்மை ஆகியவற்றைக் கூறுகிறது. பொதுவியல் எனப்படும் மூன்றாவது இயலில் நாற்பாக்களின் சாதி, இராசி, தேவதை, பாடும்விதம், உறுப்புச் செய்யுள், அயலக்கவி புனைவோர், நல்லவை, நிறையவை, தீயவை, அந்தணர் முதலியோர் இயல்பு, பாயிரத்திலக்கணம், அகலக் கவி கேட்பிக்கும் முழுத்தம் ஆகியவற்றைக் கூறுகின்றது.

**நூலின் காலம்**

பாடப்படும் பொருள்பற்றி நூல் பெயர் பெறுவதற்கு இவர் கூர்மபுராணத்தை எடுத்துக் காட்டுதலால், அதிவீரராம பாண்டியன் காலத்திற்கு இவ்வுரையாசிரியர் பிற்பட்டவர் எனக் கொள்ளலாம். அதிவீரராம பாண்டியன்

காலம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு. எனவே, இந்நூலும் அக்காலக்கட்டத்தைச் சார்ந்தது எனக் கொள்ளமுடிகின்றது.

**நூல்பதிப்பு**

கி.பி. 1900 - ஆம் ஆண்டில் இதன் முதற்பதிப்பு வெளிவந்தது.

கி.பி. 1936 - இல் பழைய பொழிப்புரை குறிப்புரை ஆகிய பழைய உரையுடன் புதிதாக வரையப்பட்ட விளக்கவுரையும் சேர்த்துக் கழகம் வெளியிட்டது. இதற்கு விளக்கவுரை வரைந்தவர் கொ. இராமலிங்கத் தம்பிரான் ஆவர்.

**தண்டியலங்காரம்**

தண்டி என்னும் புலவரால் இயற்றப்பட்ட அணி நூலானமையால் தண்டியலங்காரம் எனப்பட்டது.

**நூலாசிரியர் வரலாறு**

> **“நூலாசிரியரான தண்டி குறித்துத் தமிழிலக்கிய உலகில் ஒரு மயக்கம் உண்டு. அஃதாவது வடமொழியில் காவியாதர்சத்தைப் பாடிய தண்டியே தமிழ் அலங்கார நூலையும் பாடினார் என்பது அது. இக்கருத்து மெய்யுரை அன்று. காவியதர்சத்தின் தழுவல் நூலான தண்டியலங்காரத்தைப் பாடியவர் பன்னிரண்டாம் நூற்றாண்டினர். காவியாதர்சம் ஏழாம் நூற்றாண்டில் எழுந்தது. எனவே இவ்விரு நூல்களையும் ஒருவரே பாடினார் எனக் கருதுவது எவ்வகையிலும் பொருந்தாது.**
>
> **தண்டியலங்கார நூலின் ஆசிரியர் தண்டியின் வரலாறு குறித்துக் கீழ் வரும் முடிவுகள் ஏற்கப்பட்டுள்ளன. அவை:**
>
> 1. **தண்டியலயங்கார ஆசிரியர் சோழ நாட்டினர். கம்பரின் மகனான அம்பிகாபதியின் புதல்வர். இதனை, “ பூவிரி தண்பொழில் காவிரி நாட்டு” எனத் தொடங்கும் தண்டியலங்காரச் சிறப்புப் பாயிரப் பாடலால் அறியலாம்.**
> 2. **இத்தண்டி ஒட்டக்கூத்தரின் மாணவர். இவ்விருவரும் சோழ நாட்டின் மலரி எனும் ஊரினர்.**
> 3. **தண்டி சைவ சமயத்தைச் சார்ந்தவர். இரண்டாம் குலோத்துங் சோழனின் காலமான பன்னிரண்டாம் நூற்றாண்டினர் என்பனவாகும்”.**[28]

என்று கூறியுள்ளார்.

**நூல் அமைப்பு**

தண்டியலங்காரம் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்றியல்களை உடையது. பொதுவணியியலில் செய்யுள் வகை, அவற்றின் இலக்கணம், வைதருப்ப கௌட நெறிகள் ஆகியவற்றை 26 நூற்பாக்களில் கூறுகிறது. பொருளணியியலில் தன்மையணி முதல் பாவிக அணி இறுதியாக 35 அணிகளின் இலக்கணத்தை 65 நூற்பாக்களில் கூறுகிறது. சொல்லணியியலில் மடக்கின் வகைகள், அவற்றின் இலக்கணம், சித்திரக்

கவிகளின் இலக்கணம், வழுக்கள் வழுவமைதிகள் மலைவுகள் ஆகியவற்றை 65 நூற்பாக்களில் கூறுகிறது. இந்நூலின் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு.

**உரை**

தண்டியலங்காரத்திற்குப் பழைய உரை ஒன்று உண்டு. அவ்வுரை சுப்பிரமணிய தேசிகர் உரை என்பர். அத்தேசிகர் திருவாவடுதுறை திருமடத்தின் 14 ஆம் பட்டத்தில் இருந்தவர் என்றும் கூறுவர். ஆனால், தண்டியலங்கார உரை அனபாய சோழன் காலத்தில் இயற்றப்பட்டது என்பது அந்நூலின் உரையில் உள்ள மேற்கோள்களால் தெரிய வருகின்றது. அந்நூலின் உரையாசிரியர் பெயர் விளங்கவில்லை என்கிறார் உ.வே.சா. அவர்கள்.

**நூல்பதிப்பு**

1. 1857 ஆம் ஆண்டு தில்லையம்பூர் சந்திரசேகர கவிராச பண்டிதர் பதிப்பு வெளியிடப்பட்டது.
2. 1901 இல் வை.மு.சடகோப இராமாநுசா சாரியார் குறிப்புரையுடன் வெளியிட்டார்.
3. 1903 இல் மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனர் பாண்டித்துரையார் விருப்பத்திற்கு இணங்க சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் இயற்றிய புத்துரை வெளிவந்தது.
4. 1920 இல் செம்பூர் வீ. ஆறுமுகம் சேர்வை பதிப்பு, கா.ர. கோவிந்தராச முதலியார் துணையுடன் வெளிவந்தது.
5. 1938 இல் கொ. இராமலிங்கத் தம்பிரான் குறிப்புரையுடன் கழகப் பதிப்பு வெளியிடப்பட்டது.
6. 1962 இல் கு. சுந்தரமூர்த்தியார் விளக்கவுரைப் பதிப்பும் வெளியிடப்பட்டது.
7. நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் மூலப்பதிப்பொன்றும் 1864 இல் வெளிவந்தது. அ∴து ஐந்திலக்கண மூலமுடையது. 1924 இல் கழக வழி ஐந்திலக்கண மூலப்பதிப்பு வந்துள்ளது. அணியியல் விளக்கம் என்றொரு நூல் திருத்தணிகை சரவணப் பெருமாளையரால் 1875 இல் வெளியிடப்பட்டமை அறியவருகின்றது.
8. 2003 ஆம் ஆண்டு முனைவர் இரா. கண்ணன் அவர்களால் “அணியிலக்கண வரலாறு” என்னும் தலைப்பில் தழிழணி இலக்கணத் தோற்றம் வளர்ச்சி ஆகியன குறித்து ஆய்கின்ற நூல் வெளியிடப்பட்டது.

**நம்பி அகப்பொருள் விளக்கம்**

நாற்கவிராசர் நம்பி என்பவர், அகப்பொருள் விளக்கம் எனும் நூலை எழுதினார். அந்நூல் நம்பியகப்பொருள் என்று அழைக்கப்பெறுகின்றது.

**நூலரிரியர் வரலாறு**

நாற்கவிராச நம்பி என்பதில் நம்பி இயற்பெயர் என்பர். முன்னாளில் எட்டி, காவிதி என்பவை போல நம்பி என்பது அரசு வழங்கிய சிறப்புப் பட்டப் பெயராகவும் விளங்கியுள்ளது. அறிவுடை நம்பி, நம்பி நெடுஞ்செழியன் முதலிய பெயர்களில் இயற்பெயராக இருத்தல் போல் இப்பெயர் இருக்கவும் கூடும். நால்வகைப் பாக்களிலும் தேர்ச்சியாக இருந்தமையால் இப்பெயர் பெற்றார் என்பதைப் பெயர் கொண்டு அறியலாம். இவர் நாற்கவிப் புலமையர் என்பதைக் காட்டுவதற்குத் தக்க நூலோ, தனிப் பாடல்களோ கிடைக்கவில்லை.

**நூல் அமைப்பு**

இந்நூல் 116 நூற்பாக்களைக் கொண்ட அகத்திணை இயல், 54 நூற்பாக்களைக் கொண்ட களவியல், 29 நூற்பாக்களைக் கொண்ட வரைவியல், 10 நூற்பாக்களைக் கொண்ட கற்பியல், 43 நூற்பாக்களைக் கொண்ட ஒழிபியல் என ஐந்தியல்களைக் கொண்டுள்ளது. எனினும் ஒழிபியலில் 43, 42 என இருவகைக் கணக்கீடுகள் அமைந்துள்ளன. அகத்திணையியலில் 117 நூற்பாக்கள் என்றும் ஒரு வெண்பாவால் அறிந்து கொள்ள முடிகின்றது. அது,

***"அகத்திணை நூற்றுப் பதினேழ் அடங்கா***
***மிகுந்தகளவு ஐம்பதுடன் மேல்நான்கு – இகுத்த***
***வரைவு இருபத் தொன்ப.்.து மன்னுங்கற்பு ஈரைந்து***
***உரையொழிபு நாற்ப.்.தோடு ஒன்று"***

என்பதாகும்.

**நூல் எழுந்த காலம்**

சிறப்புப் பாயிர உரை விளக்கத்தில், "காலம் பாண்டியன் குலசேகரன் காலம்" என்று வருவது கொண்டு, குலசேகரபாண்டியன் என்பவன் முதல் சடையவர்மன் குலசேகரனே என்றும், அவன் காலம் கி.பி. 1192 – 1266 ஆதலால், இவர் காலம் 12 ஆம் நூற்றாண்டின் இறுதியும் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாம் என்றும் கொள்வர்.

**நூல்பதிப்பு**

1. "இலக்கண பஞ்சகம்" என்னும் தொகுப்பில் நம்பியகப் பொருள் மூலம் இடம் பெற்று வெளிவந்தது. வெளிக்கொணர்ந்தவர் தாண்டவராய முதலியார். 1864 இல் நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் அத்தகையதொரு மூலப்பதிப்பு வெளியிட்டார்.

2. 1878, 1879 ஆகிய ஆண்டுகளில் வைத்தியலிங்கம் பிள்ளை பதிப்பும், மற்றொரு பதிப்பும் வந்துள்ளன. இவை உரையோடு கூடிய பதிப்புகள். 1907 இல் தெல்லிப்பாழை சிவாநந்தையர் உரையுடன் பதிப்பித்தார்.
3. சுன்னாகம் அ. குமாரசாமிப்பிள்ளை, தி.த. கனகசுந்தரம் பிள்ளை ஆகியோர் எழுதிய புத்துரையொன்று பரிதாபி ஆண்டு (1912) கார்த்திகையில் வெளிவந்தது.
4. 1913 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு வந்தது. அதனைச் செப்பஞ் செய்து வெளியிட்டவர் சங்கத் தலைமையாசிரியர் உ.வே.திருநாராயண ஐயங்கார். சைவ சித்தாந்தக் கழகத்தின் வழியே கா.ர.கோவிந்தராச முதலியார் குறிப்புரையுடன் 1943 இல் வெளிவந்தது.

**நன்னூல்**

நல் + நூல் = நன்னூல். நன்னூலை இயற்றியவர் பவணந்தி முனிவர். இவர்,''பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள் பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி'' எனச் சிறப்புப் பாயிரத்தில் பகரப்படுகின்றார். இவர் ஊர் ''சனகை'' எனப்படும் ''சனகாபுரம்'' என்றும், இவர் தந்தை ''சன்மதி முனிவர்'' என்றும் இப்பகுதியால் அறியலாம்.

**நூல் அமைப்பு**

நன்னூலின் பாயிரம் 51 நூற்பாக்களும். 4 வெண்பாக்களும் ஆக 55 பாக்களையுடையது. இவை பெரும்பாலும் முன்னையோர் நூலும் உரையும் கொண்டு மேற்கோளாக அமைத்தனவும், அமைத்துக் கொண்டனவுமாம். தொல்காப்பியம், அதன் உரைகள், இறையனார் களவியல் உரை ஆகியவற்றிலும் பிறவற்றிலும் உள்ளவை.

நன்னூலார் எழுத்திலக்கணத்தை ஐந்து இயல்களாகப் பகுத்துக்கொண்டு எழுத்தியல் (72), பதவியல் (23), உயிரீற்றுப்புணரியல் (53), மெய்யீற்றுப்புணரியல் (36), உருபு புணரியல் (18), ஆக ஐந்து இயல்களில் 202 நூற்பாக்களில் எழுத்து இலக்கணத்தைத் தருகிறார்.

சொல்லிலக்கணத்தை ஐந்து இயல்களாகப் பகுத்துக்கொண்டு பெயரியல் (62), வினையியல் (32), இடையியல் (22), உரியியல் (21), பொதுவியல் (68), ஆக ஐந்து இயல்களில் 205 நூற்பாக்களில் சொல்லிலக்கணத்தைத் தருகிறார்.

**நூல் எழுந்த காலம்**

பவணந்தியார் சீயகங்கன் காலத்தைச் சார்ந்தவர் என அறியப்படுகிறது. சீயகங்கன் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தவன் என அறியப்படுவதாலும் அவன் கல்வெட்டுகள் கி.பி.1212 முதல் கிடைப்பதாலும் பவணந்தியார் காலம் பதின் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம்.

**சூழல்**

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் கங்கநாட்டை ஆண்ட சிற்றரசன் சீயகங்கன். அவன் வேண்டிக்கொண்டதற்கிணங்க இந்நூல் இயற்றப்பட்டதாகச் சிறப்புப் பாயிரம் கூறுகிறது.

**உரை**

நன்னூலுக்கு பலர் உரையெழுதியுள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், ஊற்றங்கால் ஆண்டிப்புலவர், கூழங்கைத் தம்பிரான், ஆறுமுகநாவலர், இராமாநுசக் கவிராயர், வேதகிரி முதலியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், கா. கோபாலாச்சாரியார், பவானந்தம் பிள்ளை, வை.மு. சடகோப ராமானுசாச்சாரியார், கோ.இராமலிங்கத் தம்பிரான், சர். பொன்னம்பலம் இராமநாதன், கா. நமச்சிவாய முதலியார் முதலியோர் ஆவார்கள்.

முனைவர் இரா.கண்ணன் அவர்களால் இருபத்து மூவரின் அரிய உரைகளும் இருவரின் ஆங்கில உரையுடன் சேர்த்து 22 தொகுதிகள் அடங்கிய நன்னூல் உரைவளம் என்னும் நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**நூல்பதிப்பு**

1. நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும் உ.வே.சாமிநாதையரால் 1918 இல் வெளியிடப்பட்டது.
2. நன்னூல் சங்கர நமச்சிவாயருரை 1851 இல் ஆறுமுக நாவலரால் முதற்கண் பதிப்பிக்கப்பட்டது.
3. இராமாநுசக் கவிராயருரை அவராலேயே 1845 இல் முதற்பதிப்பாக வெளிவந்தது என்பார் உ.வே.சா.அவர்கள். 1847 என்பார் மயிலை சீனிவேங்கடசாமி (19ஆம் நூ.ஆ.) கா.ர. கோவிந்தராச முதலியார் குறிப்புரையுடன் 1940 இல் புதிய பதிப்பு வெளிவந்தது.
4. வேதகிரி முதலியார் உரை, பவானந்தம் பிள்ளையுரை ஆகியவை எளிமையும் தெளிவும் உடைய உரைகள்.
5. தொல்காப்பியமும் நன்னூலும் ஆகிய இரண்டையும் ஒப்பிடப்பட்டுள்ள நூல்களும் வெளிவந்துள்ளன.

**களவியற் காரிகை**

களவியல் என்றால் இறையனார் களவியலைக் குறிக்கும். காரிகை என்றால் யாப்பருங்கலக் காரிகையைக் குறிக்கும். அதனின் வேறுபடவே களவியற் காரிகை என வழங்கப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

**நூல் அமைப்பு**

முதலும், இடையும், முடிவும் இல்லாத நூல் களவியற்காரிகை. நூலின் 23 ஆவது நூற்பா முதல் 54 ஆவது நூற்பா வரை உள்ளன. இந்நூல் கட்டளைக் கலித்துறை யாப்பில் மகடூஉ முன்னிலையோடு அந்தாதி அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளன.

**நூல்பதிப்பு**

நூலின் 23 ஆவது நூற்பா முதல் 54 ஆவது நூற்பா வரை உள்ளன. அவற்றைச் சிறப்பாகத் தெளிவான விளக்கங்களுடன் புலவர் இரா. இளங்குமரன் ஆய்ந்து பதிப்பித்துள்ளார்.

**பன்னிருபாட்டியல்**

பாட்டியல் என்பது செய்யுளிலக்கணத்தினுள் ஒரு பிரிவாகும். இவ்விலக்கணங்கூற எழுந்த தமிழ்நூல்கள் பலப்பல. அவற்றுள், பன்னிருபாட்டியல் என்பது பன்னிரண்டு பாட்டிலக்கணம் என்று பொருள்படும். அ∴து ஆகுபெயராய் வெவ்வேறாசிரியர்களால் இயற்றப்பட்ட பாட்டிலக்கணநூல் பன்னிரண்டினை உணர்த்துவதுடன் அப்பன்னிரண்டு நூல்களிலிருந்து பிற்காலத்தாரொருவர் எடுத்துத் தொகுத்துச் சூத்திரங்களையுடையதொரு தொகை நூலினையும் உணர்த்தி நிற்கும்.

**நூலாசிரியர் வரலாறு**

பாட்டியற் புலவர்கள் பதினைந்துபேர் இதில் இடம் பெற்றுள்ளனர். அகத்தியர், அவிநயனார், இந்திரகாளியார், கபிலர், கல்லாடர், கோவூர்கிழார், சீத்தலையார், செயிற்றியனார், சேந்தம் பூதனார், நற்றத்தனார், பரணர், பல்காயனார், பெருங்குன்றூர் கிழார், பொய்கையார், மாபூதனார் என்பார் அவர்.

**நூல் அமைப்பு**

பன்னிருபாட்டியல் 360 சூத்திரங்களைக் கொண்டு மூன்றியல்களை உடையதாக உள்ளது. இவற்றுள், 204 ஆம் சூத்திரம் ஒன்றுமட்டும் நேரிசைவெண்பா. எஞ்சியவை அனைத்தும் நூற்பா யாப்பே. முதல் இயலான எழுத்தியலில் எழுத்தின் பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள் என்னும் ஒன்பதனை விவரிக்கின்றது. இரண்டாவது

இயலான சொல்லியல் சீர்க்கணம், மங்கலச் சொல், பெயர்ப் பொருத்தம் என்பவற்றை விளக்குகின்றது. மூன்றாவது இயலான இனவியலில் பாப்பொருத்தம் பாவினம் என்பவற்றைக் கூறுகிறது. இதனுள் சாதகம் முதல் கையறுநிலை ஈறாய் அறுபத்தாறாகப் பாவினம் கூறப்பட்டுள்ளது. இதனை 96 என்றும், அதற்கும்மேல் என்று கூறுவாரும் உள். பாட்டு, கணக்கு (மேற்கணக்கு, கீழ்க்கணக்கு) எனத் தொகை நூற்கணக்குகளும் இப்பாட்டியலில் இடம் பெற்றுள்ளன.

**நூல்பதிப்பு**

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக 1904 இல் முதற்பதிப்பும் 1951 - இல் இரண்டாம் பதிப்பும் வெளிவந்துள்ளன.

**நவநீதப்பாட்டியல்**

நவநீதப்பாட்டியல் என்றும் கலித்துறைப் பாட்டியல் என்றும் வழங்கப் பெறும். இந்நூல் இயற்றிய ஆசிரியர் பெயராலே வழங்கப்பட்டு வரும் தொல்மரபான் நவநீதப்பாட்டியல் என்றும் வழங்கலாயிற்று. இந்நூல் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பால் இயன்றமையால் இயன்ற யாப்பின் பெயராலேயே வழங்கும் மரபான் கலித்துறைப் பாட்டியல் என்றும் வழங்கப்படலாயிற்று.

**நூலாசிரியர் வரலாறு**

இரா.கண்ணன்,

> **“பாட்டியல் ஆனவை எல்லாம் தொகுத்துப் பயன்படவே நாட்டிய வேதத்தவன் நவநீத நடன் என்பரே”**
> **எனும் இப்பாட்டியலின் சிறப்புப் பாயிர அடிகள், இந்நூலாசிரியரின் பெயர் நவநீதநடன் என்பதை விளக்கும்.**
> **திரிசிரபுரம் மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் பயின்ற வித்வான் சுப்புராய செட்டியாரிடமிருந்த நவநீதப் பாட்டியல் ஏட்டுப் பிரதி யொன்றில்,**
> **“கரிமுகத் தண்ணல் கடவுள ரைங்கரக் கணபதியைப்**
> **பரிவுரை மாமலர் சாத்திப் பணிந்துள பாவினத்தை**
> **அரிமத னானநவநீத னென்னு மியான்வகுத்த**
> **உரைசெயி லக்கண நவநீதப் பாட்டிய லுலகினுக்கே”**
> **என்று ஒரு பாட்டு காணப்படுகிறதென்று ஐயரவர்கள் (டாக்டர் உ.வே.சா.) தம் கைப்படக் குறித்துள்ளார்கள் எனும் குறிப்பில் உள்ள பாட்டானும் இந்நூலாசிரியரின் பெயர் நவநீதநடன் என்பது தெளிவாம்” [30]**

என்று கூறியுள்ளார்.

**நூல் அமைப்பு**

நவநீதப்பாட்டியல் மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. முதல் இயலான பொருத்தவியலில் 25 சூத்திரங்களையும், இரண்டாம் இயலான செய்யுண் மொழியியலில் 43 சூத்திரங்களையும். மூன்றாம் இயலான

பொதுமொழியியலில் 37 சூத்திரங்களையும் பெற்றுள்ளன. மேலும், இந்நூலின் முகப்பில் சிறப்புப் பாயிரம்1, அவையடக்கம்1, தற்சிறப்புப் பாயிரம்1, என 3 பாடல்கள் அமைந்துள்ளன. இவையனைத்தும் உள்பட மொத்தம் 108 பாடல்கள் உள்ளன.

**நூலின் காலம்**

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் இந்நூல் எழுந்தது என அறிஞர் எஸ். வையாபுரிப்பிள்ளையும், அறிஞர் மு. அருணாசலமும் மொழிந்துள்ளனர். எனவே இந்நூலின் காலம் 14ஆம் நூற்றாண்டென அறியமுடிகிறது.

**உரை**

நவநீதப்பாட்டியலுக்குப் பெயர் அறியப்பெறாத இருவரால் எழுதப்பெற்ற இரண்டு பழைய உரைகள் உள்ளன. உரை ஒன்றில் 103 சூத்திரங்களும் மற்றோர் உரையில் 83 சூத்திரங்களும் உள்ளன. எனினும் இவ்விரு உரைகளிலும் பொதுவாகக் காணப்பெறும் சூத்திரங்களின் எண்ணிக்கை 78 ஆகவே உள்ளது. உரை ஒன்றில் இல்லாது உரை இரண்டில் மட்டும் காணப்படுபவையாக 5 சூத்திரங்கள் உள்ளன. இரு உரைகளிலும் பொதுவாகக் காணப்பெறும் 78 சூத்திரங்களிலும் பாடவேறுபாடு பல காணப்படுகின்றன. ஒரு சூத்திரம் முழுமையாக வேறுபட்டுக் காணப்படுகிறது.

அறிஞர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் வித்வான் எம்.சண்முகம் பிள்ளை அவர்களைக் கொண்டு உரை ஒன்று எழுதுவித்து 1943 இல் பதிப்பித்துள்ளார். இது நவநீதப்பாட்டியலுக்குக் கிடைத்த மூன்றாவது உரை எனலாம். இப்பதிப்பில் 102 சூத்திரங்களே காணப்படுகின்றன.

**நூல்பதிப்பு**

1. நவநீதப்பாட்டியலின் முதற்பதிப்பு 1908-இல் சென்னை கேசவலு நாயுடு அவர்களால் வெளிவந்தது. இவர் பதிப்பித்த “பாட்டியல் கொத்து” எனும் தொகுதியில் நவநீதப்பாட்டியலோடு வச்சணந்திமாலை, வரையறுத்த பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் என்பனவும் அடங்கிஉள்ளன.
2. அறிஞர், எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் 1943-இல் இந்நூலைப் பதிப்பித்துள்ளார். வித்வான் எம். சண்முகம் பிள்ளை அவர்களின் உரையும் வையாபுரிப் பிள்ளையின் ஆராய்ச்சி முன்னுரையும் இப்பதிப்பில் உள்ளன. 102 சூத்திரங்களே காணப்படுகின்றன.
3. சென்னை கலாஷேத்திரம் 1944 இல் இந்நூலை உரையுடன் பதிப்பித்துள்ளது. பழைய உரைகள் இரண்டும் ஒன்றன் கீழ் ஒன்றாகத்

தந்திருப்பது இப்பதிப்பின் சிறப்புகளுள் ஒன்று. உ.வே.சா. அவர்களின் மகனார் திரு.எஸ். கலியாண சுந்தரையர் அவர்களும், உ.வே.சா-வின் மாணாக்கருள் ஒருவரான திரு. எஸ்.ஜி. கணபதி ஐயர் அவர்களும் இப்பதிப்பின் பதிப்பாசிரியர்கள் ஆவர்.

4. கலாஷேத்திரம் வெளியீட்டின் இரண்டு (1961) மற்றும் மூன்றாம் (1994) பதிப்புகள், மகாமகோபாத்தியாய டாக்டா.உ.வே.சாமிநாதையர் நூல்நிலையப் பதிப்புகளாக வெளிவந்துள்ளன.
5. 2002-ஆம் ஆண்டு முனைவர் இரா.கண்ணன் அவர்களால் நவநீதப்பாட்டியலுக்கு ஆராய்ச்சி முன்னுரை, பதவுரை, தெளிவுரை, விளக்கவுரை ஆகியவற்றோடு கூடிய பதிப்பு வெளிவந்துள்ளது.

**வரையறுத்த பாட்டியல்**

வரையறுத்த பாட்டியல் பத்தே பத்து கட்டளைக் கலித்துறைகளால் அமைந்துள்ளது. அதிலும் மூன்று பாடல்கள் வாழ்த்து அவையடக்கம் வருபொருள் பற்றியன. எஞ்சிய ஏழு பாட்டுகள் மங்கலச் சொல் என்னும் ஒரே ஒரு பொருள் பற்றியனவே. ஆதலால், இவ்வரையறை கருதி வரையறுத்த பாட்டியல் எனப்பட்டதெனலாம். இனி, இவ்விவ்வெழுத்து முதலாகவுடைய பெயர்களுக்கு இதுவே மங்கலச் சொல் என வரையறுத்தலாலும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

இப்பாட்டியலுக்குச் சம்மந்தப் பாட்டியல் என்றொரு பெயருமுண்டு. காரணம், “சம்பந்த மாமுனி பாதமலர், நேர்கொண் டிறைஞ்சி நிகழ்த்துகின்றேன்” என நூலின் முதற்பா கூறுவதலால் அம்முனிவர் இந்நூலாசிரியருக்குக் குருவாக இருக்கலாம். எனவே அவர் பெயரைத் தாம் இயற்றிய நூலுக்குச் சூட்டி இருக்கலாம் என அறிய முடிகிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை

**நூல் அமைப்பு**

நூல் அந்தாதியால் இயல்கின்றது. ஈரிடங்களில் மகடூஉ முன்னிலையுடையதாய் (9,10) அமைந்துள்ளது. சீர், எழுத்து, பொன், பூ, திரு, திங்கள், மணி, நீர், சொல், கங்கை, வாரணம், குஞ்சரம், உலகு, பார், தேர் என்னும் மங்கலச் சொற்கள் வரப்பாடுதல், இவ்விம் முதலெழுத்துக்களையுடைய பெயருடையார்க்கே என்று கூறுகிறது. பத்தாம் பாடலாம் இறுதிப் பாடல் வருணம், உண்டி, கதி, கணம் ஆகியவற்றை ஆய்ந்து கொள்ளக் கூறுகின்றது.

எழுத்துகளை ஓர் ஒலிச்சுவை யுண்டாகவும், யாப்பில் சிறக்கவும் விட்டிசைப்பு தவிர்க்கவுமாம் வகையில்,

*"கிக்கீ சொச்சோக்கள் நந்நாவொடு*
*அடுத்த நிந்நீ"*

என்பன போலக் கூறுகிறார். இந்நூல் கி.பி.16ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**உரை**

வரையறுத்த பாட்டியலுக்கு ஒருரை உள்ளது. இன்ன நுதலிற்று என்று கூறி, இதன் பொருள் எனப் பிண்டப் பொருளைத் தெளிவாகத் தருகிறது. திரு என்னும் மங்கலச் சொல்லால் திருமகள் திருவளர் திருப்பதி திருமல்கு திருமன்னு எனவும், திங்கள் என்னும் மங்கலச் சொல்லால் திங்களர் திங்களால் எனவும் பாவிற்கு இசைந்தபடி பாடுக எனச் சிறுசிறு விளக்கங்களும் தருகின்றது.

**நூல்பதிப்பு**

வெண்பாப் பாட்டியலையும், வரையறுத்த பாட்டியலையும் இணைத்து கி.பி.1900 இல் ஒரு பதிப்பு சென்னையில் இருந்து வந்துள்ளது. அவ்வாறே கொ. இராமலிங்கத் தம்பிரான் விளக்கவுரையுடன் கழக வெளியீடாக இது கி.பி.1936 இல் வெளிவந்தது.

**சிதம்பரப் பாட்டியல்**

பரஞ்சோதி என்பவரால் இயற்றப்பட்டது. திருவிளையாடல் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவரும், இவரும் வேறுவேறானவர்கள். இவர் சிதம்பரப்புராணம், மதுரையுலா என்பவற்றை இயற்றிய புராணத் திருமலை நாதர் என்பவரின் மைந்தர்.

***"சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் தமிழால்***
***சிதம்பரபு ராணமுதல் செய்து – விதம்பெறுசீர்***
***சேர்ந்த புராணத் திருமலைநா தன்தவத்தால்***
***சார்ந்தபரஞ் சோதியென்பான் தான்"***

என்னும் இந்நூற் பாயிரத்தால் இச்செய்திகள் விளங்கும்.

**நூல் அமைப்பு**

சிதம்பரப் பாட்டியல், உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என ஐந்தியல்களையுடையது. இவற்றைப் பற்றிய மொத்தப் பாடல்கள் 47. இப்பாடல்கள் எல்லாம் எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தங்கள்.

முன்னியல்கள் மூன்றும் யாப்பிலக்கணம் கூறுவன. பின்னிரண்டு இயல்களும் பாட்டியல் இலக்கணம் கூறுவன. இப்பாட்டியல் அகத்தியர் வழிமுறையில் வருவது என்பதை ஆசிரியர் கூறுகின்றார். இந்நூலைக் கற்றார் எய்தும் பயன் இன்னதெனவும் கூறுகின்றார்.

**நூலின் காலம்**

''சகற்கு ஈரேழு நூறுடன் முப்ப.்.தியைந்த ஆண்டு'' எனச் சிதம்பரப்புராணம் கூறுவதால் சகம் 1430 ஆகிய அவ்வாண்டு கி.பி.1508 ஆகும். அச்சிதம்பரப் புராணம் இவர் தந்தையார் இயற்றியதாகலின் இவர் காலம் 16-ஆம் நூற்றாண்டு ஆகும்.

**உரை**

இந்நூல் முதல் மூன்று இயல்களுக்கு உரையுள்ளது. எளியது, இனியது, இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. பாட்டியற் பகுதிக்கு உரையின்மை அதன் எளிமை கருதி விடப்பட்டிருக்கலாம்.

**நூல்பதிப்பு**

தமிழ்ச்சங்க வாயிலாக இதனைப் பதிப்பித்து வெளிப்படுத்தியவர் அறிஞர். மு. இராகவ ஐயங்கார்.

**மாறனலங்காரம்**

மாறன் என்பது பாண்டியன் பெயர்களுள் ஒன்று. இங்குப் பாண்டி நாட்டு ஆழ்வார்களுள் புகழ் வாய்ந்த நம்மாழ்வாரைக் குறிப்பதாயிற்று. இவர் பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டதும், பொருநைக்கரை சார்ந்ததும் ஆகிய திருவழுதி வளநாட்டுச் சிற்றரசர் வழியினர். வேந்தர் பெயரையோ குடிப் பெயரையோ சிற்றரசர் படைத்தலைவர் ஆகியோர் தம் பெயராகச் சூடிக் கொள்ளும் பண்டையோர் மரபுப்படி மாறன் என்னும் பெயரை இவர் முன்னோர் கொண்டனராக இவரும் கொண்டார். இவர்க்கு மாறன் என்பதை அன்றிக் காரிமாறன், சடகோபன், திருவழுதி வளநாடன் முதலான பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன. நம்மாழ்வார் ஆகிய மாறனைத் தலைவனாகக் கொண்ட அணிநூல் ''மாறனலங்காரம்'' எனப்பட்டது.

**நூலாசிரியர் வரலாறு**

இந்நூலை எழுதியவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பார். திருக்குருகை என்பது ஆழ்வார் திருநகரி என்ற ஊரைக் குறிக்கும். இவர் நம்மாழ்வாரின் அரசவைக் கவிஞர் என்றும், இவர்தம் தந்தையாருக்கும் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்று பெயர் விளங்கியதும், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பது இவரின் குடிப்பெயர் என்பதும், சடையன் என்பது இவ்வாசிரியரின் இயற்பெயர் என்பதும்,

***''சிற்குணத் திருமலைச் சீநிவாதன்***
***பொற்புடைத் திருவடி போற்றிய புனிதன்***
***குருகையம் பதித்திருக் குருகைப் பெருமாள்***
***பொருவில் பேரன்புடன் புரந்தருள் புதல்வன்***

*மருக்கமழ் சீரகத் தார்வணி கேசன்*
*றிருக்குருகைப் பெருமாள் கவிராசன்*
*அருட்குணத் தவர் புகழ் சடையன்*
*பொருள்டொர் நவம்புணர் புலமையோனே".*

என வரும் மாறனகப்பொருள் பாயிரப் பாடல் மூலம் அறியலாம்.

**நூல் அமைப்பு**

**"தண்டியார் முப்பைத்தைந்து அணிகளை மட்டுமே கூற, திருக்குருகைப் பெருமாள் கவிராயர் அறுபத்து நான்கு அணிகளைச் சுட்டி இலக்கணம் கூறியுள்ளார். இவர்க்குப் பின்னால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாக்கப் பெற்ற குவலயானந்தம் எனும் நூலில் நூற்றிருபத்திரண்டு அணிகள் கூறப் பெற்றிருப்பினும் மிகுந்த அளவில் அணிகளைத் தேர்ந்து இலக்கணம் கூறிய முதலாசிரியர் இவரே எனும் சிறப்பிற்குக் குருகைப் பெருமாள் கவிராயர் உரியவராகிறார்.**

**பொருளணிகளை விளக்குவதோடு சித்திரக் கவிகளாகிய சொல்லணிகளையும் விளக்குவது இந்நூலின் மற்றொரு சிறப்பு. முப்பத்திரண்டு சித்திரக் கவிகள் இந்நூற்கண் விளக்கப் பெற்றுள்ளன. இந்நூல் வெண்பா, ஆசிரியம் ஆகிய யாப்புகளால் பாடப்பெற்றுள்ளது. இந்நூலின் இரண்டாம் இயலான பொதுவியல் முழுமையும் வெண்பாவால் பாடப் பெற்றுள்ளது. முதலியலான பாயிரத்தில் பெரும்பகுதி வெண்பாவாலும் எஞ்சியவை ஆசிரியத்தாலும் அமைந்துள்ளன. மூன்றாமியலான பொருளணியியல், நான்காமியலான சொல்லணியியலாகியன ஆசிரியத்தால் அமைக்கப்பட்டுள்ளன. இந்நூலின் இயல்களும் அவற்றிற்கான நூற்பாத் தொகையும் வருமாறு**

| இயல் | நூற்பாத்தொகை |
|---|---|
| 1. பாயிரம் | 64 |
| 2. பொதுவியல் | 21 |
| 3. பொருளணியியல் | 166 |
| 4. சொல்லணியியல் | 48 |
| 5. எச்சவியல் | 28 |
| நூலின் மொத்த நூற்பாக்கள் | 327"[31] |

**நூலின் காலம்**

இவர் இயற்றிய திருக்குருகை மான்மியம் அரங்கேற்றமாகிய காலம்,"அறந்திகழ் ஆண்டவை எழுநூற்றிருபான் மூன்றில் அணிகிளர்

கார்த்திகை மாதம் எட்டில்'' என்றுள்ளது. இவ்வாண்டு கொல்லம் 723. அது கி.பி.1548, ஆதலால் 440 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று அறியமுடிகிறது.

**உரை**

தென் திருப்பேரைக் காரிரத்தின கவிராயர் என்பவரால் இந்நூலுக்கு தெளிவான விளக்கவுரை எழுதப்பட்டுள்ளது.

**நூல்பதிப்பு**

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக 1913 இல் முதற்பதிப்பு வெளிவந்தது. 1929 இல் இரண்டாம் பதிப்பு வந்தது. பதிப்பாசிரியர் திரு நாராயண ஐயங்கார்.

**மாறன்அகப்பொருள்**

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவர் இயற்றிய அகப்பொருளை விளக்கும் அரிய இலக்கணநூல் மாறனகப்பொருள்.

**நூல் அமைப்பு**

மாறனகப்பொருளிலுள்ள இயல்கள், பாடல்கள் எண்ணிக்கையைப் பின்வரும் வெண்பா மூலம் அறிந்துகொள்ளலாம்.

***"மன்னும் அகத்திணையே மாண்பார் களவியலே***
***துன்னும் வரைவியலே தூத்தொடியே – பின்னமறக்***
***கூறத் தகுகற்பே கோதீர் ஒழிபியலே***
***மாறன் அகப்பொருளின் வைப்பு"***
***"ஐந்திணைசேர் மாறன் அகப்பொருளிற் சேருமியல்***
***ஐந்தாம்நூற் பாவெண் அடைவாகப் - பைந்தொடியே!***
***முந்நூற்று அறுபத்து மூன்றாம் முதல் இறுதி***
***உந்துவட வோர்கடனே ஓர்"***

இந்நூல் அகத்திணை இயல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்தியல்களைக் கொண்டுள்ளது. ஐந்தியலுக்கும் நூற்பாக்கள் மொத்தம் 363. இந்நூலின் முதல் சொல் வட என்பதும், இறுதிச் சொல் கடனே என்பதும் அறியப்படுகிறது. ஐந்தியல்களில் முதலியலான அகத்திணையியலும், இறுதியியலான ஒழிபியலும் கிடைக்கப்பெறவில்லை. எஞ்சிய மூன்றியல்களான களவியலில் 62 நூற்பாக்களும், வரைவியலில் 34 நூற்பாக்களும், கற்பியலில் 10 நூற்பாக்களும் என இற்றைக்கு 106 நூற்பாக்கள் மட்டுமே காணக் கிடைக்கின்றன.

**நூல் எழுந்த காலம்**

***''அடைவாகும் எழுநூறோ டிருபத் தேழாம்***
***ஆண்டுமதி சித்திரையேழ் சித்ரை யோரை***
***உடையவரேழ் சந்நிதியில் உரிமை கேள்வி***
***யுறுசெம்மல் ஆஞ்சீநி வாதன் முன்பு***
***மடைதிறந்த வெள்ளமெனா மாண்போர் கொள்ள***

*மாறனகப் பொருளைவகுத் துரைத்தான் ஆய்ந்து*
*சடையனெனும் இயற்பெயரான் தமிழ்நா வீறன்*
*சார்குருகைப் பெருமாள்சீர் வணிகன் தானே”*

எனவரும் பாயிரத்தால் கொல்லம் 727 சித்திரை நாளில் அரங்கேற்றப் பெற்றதென்றும், சீநிவாசசீயர் என்னும் தம் ஆசிரியர் முன்னிலையில் அரங்கேற்ற மாயதென்றும் அறிந்து கொள்ளலாம். கொல்லம் 727 என்பது கி.பி. 1552 ஆகும். மாறனலங்காரம் இயற்றியபின் நான்கு ஆண்டுகள் கழித்து இந்நூல் இயற்றப்பட்டதென அறியமுடிகிறது. இந்நூலிற்கு உரையேதும் கிடைக்கவில்லை.

**நூல்பதிப்பு**

1. 1932 இல் மாறனகப் பொருளின் மூலமும் பதிப்பும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் முதன்முதலாகப் பதிபிக்கப்பட்டது. பதிப்பாசிரியர் கி. இராமாநுசையங்கார்.
2. 2003-இல் முனைவர் இரா.கண்ணன் அவர்களால் மாறனகப்பொருள் விளக்கத்தின் களவியல் எனுமியலின் பாங்கற்கூட்டம் எனும் கிளவிக்கொத்து வரையிலான சூத்திரங்களுக்குப் பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரையுடன் நூல் பதிப்பிக்கப்பட்டது.

**பாப்பாவினம்**

பாவும் பாவினமும் பற்றிக் கூறும் நூல் ‘‘பாப்பாவினம்’’ எனப்பட்டது. இது மாறன் பாப்பாவினம் எனவும் அழைக்கப்பெறும்.

**நூலாசிரியர் வரலாறு**

மாறனலங்காரம், மாறனகப்பொருள், ஆகியவற்றை இயற்றிய திருக்குருகைப் பெருமாள் கவிராயரே பாப்பாவினம் என்ற நூலையும் இயற்றியுள்ளார். இந்நூல் பாட்டுடைத்தலைவரும் நம்மாழ்வாரே ஆவார்.

**நூல் அமைப்பு**

இலக்கியம் காட்டி இலக்கணம் கூறும் புதிய கல்விமுறைக்கு முன்னோடி போல் அமைந்துள்ளது இப்பாப்பாவினம்.

பாப்பாவினம் என்ற நூல் யாப்பியலக்கண நூல்களில் தனித்தன்மை வாய்ந்ததாக காணப்படுகிறது. பாவின் வகைகளையும், பாவினங்களின் வகைகளையும் சொல்கிறது பாப்பாவினம்.

வெண்பா தொடங்கிப் பரிபாடல்வரை பத்துப்பிரிவுகளைக் கொண்டுள்ளது. வெண்பா, வெண்பாவினம், ஆசிரியப்பா, ஆசிரியப்பாவினம், கலிப்பா, கலிப்பாவினம், வஞ்சிப்பா, வஞ்சிப்பாவினம், மருட்பா, பரிபாடல் என இப்பத்துப்

பிரிவுகள் அமைந்துள்ளன. பரிபாடல் தவிர, ஏனைய பிரிவுகளில் 135 பாடல்கள் உள்ளன. பரிபாடல் ஐந்தையும் சேர்த்து 140 பாடல்கள் அமைந்துள்ளன.

**நூல்பதிப்பு**

1932 இல் கி. இராமாநுசையங்காரால் பதிப்பிக்கப்பட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் வெளிவந்தது.

**சிதம்பரச் செய்யுட்கோவை**

சிதம்பரச் செய்யுட்கோவை பாண்டிய நாட்டுப் பெரும்புலவர் குமரகுருபரரால் இயற்றப்பட்டது. செய்யுள் வகை, அதன் இனவகை பற்றி எடுத்துக் காட்டாகச் சொல்லப்பட்ட நூல் செய்யுட்கோவை.

**நூலாசிரியர் வரலாறு**

குமரகுருபரர் திருவைகுண்டத்தில் பிறந்தவர். தந்தையார் சண்முக சிகாமணிக் கவிராயர். அன்னையார் சிவகாம சுந்தரியார். பிறந்து ஐந்தாண்டளவும் பேசாதிருந்து, செந்தில் முருகன் அருளால் பேசுந்திறத்தோடு, பாடுந்திறமும் பெற்றுக் கந்தர் கலிவெண்பா முதல் சகலகலாவல்லி மாலை ஈறாகப் பல நூல்களை இயற்றியவர். திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் மதுரைக்கு வந்து மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறிவிளக்கம் ஆகியனவற்றை இயற்றியவர். இவர் சைவசமயத்தைச் சார்ந்தவர்.

சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட இக்கோவை குறிப்பாகச் சிதம்பரரைச் சொல்லியும் விளித்தும் பாடுதலால் இப்பெயர் பெற்றது. சிதம்பர மும்மணிக் கோவை என்பதொரு நூல் இவ்வாசிரியர் இயற்றியதும் எண்ணலாம். “வாழ்த்துமின்தில்லை” என்னும் நிறைவுச் செவியறிவுறூஉ மருட்பாவும் பிறவும் இதனை விளக்கும்.

**நூல் அமைப்பு**

இந்நூலின் செய்யுட்கள் மொத்தம் 84. பா, பாவினச் செய்யுள்களின் எண்ணிக்கை பின்வருமாறு இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

| | |
|---|---|
| வெண்பா விகற்பம் | 28 |
| வெண்பா பாவினம் | 12 |
| ஆசிரியப்பா விகற்பம் | 5 |
| ஆசிரியப்பாவினம் | 11 |
| கலிப்பா விகற்பம | 12 |
| கலியினம | 7 |
| வஞ்சிப்பா | 2 |
| வஞ்சியினம | 3 |
| மருட்பா | 4 |
| மொத்தம் | 84 |

**நூலின் காலம்**

குமரகுருபரர் தம் குருவர் மாசிலாமணி தேசிகர். இவர் தருமபுரத் திருமட நான்காம் பட்டத்திலிருந்தவர். குமரகுருபரருக்குப் பின் ஆறாம் பட்டத்தில் இருந்த தில்லை நாயக சுவாமிகள் என்பார் திருப்பனந்தாள் காசி மடத்தை கி.பி.1720 இல் நிறுவினார். இவற்றால் குமரகுருபரர் 17ஆம் நூற்றாண்டினர் என்பது விளங்கும்.

**சூழல்**

குமரகுருபரர் சைவ அன்பர்கள் வேண்டியதற்கிணங்கச் சிதம்பரச் செய்யுட்கோவையைப் பாடிக்கொடுத்தார்.

**உரை**

இந்நூலின் உரை ஆசிரியர் குமரகுருபரர் அவர்களாலேயே எழுதப்பட்டுள்ளது.

**நூல்பதிப்பு**

கி.பி. 1886 ஆம் ஆண்டு இந்நூல் முதற்பதிப்பாகச் சபாபதி சுவாமிகளும், வே. குமாரசுவாமி உடையாரும் பதிப்பித்து வெளிவந்ததாகத் தெரிகிறது. தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையரால் பதிப்பிக்கப்பட்ட குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு நூலின்கண் இந்நூல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தில்லையம்பூர்ச் சந்திர சேகரகவிராஜ பண்டிதரால் பரிசோதிக்கப்பட்டு வல்லிபுரம் இராமசாமி முதலியாரால் இராட்சச ஆண்டு 1916 முத்தமிழ் விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்ட பழம்பதிப்பு ஒன்றும் உள்ளது. 1937 ஆம் ஆண்ட, வைத்தீசுவரன் கோவில் வித்வான் மு. சண்முக தேசிகர் இயற்றிய பதவுரை குறிப்புரையுடன் சீர்காழி வித்துவசிகாமணி ப.அ. முத்துத் தாண்டவராயபிள்ளை அவர்களால் பார்வையிடப்பெற்று வெளிவந்துள்ள பதிப்பும் உள்ளது. சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் முதலிய நிறுவனங்கள் வெளியிட்ட பதிப்புகளும் உள்ளன. கி.பி.1999 இல் முனைவர் ய.மணிகண்டன் அவர்களைப் பதிப்பு ஆசிரியராகக் கொண்டு சிதம்பரச் செய்யுட் கோவையைத் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் வெளியிட்டுள்ளது.

**பிரயோக விவேகம்**

பிரயோக விவேகம் இந்நூலைக் குருகை என்றும், குருகூர் என்றும் இலக்கியங்களில் சொல்லப்பெறுகின்ற ஊராகிய, நெல்லை மாவட்டத்தில் உள்ள ஆழ்வார் திருநகரில் வாழ்ந்த சுப்பிரமணிய தீட்சிதர் இயற்றினார்.

**நூலாசிரியர் வரலாறு**

இதன் தற்சிறப்புப் பாயிரம் ''ஏர்கொண்ட சொற்பிரயோக விவேகம்'' என்று சொல்கின்றது. ''வடமொழிப் பிரயோக விவேகத்திலும் சொல்லிலக்கணமல்லாது எழுத்திலக்கணம் கூறாமையின் சொற்பிரயோக விவேகம் என்றாம்'' எனவரும் உரை விளக்கத்தால் நூலாசிரியரே உரையாசிரியரும் ஆவர் என்பது விளங்கும். இந்நூலாசிரியரைப் பற்றி இலக்கணக் கொத்து,''ஆழ்வார் திருநகர்ப்பகுதியில் வாழும் சுப்பிரமணிய, வேதியன் தமிழ்ப்பிரயோக விவேகம், உரைத்துரை எழுதினன்'' எனக் கூறுதலால் இவரே உரை செய்தார் என்பது அறியமுடிகிறது.

**நூல் அமைப்பு**

இந்நூல் காரக படலத்தில் 17 காரிகைகளையும் சமாச படலத்தில் 11 காரிகைகளையும், தத்தித படலத்தில் 6 காரிகை களையும், திங்ஙப்படலத்தில் 17 காரிகைகளையும் சேர்த்து நான்கு படலங்களில் 51 காரிகைகளைக் கொண்டு விளங்குகிறது. நூலாசிரியரே இந்நூலுக்கு உரையும் எழுதியுள்ளார்.

**நூல் எழுந்த காலம்**

சுப்பிரமணிய தீட்சிதர், வேதியர் என்று சொல்லப்பட்டிருத்தலால் வேதமதத்தர் (வைதிகர்) என அறியமுடிகிறது. இவர் காலத்து வாழ்ந்த பெரும்புலவர்கள் சுவாமிநாத தேசிகர், வைத்தியநாத தேசிகர் முதலியோர் ஆவார்கள். எனவே இவரது காலம் 17 ஆம் நூற்றாண்டு விளங்குகிறது.

**நூல்பதிப்பு**

பிரயோக விவேகம் ஆறுமுக நாவலரால் கி.பி.1882 இல் பதிக்கப்பட்டது. அதற்கு மறுபதிப்பு கி.பி.1884இல் வெளிவந்தது.

**இலக்கண விளக்கம்**

திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்பாரால் இயற்றப்பட்டது. இதில் ஐந்திலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. பின்னாளில் தனி நூலாகச் செய்யப்பட்ட பாட்டியலும் இதன் கண் இடம் பெற்றுள்ளது. இதன் பரப்பையும், இலக்கண முழுமையையும் அறிந்து ''குட்டித் தொல்காப்பியம்'' என்று வழங்கப்படுகிறது.

**நூலாசிரியர் வரலாறு**

வைத்தியநாத தேசிகர் திருவாரூரினர் என்பது பெயர்க்கு முன்னுள்ள அடைமொழியால் விளங்குகிறது. இவருடைய தந்தையார் வன்மீகநாத தேசிகர் என்பார். தம் தந்தையாரிடமே முதற்கண் கல்வி கற்றுப் பின்னர்த் தம் தந்தையாரின் மாணவராகிய அகோரமுனிவர் என்பாரிடத்துக் கற்று இருமொழிப் புலமையும் மெய்ப்பொருள் திறமும் மேம்பட்டு விளங்கினர். தேசிகர் தம்

தவநிலை, ஓகநெறி என்பவற்றைக் கண்டு வியந்த முனிவர், தாமே அவர்க்கு மாணவராகி அமைந்தார். படிக்காசுப் புலவரும் இவருடைய மாணவர் என்பர்.

உரிய காலத்தில் வைத்தியநாதருக்குத் திருமணம் நிகழ்ந்தது. துணைவியார் தங்கம் என்பார். குடிநலன் காக்கப் பொருள் தேடும் நோக்கில் அந்நாள் ஆட்சியில் இருந்த திருமலை மன்னரின் செயலராக விளங்கிய கயத்தாற்றுத் திருவேங்கடநாத ஐயர் என்பாரை அடுத்து, அவர்தம் மக்களுக்குக் கற்பிக்கும் கடனை மேற்கொண்டார். இம் மேற்கோளின் பயனாகத் தொல்காப்பியத்திற்கு நன்னூல் முரணும் இடங்கள் புலப்பட்டன. அவற்றைத் தக்கவாறு திருத்திக் கொண்டார். மயிலைநாதர் உரையிலும் முரண்பட்டதென அறிந்த இடங்களைத் திருத்திக் கொண்டார். எழுத்து சொல் இலக்கணங்களைத் தாம் கருதுமாறு அமைத்துக் கொண்டபின் பொருளிலக்கணத்தையும் இணைத்தார். இந்நூலுக்குப் பாயிரம் செய்த சதாசிவ நாவலரே உரை எழுதியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

**நூல் அமைப்பு**

எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என 158 நூற்பாக்களைக் கொண்டு ஐந்தியல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல், பொதுவியல் என 214 நூற்பாக்களைக் கொண்டு ஐந்தியல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், அணியியல், செய்யுளியல், பாட்டியல் என 569 நூற்பாக்களைக் கொண்டு ஐந்தியல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் கி.பி.17ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

**நூல்பதிப்பு**

இலக்கணவிளக்கத்திற்கு முதல் பதிப்பு சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களால் 1889 இல் பதிப்பிக்கப்பெற்றது. பின்னர் ஆய்வுரை குறிப்புரைகளுடன் கழகப் பதிப்பும், பலதிற விளக்கம், ஒப்பீடு, இணைப்பு இன்னவற்றுடன் தஞ்சை சரசுவதிமஹால் பதிப்பும் வெளிவந்தன. தஞ்சைப் பதிப்பின் பதிப்பாசிரியர் தி.வே. கோபாலய்யர் ஆவார்.

**இலக்கணக் கொத்து**

இலக்கணக் கொத்தின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர் என்பார் ஆவார். இவர் பாண்டி நாட்டைச்சார்ந்தவர். இளமையிலேயே திருவாவடுதுறை திருமடத்தைச் சார்ந்தார். திருநெல்வேலியைச் சார்ந்த பெரும்புலவரும்

தாண்டவமூர்த்தி என்பார் மைந்தரும் ஆகிய மயிலேறும் பெருமாள் என்பவரிடம் பன்னீராண்டுகள் தமிழ் பயின்றார். செப்பறைப் பதியினராகிய சிவச் செல்வர் கனகசபாபதி என்பாரிடம் வடமொழி கற்றார். திருவாவடுதுறையில் தீக்கை பெற்றுப் பொருள் நூற் பயிற்சியிற் சிறந்தார். பின்னர் ஆசாரிய நிலைபெற்றுத் திருநெல்வேலி ஈசான மடத்தில் இருந்தார். அதனால் இவர் ஈசான தேசிகர் எனவும் வழங்கப்பட்டார். இவரது காலம் 17 ஆம் நூற்றாண்டு ஆகும்.

**நூல்பதிப்பு**

1990 - இல் இலக்கணக் கொத்து என்ற நூலினைத் தி.வே. கோபாலையரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு, தஞ்சை சரசுவதி மஹால் நூலகம் வெளியிட்டது.

முப்பெரும் இலக்கணநூல்கள் என்ற தலைப்பில் இலக்கணக் கொத்து, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி ஆகியவற்றுடன் இணைத்து ஆறுமுகநாவலரால் பதிப்பிக்கப்பட்டது.

**தொன்னூல் விளக்கம்**

இரா. இளங்குமரன்,

> **"சில பெயர்களின் சிறப்பு சில பெயர்களைத் தூண்டித் துலக்குகின்றன. நன்னூல் என்பது அத்தகையதொன்று. "நூல்" என்பதே இலக்கணப் பொருட்டதாகவும் நன்னூல் எனப் பெயர் கொண்ட அது, அதற்கு முன் வந்த நேமிநாதத்தைச் "சின்னூல்" என்று வழங்கத் தூண்டிற்று. பின்னூலாக வந்த வீரமாமுனிவரின் இலக்கண நூலைத் தொன்னூல் என்று பெயரிடத் தூண்டிற்று".**[32]

என்று கூறியுள்ளார்.

**நூலாசிரியர் வரலாறு**

தொன்னூல் விளக்கத்தை இயற்றியவர் வீரமாமுனிவர். 1680 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள் இத்தாலி நாட்டு வெனிஸ் மாகாணத்தில் காஸ்திகிளியோன் என்ற சிற்றூரில் இவர் பிறந்தார். இவர் தந்தை கொண்டால்போ பெஸ்கி, தாய் எலிசபெத் பெஸ்கி. இவரது தந்தையார் பிரபு பட்டம் பெற்றவர். இவர் இயற்பெயர் கான்சுடென்டைன் சோசப்பு பெசுகி என்பதாகும்.

1700 – 1701 இல் இரவீனா நகரில் இலக்கண ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1701 -1703 மெய்ப்பொருள் பயின்றார். 1703 – 1706 ஆசிரியப் பணியாற்றினார். 1706 – 1710 திருமறை பயின்றார். 1709 குருக்கள் ஆனார். 1710 -1711 இத்தாலியில் இருந்து இந்தியா வந்தார்.

வந்த நோக்கம் மதப்பணியாயினும் தனக்கிடம் அளித்த நாட்டிற்கு உள்ளத்தில் இடம் கொடுத்தார். தன்னுடைய பணியை நிறைவேற்றிக் கொண்டே தமிழினை உலகிற்கு அறிமுகப்படுத்தும் பணியை மேற்கொண்டார். ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், முதலான பிறநாட்டு மொழிகளைக் கற்ற இவர் தமிழ், வடமொழி, இந்துஸ்தானி, தெலுங்கு, கன்னடம் முதலிய நம் நாட்டு மொழிகளையும் கற்று வெற்றியும் பெற்றார். தைரியநாதர் எனவும் வீரமாமுனிவர் எனவும் பெயர் கொண்டார். சதுரகராதி முதலிய சில அகராதிகள் தொகுத்தார். தேம்பாவணியாம் காவியமும் (1726), சிற்றிலக்கியங்களையும் படைத்தார். கொடுந்தமிழ் இலக்கணம் (1728), செந்தமிழ் இலக்கணம் (1730), தொன்னூல் விளக்கம் (1730) முதலியவற்றை இயற்றினார். இவர் மறைந்தது 1747. அகவை 67.

**நூல் அமைப்பு**

இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து அதிகாரங்களில் 370 நூற்பாக்களைக் கொண்டது.

எழுத்ததிகாரம்(1-40 நூற்பாக்கள்) எழுத்தியல், எழுத்தின் வகுப்பு, எழுத்தின் விகாரம் என முப்பிரிவுகளை உடையது.

சொல்லதிகாரம் (41-42நூற்பாக்கள்) 1. சொற்பொதுவியல், 2. பெயர் (வேற்றுமையியல், பகுபதப்பெயரியல், தொகைநிலைத் தொடர்மொழிப் பெயரியல், சுட்டுவினா) 3.வினைச்சொல்லியல் (முக்கால முற்றுவினை, ஏவல் வியங்கோள், ஈரெச்சம், வினைக்குறிப்பு) 4. இடைச்சொல்லியல்,5. உரிச்சொல்லியல் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பொருளதிகாரம் (143-200) பதிகம், காரணம், விரிவு, தொகையுந்துணிவும், உரிமை(கால உரிமை, இடவுரிமை, பண்புரிமை, சாதித்தொழிலுரிமை, பற்றுதலுரிமை, வடிவு முதலிய உரிமை, ஒழுக்க உரிமை, சொல்லுரிமை) என்ற பகுப்புகளைக் கொண்டுள்ளது.

யாப்பதிகாரம் (201-300) 1. செய்யுளுறுப்பு,(அசையிலக்கணம், தளையிலக்கணம், அடியிலக்கணம், தொடையிலக்கணம்) 2. செய்யுளியல் (வெண்பாவிலக்கணம், ஆசிரியப்பாவிலக்கணம், வஞ்சிப்பாவிலக்கணம், மருட்பாவிலக்கணம், பாவினம், வெண்டுறையிலக்கணம், ஆசிரியத்துறையிலக்கணம், கலித்துறையிலக்கணம், வஞ்சித்துறையிலக்கணம், தாழிசையிலக்கணம், விருத்தவிலக்கணம்) 3. செய்யுள் மரபியல் எனப் பகுக்கப்பட்டுள்ளது.

அணியதிகாரம் (301-370) 1. சொல்லணியியல் (மறிநிலையணி, சொன்மிக்கணி, சொல்லெஞ்சணி, சொல்லொப்பணி) 2.பொருளணியியல் என வகைசெய்யப்பட்டுள்ளது.

இந்நூலின் காலம் 17ஆம் நூற்றாண்டு ஆகும். இந் நூலாசிரியராலேயே உரையும் எழுதப்பட்டது.

**நூல்பதிப்பு**

1838 இல் இதன் முதற்பதிப்பு புதுவையிலும், 1864 இல் நாகையிலும், 1891 இல் சென்னையிலும் பதிப்பிக்கப்ப்ட்டது. 1978 இல் ச.வே.சுப்பிரமணியன் அவர்களால் தொன்னூல் விளக்கம் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

**பிரபந்த தீபம்**

பிரபந்தங்கள் பற்றிய விளக்கம் எனும் நிலையில் இந்நூல் தீபம் எனக் காரணப்பெயர் பெற்றுள்ளது. இந்நூலாசிரியரின் பெயர், வரலாறு தெரியவில்லை.

**நூல் அமைப்பு**

தொண்ணூற்றேழு நூற்பாக்களில் தொண்ணூற்றேழு வகைப் பிரபந்தங்களை நூற்பாவிற்கு ஒன்றாக விளக்கம் அளிக்கிறது. சதுரகராதி குறிப்பிட்டுள்ள தொண்ணூற்றாறு பிரபந்தங்களில் இது பரணி உழத்திப்பாட்டு என்பனவற்றை விடுத்துச் சீட்டுக்கவி, சமுத்தி என்பனவற்றை இணைத்துக்கொண்டுள்ளது. அந்நூல் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இரண்டாகக் கொண்டுள்ளவற்றை இ்.து ஒன்றாகக் குறித்துள்ளது. அங்குத் தொகைநிலை என்பது இங்குக் கலித்தொகை, நெடுந்தொகை, குறுந்தொகை என மூன்றாக விரித்துள்ளது. இறுதி நூற்பாவான சமுத்தி என்பது தவிர ஏனையவற்றின் இலக்கணம் உரைக்கும் நூற்பாக்கள் அவ்வவ் இலக்கியத்தின் பெயருடனே, அகப்பொருட்கோவை, அறையுங்காலை, 1.அங்கமாலையே, 2. அலங்காரபஞ்சகம் என்பன போன்று தொடக்கம்பெறுகின்றன. பிற பாட்டியல்கள் கூறாத இலக்கிய வகைகளாகச் சீட்டுக் கவியையும் (96) சமுத்தியையும் (97) நவின்று இந்நூலார் தன் தனித்தன்மையைக் காட்டியுள்ளார். இந்நூல் கி.பி.19ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

**நூல்பதிப்பு**

1980 - இல் அறிஞர் ச.வே.சுப்பிரமணியம் பிரபந்த தீபத்திற்கு ஆய்வும், உரையும், விளக்கமும் அமைத்துப் பதிப்பித்துள்ளார்.

**பிரபந்தத் திரட்டு**

அச்சில் வராத தமிழ் நூல்களை அறிமுகம் செய்யும் நோக்கில், பதிப்பித்து வெளியிடப்பெற்ற நூல் பிரபந்தத்திரட்டு என்னும் பாட்டியல் இலக்கண நூல். இந்நூலின் ஆசிரியர் பற்றி எக்குறிப்பும் கிடைக்கவில்லை.

**நூல் அமைப்பு**

பிரபந்தத் திரட்டு(திரட்டியல்) எனும் இந்நூல், கடவுள் வாழ்த்து கூறும் பாடலும், திரட்டியல் (75), புறநடையியல் (17), கருப்பொருளியல் (16), பொருத்தவியல் (54), உவமாருடவியப்பு சார்வியல் (54), விசேடவணிவியப்பு சார்வேரியல் (79), சாதிமரபு சார்வேரியல் (18), குலநிலவியப்பு சார்வேரியல் (76), ஒழிபியல் (107), கொடையியல் (29), எனப் பத்துப் பகுதிகளும் கொண்டு, 526 பாடலால் அமைகின்றது.

முன்னும் பின்னுமாக, ஆறு செய்யுளும், இரு உரை நடைப்பகுதியும் பெற்றுள்ளன. இது கி.பி.19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

**நூல்பதிப்பு**

பெரும் பேராசிரியர் உ.வே.சாமிநாதையர் நூலக ஏட்டுச்சுவடி கண்டு எழுதப்பட்டது இது. பிரபந்த மரபியல் என்பது அறிஞர் மு. அருணாசலம் பதிப்பித்த நூலாகும். பிரபந்த மரபு என்பது சுவாமிசாத யாப்பதிகாரத்தின் ஒரு பிரிவாகவும் உள்ளது.

**பிரபந்த மரபியல்**

பிரபந்த மரபியலர் எனும் நூற்பாவியலான இச்சிறு பாட்டியல் இலக்கண நூல் பிரபந்த இலக்கணம் சொல்வதற்கென்றே எழுதப்பட்டுள்ளது. இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

**நூல் அமைப்பு**

மிகவும் பொடிந்து போன ஓர் ஏட்டிலிருந்தே பின்வரும் குறிப்புகள் எழுதப் பெறுகின்றன.

இது 35 நூற்பாக்களே உடையது. இவை இரண்டடிச் சிறுமையும் 15 அடிப்பெருமையும் உடையன. கிடைத்த பகுதியில் கடவுள் வாழ்த்துக் காணப்பெறவில்லை. இல்லை போலும். முதற் நூற்பா, பிள்ளைக்கவி முதல் புராண மீறாகத் தொண்ணூற்றாறெனும் தொகையதான பிரபந்தங்களைக் கூறும் பிரபந்த மரபியல் என்று நூற்பெயர் சொல்லுகிறது. நூலின் இறுதியில் பிரபந்த மரபியல்பு முற்றும். ஆக இயல்பு ஐந்துக்கும் பாயிரம் செய்யுளியல்பு மூலபாடம் முற்றும். முருகனே தெய்வம் என்று எழுதப் பெற்றுள்ளது. இதுகொண்டு இது ஒரு விரிந்த ஒரு பெருநூல் என்றும் இதன்கண் பாயிரம் செய்யுளியல். பொருத்தவியல், மரபியல், பிரபந்தவியல் என்ற ஐந்து இயல்கள் இருந்தனவென்றும், முன் குறிப்பிட்ட பகுதி ஐந்தாவது இயல் மட்டுமே என்றும் கருதலாம். இக்கருத்தின்படி கடவுள் வாழ்த்து முதலியன முழு நூல் தொடக்கத்தில் பாயிரவியலில் இருந்திருக்கக் கூடும். பொதுவியல் போல,

செய்யுள் பொருத்தம் பிரபந்தம் என்ற பகுதிகளில் சொல்லப்பெறாத எல்லாப் பொருள்களையும் கொண்டிருந்தது என்று துணியலாம். இதனுள் முதல் 21 நூற்பாக்களே பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாய் உள்ள பிரபந்தங்களைக் கூறும் பகுதி. மற்ற 14 நூற்பாக்களும் எஞ்சிய பொருள்களைக் கூறுவன.

நூற்பா

1. நூற்பெயர்
2. 2-21 பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகவுள்ள 96 பிரபந்த இலக்கணம்
3. 22 நூல் பெயர் பெறும் முறை
4. 23 கையறத்துக்கு ஆகாத பா.வாழ்த்துக்கு ஆகும் பா
5. 24 நாற்சாதிக்கும் உரிய பா
6. 25 – 27நூற்பாவுக்கும் உரியநிலம், நிறம், நாள், இராசி, கோள்
7. 28 – 29 கவிஞன் இலக்கணம்
8. 30 நால்வகைக் கவிஞர்
9. 31 அரங்கேற்றும் முறை
10. 32 தமிழ்க்குலப் பெண்
11. 33 அவளுடைய சுற்றத்தார்
12. 34 பரிசில் வழங்காதான் அறிவு
13. 35 குற்றம் இல்லாத பாட்டும், குற்றம் உடைய பாட்டும், அவற்றின் பயனும்.

**நூல்பதிப்பு**

இலக்கண விளக்கம் - பொருளதிகாரம் பாட்டியல் என்ற நூலைப் பதிப்பித்துள்ள தி.வே.கோபாலையர் சரசுவதி மகால் நூல்நிலையப் பதிப்பு 1974

**பிரபந்த தீபிகை**

பிரபந்த தீபிகை என்ற பாட்டியல் இலக்கண மரபில் அமைந்த நூறு விருத்தங்களால் ஆன நூல். இதன் ஆசிரியர் வேம்பத்தூர் முத்துவேங்கட சுப்பைய நாவலர்.

**நூல் அமைப்பு**

பொருத்தமும், பிரபந்தமும் தவிர இன்னும் பலவகைச் செய்திகளும் தீபிகையில் அமைவது தனித்தன்மையாம். பிரபந்தத் திரட்டு, நிகண்டுகள், தொகையகராதிகள் போன்றன கூறும் சில பல செய்திகளும் பிறவுமாக இவ்வாறு தீபிகையின் பெரும்பான்மை (34-99) அமைதல் தனிச் சிந்தனைக்கு உரியது. மன்மதன் (34), ஐவகை நிலக்கரு (35-38),இரட்டை நாகபந்தம் (39), தண்டி – சந்திராலோகம் கூறும் அணிகள் (40-43), கீழ்க்கணக்கு நூல் (44),

பெருங்காப்பியம் என்ற பெயரில் பத்துப்பாட்டு முதலியன (45), அரம்பையர்(46), நாயகன் நாயகி வகை குறித்த வடநூற் செய்திகள் (47,48) தாள இராக எண்ணங்கள் பல (49-56), வேதம் (57), ஸ்மிருதி (58), உபநிடதம் (59), சிவாகமம் (60), சிற்பத்திற்குரிய பொருள் (60), சிற்பநூல் (61), தீட்சையும் சைவமும் (62), தானங்கள் (63-68), புராணம் (69), உபபுராணம் (70), உடற்குற்றம் (70), அறங்கள்(71), கலைகள்(72), முகங்கள்(73), திருமண வகை (74), திருமால் அவதாரம் (75), ஆழ்வார்கள் பிறப்பு (76-80) உயிரினத் தோற்றம் (81), சைவ அடியார் (82-84), தமிழ்ப் புலவர் (85,86) அரசனுக்குரிய தசாங்கம், சின்னம், இயல்பு, துணைவர், சுற்றம், குழு, அரசியலணி, அரசியல் வகை முதலியன (87-89), யுக மன்னர் (90-93), திருவிளையாடற்படிப் பாண்டியர், வாணர் (94-95), நாயகர் நவாபுகள் (96), பலருக்குரிய மாலைகள் (97) புலமையோர் (98), தேசங்கள் (99) என்பன. இந்நூலின் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு ஆகும்.

**நூல்பதிப்பு**

பிரபந்த தீபிகையின் ஒரு பகுதி மட்டும் 26 பாடல்கள் 1918 – 1919 இல் வந்த செந்தமிழ் 17வது தொகுதியில் (பக்.153-158) முதன்முதல் வெளியிடப்பெற்றது.

அக்டோபர் 1982 ஆம் ஆண்டு உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சுவடிகளிலிருந்து எடுத்து உரையுடன் ச.வே.சுப்பிரமணியன் அவர்களையும், அன்னிதாமசு அவர்களையும் பதிப்பாசிரியர்களாகக்கொண்டு இந்நூலினை வெளியிட்டது.

**இரத்தினச் சுருக்கம்**

இரத்தினச் சுருக்கம் என்ற இந்நூல் மணிபோன்ற செய்திகளைச் சுருக்கித் தரும் நூல் என்னும் பொருளுடையதாகலாம்.

**நூலாசிரியர் வரலாறு**

> **“புகழேந்தியார் பெயரால் மாலைகள் சில வழங்குகின்றன. சில சிறு நூல்களும் அவர் பெயரால் பிறர் கட்டிவிட்டிருக்கக் கூடும். ஏனெனில் வெண்பாவில் புகழேந்தியாகத் திகழ்ந்து நளவெண்பாப் பாடிய ஒருவரையன்றி வேறு புகழேந்தியார் பெயர் வரலாற்றில் இடம் பெற்றிலது. ஆதலால் அவர் பெயரால் ஒருவர் இயற்றியிருத்தல் கூடுவதே. கடந்த நூற்றாண்டைச்சார்ந்த நூலாகலாம்”.** [33]

**நூல் அமைப்பு**

“பழைய பிரதிகளுள்ளே சிலவற்றுள் 28 பாடல்களும், சிலவற்றுள் 71 பாடல்களும் இருக்கின்றன” என்று நூற் குறிப்புள்ளது. இப்பதிப்பு 71 பாடல்களையுடையதாம்.

பாடல் வகை வெண்பா38: கட்டளைக் கலித்துறை 28: அறுசீர் விருத்தம் 4: முடுகு விருத்தம் 1, ஆக மொத்தம் எழுபத்தொன்று பாடல்கள். இதன் காலம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

**நூல்பதிப்பு**

1871 இல் ஊ. புட்பரத செட்டியாரால் தமது சென்னை, கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

**உவமான சங்கிரகம்**

உவமானப் பொருள்களைத் தொகுத்துத் தரும் நூல்களுக்கு உவமான சங்கிரகம் எனப் பெயரிட்டனர். சங்கிரகம் என்னும் வடசொல்லிற்குப் பொருட்சுருக்கக் குறிப்பு என்பது பொருளாகும். சுருக்கித் தொகுத்துச் சொல்லும் சுருக்க அடைவு எனலாம்.

**நூலாசிரியர் வரலாறு**

தமிழில் மூன்றில் உவமான சங்கிரக நூல்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஆறுமுக நாவலரால் இரத்தினச் சுருக்கத்துடன் சேர்த்து வெளியிடப்பட்டதாகும். மற்றொன்று ஆசிரிய விருத்தத்தால் ஆன நூல். மூன்றாவது நூல் செந்தமிழ் பதினான்காம் தொகுதியில் (பக். 165-167) வெளியிடப்பட்டுள்ளது. ஆறுமுக நாவலரால் வெளியிடப்பட்டுள்ள நூலில் திருவேங்கடையர் இயற்றியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், அவ்வாறு குறித்திருப்பது தவறு என்றும் அதனை இயற்றியவர் திருமேனிகுருகை இரத்தின கவிராயரே என்றும் செந்தமிழ் பதினான்காம் தொகுதியுள் திரு.சடகோபராமாநுசார்யா கூறியுள்ளார்.

**நூல் அமைப்பு**

உவமான சங்கிரகம் என்ற பெயரால் மூன்று சிறுநூல்கள் உள்ளன. இவை முறையே நூற்பா, வெண்பா, விருத்தப்பாவினால் ஆனவை. காலம் 15,17,18 நூற்றாண்டுகள். நாம் இங்குக் கருதுவது முதல்நூல் ஒன்றுமே. இதன் ஆசிரியர் வரலாறு தெரியவில்லை. இது 31 பாக்களும் 117 வரிகளும் உடையது. பாதாதிகேச முறையில் உவமை கூறும். பாதாதிகேசம் கேசாதி பாதம் என்று இறைவனை வருணிக்கும் முறைகள் நாலாயிரப் பிரபந்தத்திலும், திருவிசைப்பாவிலும் காணப்பெறும். இந்நூலில் உள்ளங்கால் தொடங்கிக்

கூந்தல் முடிய, பெரும்பான்மை அடைமொழி இன்றியே உவமைகள் கூறப்பெற்றுள்ளன. இந்நூலின் இறுதியில் சில பொது உவமைகளும் சொல்லப் பட்டுள்ளன. இந்நூல் கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

**நூல்பதிப்பு**

1871 இல் ஊ. புட்பரத செட்டியாரால் தமது சென்னை கலாரத்நாகர அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

இப்பெயரால் மூன்று நூல்கள் கொண்ட திரட்டு ஒன்று முனைவர் இ. சுந்தரமூர்த்தியால் வெளியிடப்பட்டது.

**முத்துவீரியம்**

ஐந்திலக்கணம் கூறும் நூல்களுள் ஒன்று முத்துவீரியம். இதன் ஆசிரியர் பெயர் முத்துவீர உபாத்தியாயர். இவர் பெயரால் அமைந்தது இந்நூல்.

**நூலாசிரியர் வரலாறு**

முத்துவீரரை "முத்து வீரமாமுனி" என்று சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. இவர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த உறையூரினர். அவ்வூரில் வண்டிக்காரத் தெருவில் இருந்தவர். பிறந்த குடிபற்றி அந்நாளில் அவ்வூரார் "கம்மாள வாத்தியார்"என்று அழைத்தமையைப்பற்றி அறிய முடிகின்றது. இவர் இறுதிக் காலத்தில் சென்னையில் வாழ்ந்தவர் என்றும், திருச்சி அமிர்தம் பிள்ளை, உறையூர் பிச்சை இபுராம் புலவர், சோமசுந்தர நாயக்கர் ஆகியோர்க்கு ஆசிரியர் என்றும் கூறுவர்.

**நூல் அமைப்பு**

முத்து வீரியம் நூற்பா யாப்பால் அமைந்தது. எழுத்ததிகாரம் எழுத்தியல், மொழியியல், புணரியல் என மூவியல்களையும் , சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், ஒழிபியல் என மூவியல்களையும் பொருளதிகாரம் அகவொழுக்க வியல், களவொழுக்கவியல், கற்பொழுக்கவியல் என மூவியல்களையும் யாப்பதிகாரம் உறுப்பியல் செய்யுளியல், ஒழிபியல் என மூவியல்களையும் அணியதிகாரம் சொல்லணியியல், பொருளணியியல், செய்யுளணியியல் என மூவியல்களையும் ஓர் ஒழுங்குறக் கொண்டுள்ளன. முதற் தற்சிறப்பு பாயிரம் நீங்கிய நூற்பாக்கள் ஐந்ததிகாரங்களுக்குமாக 1288 நூற்பாக்கள் ஆகும். இந்நூலின் காலம் கி.பி.19ஆம் நூற்றாண்டு.

**உரை**

முத்துவீரியத்தின் உரையாசிரியர் திருப்பாற்கடல் நாதன் கவிராயர் என்பவர்.

**நூல்பதிப்பு**

1889 இல் முதல் பதிப்பு பழனியாண்டி என்பவரால் வெளியிடப்பட்டது. கு.சுந்தரமூர்த்தி அவர்கள் ஆய்வுரையுடன் கழக வழியாக 1972 இல் மீண்டும் வெளியிடப்பட்டது.

**சுவாமிநாதம்**

சுவாமிநாதம் எனும் இந்நூலை இயற்றியவர் சுவாமி கவிராயர் என்பவர் ஆவார். சுப்பிரமணிய தேசிகர் என்பவர் மேலகரம் என்னும் ஊரினர். அவர் இளமையில் கல்லிடைக்குறிச்சியில் வாழ்ந்தவர். சுவாமி கவிராயரின் இரு மொழிப் புலமையையும் இலக்கண வன்மையையும் அறிந்து அவர் தூண்டுதலால் இவர் இந்நூல் இயற்றினார். இவர் மகனார் சிவசுப்பிரமணியன் என்பார். இவர் நாமதீப நிகண்டு, தொகை நிகண்டு என்பவற்றை இயற்றியவர். சுவாமி கவிராயரும் பொதிகை நிகண்டு ஒன்றை எழுதியுள்ளார்.

**நூல் அமைப்பு**

இரா. இளங்குமரன்,

> **“சுவாமிநாதம் ஒரு ஐந்திலக்கண நூல். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐந்து வகையாகப் பிரித்துக்கொண்டு ஆராய்கிறது. ஒவ்வொரு இயலும் மூன்று மூன்று இயல்களாகப் பிரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. நூலின் முற்பகுதியில் நூல்வழி என்ற தலைப்பில் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என்ற இரண்டும் விளக்கப்படுகிறது.**
>
> **எழுத்ததிகாரம்: எழுத்தாக்க மரபு, பத மரபு, புணர்ச்சி மரபு**
>
> **சொல்லதிகாரம்: பெயர்மரபு, வினை மரபு, எச்ச மரபு**
>
> **யாப்பதிகாரம் : உறுப்பு மரபு, பாவின மரபு, பிரபந்த மரபு**
>
> **அணியதிகாரம்: பொருளணிமரபு, சொல்லணி மரபு, அமைதி மரபு**
>
> **பிள்ளையார் வணக்க வெண்பா ஒன்று முதலில் உள்ளது. சிறப்புப் பாயிரம் பொதுப்பாயிரம் ஆகியவை 11 எண்சீர் விருத்தங்களை கொண்டுள்ளது. இப்பாயிரமும் சேர்த்து 201 எண்சீர் விருத்தங்கள் நூலில் இடம் பெற்றுள்ளன. அமைதி மரபு ஒரே ஒரு பா. அதன் இறுதியில் அமைதி மரபு முற்றும் என்றுளது. இதன் காலம் கி.பி.19 ஆம் நூற்றாண்டு”** [34].

என்று விளக்கியுள்ளார்.

**உரை**

சுவாமிநாதத்திற்கு விரிவுரை ஒன்றுளது. அது நூலில் முதல் 14 நூற்பாக்களுக்கே உள்ளது. கரந்தைத் தமிழ்ச் சங்கப் பொழிலின் வழியே

மேலும் சில நூற்பாக்களுக்கும் உரை கிடைத்துள்ளது. ஐந்து அதிகாரங்களுக்கும் உரை இருந்திருக்கக் கூடும் என்பதற்குச் சான்றுண்மை கூறுவர். இவ்வுரை இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

**சூழல்**

திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் சுப்பிரமணிய தேசிகர் வேண்டிக் கொண்டதற்கிணங்க இந்நூல் இயற்றப்பட்டதாகப் பாயிரத்தின் வழி தெரிகிறது.

**பதிப்பு**

சுவாமிநாதம் தனி நூலாகவும், சுவாமிநாதம் மூலமும் விருத்தியுரையும் தனிநூலாகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக வெளிவந்துள்ளன. முன்னதற்குப் பதிப்பாசிரியரும் உரையாசிரியரும், பின்னதற்குப் பதிப்பாசிரியரும் அறிஞர் செ.வை. சண்முகம் ஆவர். முன்னது வெளி வந்த ஆண்டு 1975, பின்னது வெளிவந்த ஆண்டு 1976.

தமிழ்ப் பொழிலில் சில பகுதிகளை வெளியிட்டவர் இ.கோவிந்தசாமிப்பிள்ளை. ஆண்டு 1924.

**சந்திராலோகம்**

சந்திராலோகம் என்பது வடமொழியில் அமைந்த அணியிலக்கண நூல்களுள் ஒன்று.

**நூலாசிரியர் வரலாறு**

சந்திராலோகத்தை உரை நடையாகத் திருத்தணிகை விசாகப் பெருமாளையர் மொழி பெயர்த்து, “அணியிலக்கணம்” எனப் பெயரிட்டு வழங்கினார். எடுத்துக்காட்டுகளைப் பாடலாக ஆக்கினார். இவ் இலக்கணத்தை நூற்பாவடிவில் ஆக்கியவர் முத்துசாமி ஐயங்கார் என்பார். இவர் இராமநாதபுரம் பெரும் புலவர் மு.இராகவ ஐயங்காரின் தந்தையார் ஆவர். இந்நூலின் மூலம் 1909 இல் மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்ப் பிரசுரம் இருபத்தெட்டாவதாய் வெளிவந்தது. இவ்விருவரும் பத்தொன்பதாம் நூற்றாண்டினர். முத்துசாமி ஐயங்கார் நூற்றுக் கவனகர் (சதாவதானி) என்பதும் இராமநாதபுர அரசவைப் புலவர் என்பதும் மு.இராகவ ஐயங்கார்க்கும் ஆசிரியராக இருந்தவர் என்பதும் அறியத்தக்கன.

**நூல் அமைப்பு**

சந்திராலோகம் 126 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. நம்மாழ்வாரை வாழ்த்தத் தொடங்கி உள்ள இந்நூல் மூன்றாம் நூற்பாவில் பொருளணிகள் நூறினையும் தொகுத்து உரைக்கிறது.

*“அணிதான் பொருள்சொல் எனவிரண் டவற்றுள்
பொருளணி ஒன்றே சிறப்பெனப் புகல்வா”*

என்று அணிகளை மரபுப்படி, பொருளணி, சொல்லணி என இருவகைப் படுத்தி, பொருளணி மட்டுமே சிறப்புடையது எனக் கூறுவது, தான் சொல்லணிக்கு இலக்கணம் வகுக்காமைக்குக் காரணம் காட்டுவதுபோல் அமைகிறது.

தாம் கூறப்போகும் அணிகள் நூறு என்பதை மூன்றாம் நூற்பாவில் கூறுவதுடன் அந்நூறு அணிகளின் பெயர்களையும் முறையே கூறுகிறார். அம்முறையே முறையாய் இலக்கணமும் கூறி முடிக்கிறார். இந்நூல் கி.பி. 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

**பதிப்பு**

1979 இல் ஐதராபாத்தில் நிகழ்ந்த அனைத்திந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கில் முனைவர் ச.வே.சுப்பிரமணியம் அவர்களால் வெளியிடப்பட்ட நூற்றொகுதியில் அடங்கியது சந்திராலோகம். இவ்வகையில் இதனை இரண்டாம் பதிப்பு எனலாம். நூலில் தமிழில் அணி இலக்கணம் (1-35) முந்நூல்களின் அறிமுகம் (36-62) என்பவை விரிந்த அளவில் இடம் பெற்றுள்ளன. குவலயானந்தம் 1 , சந்திராலோகம், குவலயானந்தம் 2, என்னும் மூன்று நூல்களின் மூலங்களும் இடம் பெற்றுள்ளன. தமிழ் வடமொழி அணிகள், அணி இலக்கணங்கள் கூறும் அணிகள் முதலிய பின்னிணைப்புகளும் கொண்டுள்ளன.

**குவலயானந்தம் - 1**

குவலயானந்தம் என்னும் பெயர் விளங்கும் அணியியல் நூல்கள் இரண்டனுள் இதுவும் ஒன்று. இதனை இயற்றியவர் “மாணிக்க வாசகன் எனும் ஞானதேசிகச் சிவயோகி” என்றும் “வாதவூரன்” என்னும் சிறப்புப் பாயிரப் பாடல்களால் சொல்லப்படுகிறார்.

**நூலாசிரியர் வரலாறு**

ஞானதேசிகச் சிவயோகி என்றும், வாதவூரன் என்னும் பெயர்களும், “சிவன் உபதேசம் மனதினில் உணர்ந்தவர்” என்பதும், “கூடல் வாழும் கொற்றவன் மீனத்துவசக் குரிசில் நண்பாய்த் தண்டமிழால் விளக்கும் என வாதவூரன் சாற்றினன்” என்பதும் நமக்கு மாணிக்கவாசகராம் வாதவூரரையே நினைவூட்டுகின்றன. இவர் வாதவூரராகவும் இருக்கலாம், மாணிக்கவாசகர் என்னும் பெயரினராகவும் இருக்கலாம்.

**நூல் அமைப்பு**

குவலயானந்தம் கடவுள் வணக்கமாக மூத்த பிள்ளையார், சிவபெருமான் வாழ்த்துகளை முதற்கண் கொண்டுள்ளது. சிறப்புப் பாயிரமாக அகவல் 1, பதினான்கு சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம் 1, எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 1, ஆக மூன்று பாடல்களைக் கொண்டுள்ளது. நூல் உறுப்பியல், அணியியல், சித்திரவியல் என மூவியல்களைக் கொண்டுள்ளது. நூற்பாவால் அமைந்த இந்நூலில் முறையே 150, 120, 29 என 299 நூற்பாக்கள் உள்ளன.

**நூல் எழுந்த காலம்**

மேற்கூறிய காரணங்களால் காலம் பற்றிய தெளிந்த வரையறை கூறமுடியவில்லை. சிலர் கி.பி.19ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர். இந்நூலிற்கு நூலாசிரியரே உரையும் எழுதியுள்ளார்.

**சூழல்**

“வரகுண பாண்டியன் என்பான் வேண்டிக் கொண்ட படி, வடமொழி அலங்கார நூலாகிய மீமாங்கிசையின் பொருள் உணர்ந்து அகத்திய முனிவர் இயற்றிய சிவவியாகரணம் என்னும் நூலை முதல் நூலாகக் கொண்டு மாணிக்கவாசக சுவாமிகளால் குவலயானந்தம் என்ற பெயருடன் இலக்கணத்திற்கு இலக்கியமும் உரையுடன் இயற்றப்பட்டது” எனச் சிறப்புப் பாயிரப் பாடல்களாலும் உரையாலும் அறியமுடிகிறது.

**பதிப்பு**

திருமயிலை அம்மை ஆண்டியப்பக் கிராமணி குமரர் அண்ணாசாமி உபாத்தியாயர் இதனைப் படி எடுத்தவர் என்பதும், கைப்படியை ஏட்டுப்படியுடன் ஒப்பிட்டவர், சாமிநாதையர் நூலகத் துணைப் பாதுகாவலர் மு.கோ. இராமன் என்பதும் ஆய்வுரையுடன் முதற்கண் அச்சிட்டவர் அறிஞர் ச.வே. சுப்பிரமணியனார் என்பதும் அறியத்தக்கன. வெளிவந்த ஆண்டு 1979.

**குவலயானந்தம் -2**

காளிதாசரால் இயற்றப்பட்ட வடமொழிச் சந்திராலோகத்திற்கு உரையெழுதினார் அப்பைய தீட்சிதர் (கி.பி.1520 – 1593). அவ்வுரை நூலுக்குக் குவலயானந்தம் எனப் பெயரிட்டு வழங்கினார். அதனை எட்டையபுரம் அரசவை வடமொழிப்புலவர் சங்கர நாராயண சாத்திரியார் 1889 இல் தமிழ்ச் செய்யுள் வடிவில் அவ்வரசவைக் கவிஞராக விளங்கிய முகவூர் மீனாட்சி சுந்தரக்கவிராயர் செய்தார்.

**நூல் அமைப்பு**

குவலயானந்தம் கட்டளைக் கலித்துறை யாப்பால் அமைந்தது. 167 பாடல்களையுடையது. தேவி வணக்கத்தை முதற்கண் கொண்டுள்ளது. உவமை முதல் ஏதுவணி முடிய இலக்கணமும் எடுத்துக்காட்டும் உள்ளன. சுவை முதல் எடுத்துக்காட்டும் பிரமாணம் முடியவுள்ள 15 அணிகளுக்குச் சான்று காட்டப்படவில்லை. சேர்வை முதல் ஒரே சொல்லை அணுகி விளங்கும் கலவை முடியவுள்ள 5 அணிகளுக்கு உரைநடையிலேயே இலக்கணம் உள்ளது.

கட்டளைக் கலித்துறை ஒவ்வொன்றும் எட்டையபுரம் மன்னரை முன்னிலைப் படுத்திப் பாடுவதாய் அமைந்துள்ளது.

**பதிப்பு**

இந்நூல் எட்டையபுர மன்னர் சகத்வீர ராமயவேங்கடேசுவர எட்டப்பர் சிறிய தந்தையாரும் இளவரசருமாகிய வேங்கடேசுவர எட்டுப் பாண்டியன் வேண்டுதலால் உ.வே.சீனிவாசாசாரியார், ஆனூர் சிங்காரவேலு முதலியார் ஆகியவர்களால் 1895 இல் பதிப்பிக்கப்பட்டது. அதன் இரண்டாம் பதிப்பு 1979 இல் ச.வே.சுப்பிரமணியரால் கொண்டு வரப்பட்டது.

**அறுவகை இலக்கணம்**

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களோடு ஆறாவதாகப் புலமையிலக்கணம் என்ற ஒன்றையும் சேர்த்து அறுவகையிலக்கணம் என்ற நூலை வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார் இயற்றியுள்ளார்.

**நூலாசிரியர் வரலாறு**

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் திருநெல்வேலியில் 22.11.1839 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம் பிள்ளைப் பெயர் சங்கரலிங்கம் என்பது. நெல்லையைச் சேர்ந்த இவர் வள்ளலாரொடும் தொடர்பு கொண்டிருந்தார். விழுப்புரத்தையடுத்த திருவாமாத்தூரில் ஒடுக்கங் கொண்டார். இவர் தம் வழிமுறையர் அனைவரும் இவர் ஏட்டுச்சுவடியைக் காக்குமளவில் நில்லாமல் பாட்டுத் திறத்திலும் ஓங்கி வந்திருத்தல் உவகைக்குரிய செய்தியாம். இவர்தம் பெயரரும் கொள்ளுப் பெயரரும் வாழும் புலவர்கள். முன்னவர் முருகதாச ஐயர், பின்னவர் தி.மு.சங்கரலிங்கம்.

**நூல் அமைப்பு**

அறுவகை இலக்கண முதற்பகுதி காப்பும், பாயிரமுமாம் 12 பாடல்களையுடையது. இறுதியில் ஒரு கலித்துறைப்பா.

எழுத்திலக்கணம் (165), சொல்லிலக்கணம் (112), பொருளிலக்கணம் (122), யாப்பிலக்கணம் (134), அணியிலக்கணம் (109), புலமை இலக்கணம் (144), ஆக 799 நூற்பாக்களில் இந்நூல் யாக்கப்பட்டுள்ளது. இந்நூல் கி.பி. 19 ஆம்நூற்றாண்டைச் சார்ந்தது.

**பதிப்பு**

அறுவகை இலக்கணம் அட்டாவதானம் பூவை. கலியாணசுந்தர முதலியாரால் 1893 இல் பதிப்பிக்கப்பட்டது.

சிரவை ஆதீனம் கௌமாரமடாலயம் தவத்திரு சுந்தரம் அடிகளார் பொன்விழா வெளியீடாக 1978 இல் வெளிவந்தது.

**தொகுப்புரை**

மொழியில் இலக்கியம், இலக்கணம் எவையாயினும் அவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட நூல்கள் எழும் போது அவற்றினை முறைப்படுத்தி வகைப்படுத்துதல் என்பது மிகவும் அவசியமாகிறது. இன்று வழக்கில் உள்ள நூல்களில் விளக்கப்பட்டுள்ள தமிழ் இலக்கணக் கூறுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. எழுத்து இலக்கணம்
2. சொல் இலக்கணம்
3. பொருள் இலக்கணம்
4. யாப்பு இலக்கணம்
5. அணி இலக்கணம்
6. பாட்டியல் இலக்கணம்
7. அகப் பொருள் இலக்கணம்
8. புறப் பொருள் இலக்கணம்
9. புலமை இலக்கணம்
10. சொற்பொருள் விளக்க இலக்கணம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, ஆகிய ஐந்து இலக்கணங்களும் தொன்று தொட்டு வழங்கி வருவன. பொருள் இலக்கணத்தின் இரு கூறுகள் அக இலக்கணம், புற இலக்கணம் என்னும் பெயர்களோடு தனித்தனித் துறைகளாகப் பிற்காலத்தில் செழித்து வளர்ந்தன. இலக்கிய வகைகளின் இலக்கணம் கூறும் நூல்கள் பாட்டியல் எனப் பெற்றன. நூல் யாக்கும் முறையும் நூலாசிரியன் பண்பும் அரங்கேற்றவையும் இன்னோரன்ன கூறுகள் பிறவற்றையும் புலமை இலக்கணத்தில் அடக்கலாம். தொல்காப்பியர் இடை,

உரிச் சொற்களுக்குக் கூறியுள்ள விளக்கங்கள் பிற்காலத்தில் நிகண்டு நூல் ஆக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தன. பல நிகண்டுகள் எழுந்தன.

தமிழ் மொழியில் தொல்காப்பியம் காலத்திற்கு முன்பிருந்து, தற்காலம் வரை தோன்றிய பல இலக்கண நூல்கள் கடல்கோளாலும், பிற சூழ்நிலைகளாலும் அழிந்தன. அவற்றின் எச்சமிச்சமாகக் கிடைக்கின்ற, தற்போது வழக்கில் உள்ளனவும், வழக்கிழந்தனவையாகப் பெயரளவில் உள்ளனவும் இவ்வியலில் தொகுக்கப்பட்டு, அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. விரிவஞ்சி அவற்றுள் சில நூல்களுக்கு மட்டும் நூற்குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

யாப்பருங்கல விருத்தியுரையில் பல இலக்கண நூல்கள் சுட்டப்பட்டுள்ளன. உரையாசிரியர்கள் மூலமாகவும் பல இலக்கண நூல்கள் அறியமுடிகிறது. மறைந்து போன தமிழ் நூல்கள் என்ற நூலில் மயிலை. சீனி வேங்கடசாமி அவர்கள் பலநூல்களைக் குறிப்பிட்டுள்ளார். சோம. இளவரசு அவர்களும், புலவர் இரா. இளங்குமரன் அவர்களும் இலக்கணவரலாறு என்ற நூல்களில் பல இலக்கண நூல்களைச் சுட்டியிருக்கின்றனர்.

எழுத்து சொல்லிலக்கணக் கோட்பாடுகள் வரலாற்று நோக்கு என்னும் தலைப்பிலான இவ்வாய்வேட்டிற்கு அவ்விலக்கணங்களின் வரலாறு இன்றியமையாததால் இவ்வியலில் தமிழில் தோன்றிய இலக்கணநூல்கள் தொகுத்துக் கூறப்பட்டன. இவ்வியல் மூலமாகத் தமிழ் இலக்கணநூல்களின் பெயர்களையும், தமிழ் மொழியின் இலக்கண வளர்ச்சியையும் அறியலாம்.

## சான்றெண்விளக்கம்

1. சு. சக்திவேல், தமிழ் மொழி வரலாறு, ப.32
2. எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள், ப.15
3. எம்மார். அடைக்கலசாமி, தமிழ் இலக்கிய வரலாறு, ப.1
4. தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.56
5. இரா. கண்ணன், சிற்றிலக்கிய ஆராய்ச்சி, முதல் தொகுதி, ப.18
6. சி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, பக்.75,76
7. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப.187
8. சு.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள், ப.8
9. இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் (மூலமும் அரும்பத உரையும்) அடியார்க்கு நல்லர் உரையுடன், செய்யுள் - 3:(12,13)
10. பேரகத்தியத் திரட்டு, மூலமும் உரையும், ச. பவானந்தம்பிள்ளை உரை, பேரகத்திய மேற்கோள் சூத்திரம்-1
11. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணர் உரை, பாயிரம் - 1
12. செ.வை.சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப.34
13. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள், 2009:91
14. மேலது, ப.91
15. இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, 2009:203
16. நன்னூல் மயிலைநாதர் உரை, ப.ஆ., உ.வே.சா., 1995:26
17. மயிலை சீனி வேங்கடசாமியின் மறைந்து போன தமிழ் நூல்கள், 2001:212-214
18. யாப்பருங்கல விருத்தியுரை, ப.93,95
19. தொல்., செய்யுள், இளம்பூரணர், 165ஆம் நூற்பா உரை
20. மயிலை சீனி வேங்கடசாமியின் மறைந்து போன தமிழ் நூல்கள், 2001:240
21. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் இலக்கண நூல்கள், 2009:124
22. இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, 2009:230,231
23. மேலது, ப.234
24. இரா. கண்ணன், இந்திரகாளியம், 2003:41,42
25. மேலது, ப.33
26. மேலது, பக்.31,32,33
27. இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, 2009:268
28. இரா. கண்ணன், அணியிலக்கண வரலாறு, 2003:பக்.50,51

29. இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, 2009:320

30. இரா. கண்ணன், நவநீதப் பாட்டியல், ப.3

31. இரா. கண்ணன், அணியிலக்கண வரலாறு, 2003:ப.52

32. இரா. இளங்குமரன், இலக்கண வரலாறு, 2009:381

33. மேலது, 2009:392

34. மேலது, 2009:404